வாராந்த சஞ்சிகை

# சுடர் ஒளி

மார்ச் 04 – 10 2015

பக்கம் 24

விலை 30/-



## மகளிர் நாள் வாழ்த்துக்கள்

# புதுமைப் பெண்களும் புதிய யுகமும்

1717 FOLLOW US www.mobitel.lk



மொபிடெல் mTicketing சேவை

365 நா களும் 365 இனை அழைத்து
புகையிரத பயணச் சீட்டுக்களை ஒதுக்கிக் கொள்ளுங்கள்

ශ්‍රී ලංකා දුම්රිය සේවය
இலங்கை புகையிரத சேவை
Sri Lanka Railways

Sri Lanka Telecom
Mobitel

TRC/EA/ADT/Mobitel/13-20 *நிபந்தனைகளுக்குட்பட்டவை.




# வெட்கப்பட வேண்டியது யார்?

**-சி. விமலன்**

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் மெல்பேர்ண் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது போட்டியில் இங்கிலாந்து வீரர் அண்டர்சனின் 'ரன் அவுட்' ஆட்டமிழப்பு சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

போட்டியின் 42ஆவது ஓவரில் அவுஸ்ரேலிய வேகப்பந்துவீச்சாளர் ஹஸ்லேவூட் பந்துவீச்சில் இங்கிலாந்து வீரர் ஜேம்ஸ் ரெய்லருக்கு மைதான நடுவராகக் கடமையாற்றிய பாகிஸ்தானின் அலீம் டார் LBW ஆட்டமிழப்பு வழங்க அந்தக்கணத்தில் எதிர்முனையில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த அண்டர்சன் ஒரு ஓட்டத்தினை பெற்றுக்கொள்ளும் முகமாக எதிர் முனையான விக்கெட் காப்பாளரின் திசை நோக்கி ஓடும் பொழுது களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த மக்ஸ்வெல் பந்தை விக்கெட்டுக்கு எறிய அந்த 'ரன் அவுட்' ஏற்பட்டிருந்தது.

இந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறையில் (Umpire Decision Review System) Hotspot தொழில் நுட்பம் பாவிக்கப்படாமல் Snicko meter தொழில் நுட்பத்தை மட்டும் பயன்படுத்தி முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தவகையில் 98 ஓட்டங்களில் ஆட்டமிழக்காமல் ஆடிக் கொண்டிருந்த ஜேம்ஸ் ரெய்லர் தனக்கு வழங்கப்பட்ட LBW ஆட்டமிழப்பை மறுபரிசீலனை செய்யுமாறு கோரி இருந்தார்.

இதனால் மூன்றாவது நடுவருக்கு முடிவு விடப்பட்ட பொழுது பந்து விக்கெட்டை விட்டு வெளியே செல்வது தெளிவாகத் தெரிந்ததால் அவர் LBW முறையில் ஆட்டமிழந்ததாக அறிவித்த தீர்ப்பு த்வறு என்று தெரியவந்தது. இதனை அடுத்து 'ரன் அவுட்' மூலம் ஆட்டமிழந்த அண்டர்சனின் முடிவு மூன்றாவது நடுவரிடம் விடப்பட்ட போது அது ஆட்டமிழப்புத்தான் என்பது உறுதியானதால் மைதான நடுவராக கடமையாற்றிய இலங்கையின் குமார் தர்மசேன அண்டர்சன்



ஆட்டமிழந்ததாக அறிவித்தார்.

இதையடுத்து ஏற்பட்ட சர்ச்சைகளுக்குப் பின்னர் ஐசிசி 'ஜேம்ஸ் ரெய்லருக்கு LBW கொடுக்கப்பட்ட நிலையில் அதன் பிறகு அந்தப் பந்தில் மேற்கொண்டு ஓட்டம் எடுக்கவோ அல்லது ஆட்டமிழப்புக்கோ வாய்ப்பு இல்லை. அதாவது அந்தப்பந்து செல்லுபடியற்ற பந்தாகவே கருதப்படுமென்று தெளிவுபடுத்தி அண் டர்சனுக்கு வழங்கப்பட்ட 'ரன் அவுட்' தவறுதான் எனவும் ஒப்புக் கொண்டுள்ளது.

கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீச்சாளரும் விக்கெட் காப்பாளரும் LBW ஆட்டமிழப்பு கோரும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஆட்டமிழப்பு வழங்கப்படுவதில்லை. LBW ஆட்டமிழப்பு கோரி அது வழங்கப்படாத தருணங்களில் துடுப்பாட்ட வீரரை 'ரன் அவுட்' ஆக்கிய சம்பவங்கள் அபூர்வமாக நடைபெற்றே இருக்கின்றன. அந்தக்கால கட்டத்தில் நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறை காணப்படாததால் அது குறித்த சர்ச்சை ஏற்படவில்லை.

ஆனால் தற்போது ஐசிசியின் நடுவர்களின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் முறையை கொண்டு அண்டர்சனுக்கு வழங்கிய ஆட்டமிழப்பை நோக்குகையில் மேற்படி ஐசிசியின் கருத்து பொருத்தமற்ற ஒன்றாகவும் முன்னுக்குப் பின் முரண் ஆனதாகவுமே எனக்குத் தோன்றுகின்றது.

நடுவர்களின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் தொழில்நுட்பம் நடைமுறைப்படுத்தப்படாத போட்டிகளிலேயே 'ரன் அவுட்' தவிர ஏனைய விதத்தில் ஒரு வீரர் ஆட்டமிழந்தால் அவர் ஆட்டமிழந்து மைதானத்தை விட்டுச் செல்வதற்கு முன் ஆட்டமிழப்புக்குரிய பந்துவீச்சு மூன்றாவது நடுவரிடம் செல்லுபடியற்ற பந்தா என்பதைத் தீர்மானிக்கும் பொருட்டு ஒரு தரம் விடப்படுகின்ற நிலையிலும் உலகக் கிண்ணத் தொடரில் நடுவர்களின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் முறை உள்ள நிலையிலும் ஐசிசி LBW கொடுக்கப்பட்ட நிலையில் அதன் பிறகு அந்தப் பந்தில் மேற்கொண்டு ஓட்டம் எடுக்கவோ அல்லது ஆட்டமிழப்புக்கோ வாய்ப்பு இல்லை. அதாவது அந்தப்பந்து செல்லுபடியற்ற பந்தாகவே கருதப்படுமென்று எவ்வளவு தூரம் உறுதியாகக் கணிப்பிட்டுச் சொல்ல முடியும்? என்ற கேள்வி எழுகின்றது.

எனவே அண்டர்சனுக்கு கொடுக்கப்பட்ட 'ரன்அவுட்' ஆட்டமிழப்பு ஐசிசியின் வரன்முறைப்படுத்தப்பட்ட நடுவர்களின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் விதி முறைக்கு அமைவாகவே வழங்கப்பட்டுள்ளது என்று தோன்றுகின்றது.

அதேசமயம் ஜேம்ஸ் ரெய்லருக்கு மைதான நடுவர் மூலம் வழங்கப்பட்ட LBW ஆட்டமிழப்பு சரிதான் என்றால் அண்டர்சனுக்கு 'ரன் அவுட்' நடுவர்களால் வழங்கப்பட்டிருக்க மாட்டாது. ஐசிசி LBW கொடுக்கப்பட்ட நிலையில் அதன் பிறகு அந்தப் பந்தில் மேற்கொண்டு ஓட்டம் எடுக்கவோ அல்லது ஆட்டமிழப்புக்கோ வாய்ப்பு இல்லை என்று கூறுவதைப் பார்க்கும் பொழுது மைதான நடுவர்களான அலீம் டாரும் குமார் தர்மசேனவும் ஒரே நேரத்தில் LBW ஆட்டமிழப்பினையும் 'ரன் அவுட்' இனையும் வழங்கியது போலவும் ஒரே நேரத்தில் இரு முனையில் உள்ள வீரர்களும் ஆட்டமிழக்க முடியாது என்ற அடிப்படை அறிவுகூட இல்லாமலும் கடமையாற்ற வந்தவர்கள் போல் அல்லவா இருக்கின்றது.

கிரிக்கெட்டில் பந்துவீச்சாளர்கள் தாம் பந்துவீசும் போது தமது முனையில் உள்ள துடுப்பாட்ட வீரர் கிறீசை விட்டு வெளியில் நிற்கும் பொழுது உடனடியாக Bails தட்டி Run Out ஆக்கும் விதி இன்று அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதனோடு ஒப்பிடுகையில் நடுவர்களின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் முறை அமுல்படுத்தப்பட்டுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளில் மக்ஸ்வெல் செய்த 'ரன் அவுட்' நியாயமானதும் நேர்மையானதும் என்றே கருதத் தோன்றுகின்றது.

ஆனால் அண்டர்சன் விடயத்தில் அந்தக் கணத்தில் மக்ஸ்வெல் இதெல்லாம் சிந்தித்துத்தான் 'ரன் அவுட்' ஆக்கினாரா என்பது அவருக்கு மட்டுமே வெளிச்சம். நெருக்கடியான சூழ்நிலைகளில் விளையாடுகின்ற பொழுது சில விடயங்கள் குறித்து இது சாத்தியமா இல்லையா என்பது பற்றி சிந்தித்து செயற்பட வீரர்களுக்கு அவகாசமிருப்பதில்லை. ஒருவேளை ஜேம்ஸ் ரெயிலரின் ஆட்டமிழப்பு மூன்றாவது நடுவர் மூலம் தவறென்று தெரிந்தது போல் அண்டர்சனும் 'ரன் அவுட்' ஆகாமல் இருந்திருந்தால் போட்டி தொடர்ந்து நடைபெற்றுத் தானே இருந்திருக்கும்.

எனவே உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடும் வீரர்கள் இந்த முறை மைதான நடுவர்களின் முடிவை மறுபரிசீலனை செய்யலாம் என்பதை அறிந்ததனால் கிரிக்கெட் உணர்வில்லாமல் மக்ஸ்வெல் செயற்பட்டாரென்று அவர் மீது குற்றஞ்சாட்ட முடியாது.

மறுபுறம் நொக்கவுட் சுற்றுக்களில் போட்டி சமநிலையில் முடிந்தால் குழுநிலைப் போட்டிகளில் அவ்விரு அணிகளில் வெற்றி பெற்ற அணி வென்றதாகக் கருதப்படும் என்பது போன்ற சில நடைமுறைகளை அமுல்படுத்தப் போவதாக உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன்னரேயே ஐசிசி தெரிவித்திருந்தது.

ஆனால் போட்டியில் அண்டர்சனுக்கு வழங்கப்பட்ட 'ரன் அவுட்' போன்றதொரு சூழ்நிலை ஏற்பட்டால் அதற்கு எவ்வாறானதொரு தீர்வினை முன்வைக்க வேண்டும் என்பதை தீர்க்க தரிசனத்துடனான பார்வையில் தான் சிந்திக்கத் தவறியதால் தனக்கு இத்தகைய தலைகுனிவு ஏற்பட்டதாக ஐசிசி கருதினால் உண்மையில் அதற்கு வெட்கப்பட வேண்டியது சர்வதேச கிரிக்கெட்டில் புதிய விதிகளை உருவாக்கும் இங்கிலாந்தில் உள்ள பாரம்பரிய கழகமான MCC ( Marylebone Cricket Club) தானே ஒழிய அதனை நடைமுறைப்படுத்திய ஐசிசி அல்ல.

# மீண்டும் வெடிக்கும் மக்கள் புரட்சி

- கோமேஸ்

“Mக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்” இது முன்னால் யாழ்.பல்கலைக்கழக மாணவன் தியாக தீபம் திலீபன் அவர்கள் உண்ணா நோன்பு இருக்கும் போது உணர்வுடன் கூறியவை. எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் நினைவை விட்டகலா வரிகளை மீண்டும் நினைவில் நிறுத்தி விட்டுச் சென்றுள்ளார்கள் யாழ்.பல்கலைக்கழக சமூகம்.

அண்மைக் காலமாக மைத்திரியின் மாற்றத்தால் மாறிய ஒரே ஒரு மாற்றம் இதுவாகத்தான் இருக்க முடியும்.

வடக்கில் குடிநீர் பிரச்சினையுடன் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் படிப்படியாக மகேஸ்வரி நிதியம்.காணாமல்




போன உறவுகளின் போராட்டம். இப்படியாக வளர்ச்சிய டைந்து இன்று பல்கலைச் சமூகத்தின் மக்கள் புரட்சியாக மாறிவிட்டது என்று தான் கூறவேண்டும்.

அதாவது மனிதாபிமான யுத்தம் என்று கூறிக்கொண்டு தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைக் கொடூரமான முறையில் அடக்கப்பட்டதை தொடர்ந்து வடக்குப் பகுதியில் மக்கள் போராட் டங்கள் கூட அந்தக் காலப்பகுதியில் ஆட்சியிலிருந்த மஹிந்த தலைமையி லான அரசினால் பயங்கரவாத நடவடிக்கையாகவே பார்க்கப்பட்டு போராட்டம் நடத்தியவர்கள் மீது துப்பாக் கிப் பிரயோகங்களும் பயங்கரவாத சட்டங்களும் தமிழர்கள் மீது தொடர்ந்து பாய்ந்து கொண்டுதான் இருந்தது.

இதனால் மக்கள் போராட்டங்கள் நடத்த அச்சம் கொண்டனர். இதனால் அந்தக் காலப்பகுதியில் அரசியல் கட்சிகளினாலும் பொது அமைப்புக்களாலும் நடத்தப்பட்ட போராட்டங்களில் மக்களின் பங்களிப்பு குறைவாகவே காணப்பட்டது.

ஆனால் தற்போது மாற்றமடையத் தொடங்கியுள்ளது. அதாவது மக்களே போராட்டங்களை ஒழுங்கமைப்புச் செய்து போராட்டம் நடத்தும் காலம் உருவாகியுள்ளமையினை காணலாம்.

அதற்குச் சிறந்த உதாரணமாக யாழ். பல்கலைக்கழகத்தால் முன்னெடுக்கப் பட்ட போராட்டத்தினை காணலாம்.

புதிய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்று இரண்டு மாதங்கள் முடிவடையப் போகின்றது. ஆனால் உருப்படியாக எந்தக் காரியங்களையும் செய்யவில்லை என்றுதான் கூற வேண்டும்.

அதாவது கடந்த அரசாங்கத்தில் இருந்தவர்கள் வெள்ளை வான் கடத்தல்கள், கொலைகள் என்பவற்றில் நேரடியாக ஈடுபட்டது என்று அந்த அரசில் இருந்த அமைச்சர் ஒருவரே சாட்சியம் வழங்கினார். கூடவே ஜனாதிபதிகூட ஆட்சிக்கு வர முன்னர் மஹிந்த தலைமையிலான அரசு ஊழல்களில் ஈடுபட்டது என்று பரப்புரை மேடைகளில் கூறினார்.




ஆனால் அது தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவும் இல்லை, விசாரணை செய்யப்படவும் இல்லை.

அது மட்டும் அல்லாமல் உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் பிடுங்கி வைக்கப்பட்டுள்ள நிலங்கள், அரசியல் கைதிகளின் விடுதலை. காணாமல் போனவர்களின் நிலை தொடர்பாக இதுவரை ஆக்க பூர்வமான செயற்பாடுகளிலும் இறங்கவில்லை என்ற சந்தேகம் நிலவுகிறது.

**“மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்” இது முன்னால் யாழ். பல்கலைக்கழக மாணவன் தியாக தீபம் திலீபன் அவர்கள் உண்ணா நோன்பு இருக் கும் போது உணர்வுடன் கூறியவை.**

உண்மையில் இது மைத்திரி அரசின் ராஜதந்திரமாகவே காணப்படுகிறது. அதாவது மைத்திரி சிங்கள மக்களின் வாக்குகளினால் ஆட்சிக் கட்டிலில் ஏறவில்லை. இது எல்லோரும் அறிந்த உண்மை. எனவே அடுத்த முறை இடம்பெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும் பான்மையுடன் ஆட்சியமைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்.

எனவே, சிங்கள மக்களுடைய வாக்குகளை எப்படியாவது கவரும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். அதற்கான காய் நகர்த்தல்களை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டார்.

அதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கையே சர்வதேச விசாரணை வேண்டாம் நாங்கள் உள்நாட்டில் விசாரணை செய்கின்றோம் என்ற கொள்கையில் விடாப்பிடியாக இருக்கின்றார். இதற்கும் சிங்கள மக்களின் வாக்குகளுக்கும் என்ன தொடர்பு என்று பார்த்தால்



தேர்தல் காலங்களில் மஹிந்த ராஜபக்ஷவை மின்சார கதிரையில் அமர வைக்க எதிர்க் கட்சிகள் முயல் கின்றன என அப்போதைய ஆளும் கட்சிகளும் இனவாத அமைப்புக் களும் கூக்குரல் இட்டன. அதனை நம்பி சிங்கள மக்களும் வாக்குகளை மஹிந்த அரசுக்கு வழங்கினார்கள். காலம் செய்த கோலத்தால் நடைபெற்று முடிந்த தேர்தலில் மண்ணைக் கவ்வினார் மஹிந்த. இதனை சிங்கள மக்கள் சற்றும் எதிர்பாக்கவில்லை. இவ்வாறான நிலையில் நடைபெறப்போகும் தேர்த லுக்கு முன்னர் சர்வதேச விசாரணை என்ற ஒன்றை இல்லாமல் செய்து உள்நாட்டு விசாரணை என்ற ரீதியில் காய்களை நகர்த்த தொடங்கி அதில் அவர் வெற்றியும் கண்டுவிட்டார். இதன்மூலம் சிங்கள மக்களின் வாக்குகளையும் அள்ளிவிட்டார்.

தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசு நீண்ட காலமாகக் காணப்படும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஆக்க பூர்வமான தீர்வுகள்ள வழங்கவில்லை. குறிப்பாகச் சொல்லப் போனால் மீள்குடியேற்றம்,அரசியல் கைதிகளின் விடுதலை, காணமல் போன உறவுகளின் கதை போன்றவற்றைக் கணக்கில் எடுப்பதாகத் தெரியவில்லை. அப்படி எதையாவது கொடுத்து சிங்கள மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கக் கூடாது என்ற கொள்கையில் இருந்து வருகின்றதைக் காணக்கூடியதாக உள்ளது.

அவ்வாறன ஒரு நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருந்த சர்வதேச விசாரணையினை தள்ளிப்போட்டு சிங்கள அரசுக்கு ஒருவாய்ப்பைக் கொடுத்து தமிழ் மக்களை ஏமாற்ற நினைத்தது. ஆனால் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. அதன் ஒரு ஆரம்பகட்டமாக எந்தவிதமான அரசியல் பின்னணி இல்லாமால் ஆயிரக் கணக்கான உறவுகள் ஒன்றினைந்து பல்கலையில் மீண்டும் ஒரு பொங்கு தமிழாய் பொங்கி தமிழ் மக்கள் உள்நாட்டு விசாரணை என்ற மாயையினை நம்புவதற்குத் தயாரில்லை என்ற செய்தியை சர்வதேசத்துக்கு கூறியிருக்கிறார்கள்.

இந்தப் போராட்டம் ஆரம்பமே தவிர முடிவல்ல.

-சதீஷ் கிருஷ்ணபிள்ளை



# திணிக்கப்பட்ட தீர்வுகள்

இந்த மேற்குலகம் இருக்கிறதே, அதன் இராஜதந்திரம் விசித்திரமானது. ஒரு நாட்டைப் பிடிக்கவில்லையா? அந்த நாட்டை இல்லாதொழிக்க முனையும். அதற்காக பல வழிகளை அனுசரிக்கும்.

அழிக்க விரும்பும் நாடு பலசாலியாக இருந்து விட்டால் போதும். அதற்கு எதிரியாகத் திகழும் நாடொன்றை வைத்து காரியத்தை நிறைவேற்ற முனையும். பலசாலி நாட்டின் ஆற்றல், சிறிய நாட்டின் பலவீனம் என்பதைப் பற்றியெல்லாம் மேற்குலகுக்கு கவலையில்லை.

சிறிய நாடு சிதைந்தாலென்ன, இல்லா தொழிந்தால் என்ன, பலசாலிக்கு சவால் விடுக்க முனைந்தால் போதும். இந்த நோக்கத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கும்.

பலசாலிக்கு எதிராக சிறிய நாட்டைத் திருப்பி விடும் முயற்சியில் ஆயுதமோதல் ஏற்படலாம். அந்தச் சமயத்தில், சிறிய நாட்டின் மனித உரிமைகள் பற்றியும் பலசாலியின் மனித உரிமை மீறல்கள் பற்றியும் மேற்குலகம் பேசும்.

பிரச்சினை எல்லை மீறிச் செல்லும் சமயத்தில், சமாதான உடன்படிக்கைகளைத் திணிக்கும். தம்மை ஒட்டுமொத்த உலகின் பாதுகாவலனாகச் சித்தரித்துக் கொள்ள முனையும்.

நெருக்கடியைத் தீர்க்கின்ற ஆற்றல் இல்லாத சமாதான உடன்படிக்கை முறிந்து போகும் சந்தர்ப்பத்தில், பலசாலியை வில்லனாக சித்தரிப்பது மேற்குலகின் இராஜதந்திரம்.

ரஷ்யா என்ற ஜாம்பவானின் காலடியில் உள்ள உக்ரேனிய பிரச்சினையும் இதனைப் போன்றது தான். உக்ரேனைப் பயன்படுத்தி ரஷ்யாவை இல்லாதொழிப்பது மேற்குலகின் நோக்கம்.

இதற்காக முதலில் மொழி என்ற ஆயுதம் பிரயோகிக்கப்பட்டது. கிழக்கில் ரஷ்யாவையும், மேற்கில் ஐரோப்பாவையும் கொண்டுள்ள உக்ரேன்.

இங்கு உக்ரேனிய மொழி பேசுபவர்கள் மேற்கிலும், ரஷ்ய மொழி பேசுபவர்கள் கிழக்கிலும் செறிந்துள்ளனர். இந்த மக்கள் மத்தியில் மொழி என்பது உணர்வுபூர்வமான விடயம்.

இதன் காரணமாக, மொழியின் அடிப்படையில் உக்ரேனிய தேசியவாதத்தைத் தூண்டி விடுவதன் மூலம், மேற்கில் வாழும் உக்ரேனியர்களை கிழக்கில் செறிந்துள்ள ரஷ்ய வம்சாவளிகளுக்கு எதிராக திருப்பி விட்டமை மேற்குலகின் சாணக்கியம்.

மொழி என்ற உணர்வின் அடிப்படையில் மேற்கில் நிகழ்ந்த ஆர்ப்பாட்டங்களுக்கு ஜனநாயகத்துக்கான போராட்டம் என்ற அடைமொழியிட்டு, அதனை ரஷ்ய சார்புடைய உக்ரேனிய தலைவருக்கு எதிராக திருப்பி விட்டதையும் ஞாபகப்படுத்தலாம்.

தமது நலன்களை நிறைவேற்றக் கூடிய தலைவர்களை உக்ரேனின் ஆட்சிப் பீடத்தில் ஏற்றி, அவர்களின் ஊடாக ரஷ்யாவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை முன்னெடுக்கச் செய்தமை உக்ரேனிய நெருக்கடிக்குக் காரணம்.

மேற்குலகின் வெற்றிகரமான பிரித் தாளும் நெருக்கடி உக்ரேனிய தேசத்தை கிழக்கு மேற்காக பிளவுபடுத்தியதுடன் நில்லாமல், உக்ரேனிய தேசியவாதிகளுக்கும் ரஷ்ய வம்சாவளி உக்ரேனியர்களுக்கும் இடையிலான பகைமையைத் தூண்டியது.

**மேற்குலகின் வெற்றிகரமான பிரித் தாளும் நெருக்கடி உக்ரேனிய தேசத்தை கிழக்கு மேற்காக பிளவுபடுத்தியதுடன் நில்லாமல், உக்ரேனிய தேசிய வாதிகளுக்கும் ரஷ்ய வம்சாவளி உக்ரேனியர் களுக்கும் இடையிலான பகைமையைத் தூண்டியது.**

இந்தப் பகைமை ஆயுதமோதலாக பரிணமித்த வேளையில், மேற்குலகம் உக்ரேனிய தேசியவாத அரசாங்கத்தின் படைகளுக்கு ஆயுதம் வழங்கியது. கிழக்கில் வாழும் ரஷ்ய வம்சாவளி குழுக்களை ரஷ்ய ஜனாதிபதி ஆயுதங்கள் மூலம் வலுவூட்டினார்.

இரு தரப்பு பொது எல்லையில் படைகள் குவிக்கப்பட்டன. சண்டை தீவிரமானது. ரஷ்ய சார்பு கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை வழங்குகிறார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் மேற்குலகம் விளாடிமிர் புட்டினுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளைத் தீவிரப்படுத்தியது.

ரஷ்ய ஜனாதிபதி வேறு விதத்தில் காய்களை நகர்த்தி, உக்ரேனிய தேசியவாதத்தை விரும்பாத பிராந்தியங்களின் சுதந்திரக் கோரிக்கைகளை வலுவூட்டினார்.

இதன் காரணமாக, உக்ரேனிய பொருளாதாரத்தில் பெரும் செல்வாக்கு செலுத்தக்கூடிய கிரைமியா சுதந்திரப் பிரடகனம் செய்தது.

கிரைமியாவை ரஷ்யாவுடன் இணைத்துக் கொள்ள புட்டின் முனைந்த சமயத்தில், டொனெட்ஸ்க், லுஹான்ஸ்க் போன்ற பிரதேசங்களில் வாழ்பவர்களும் தமக்கு சுதந்திரம் வேண்டும் என்றார்கள்.

உக்ரேனிய ஆட்சியாளர்கள் ரஷ்ய சார்புடைய பிரிவினைவாதிகளுக்கு எதிராக பயங்கரவாத நடவடிக்கையை ஆரம்பித்தார்கள்.

பொது எல்லைகளுக்கு படைகளை அனுப்பிய ரஷ்யா, உக்ரேனிய படைகளுக்கு எதிராகப் போராடும் குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கி உதவிசெய்தது.

இரு தரப்புகளுக்கும் இடையிலான சண்டை எல்லை மீறியது. கடந்த பத்து மாதங்களுக்குள் ஐயாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பலியானார்கள். பத்து இலட்சம் பேர் வரை இடம்பெயர்ந்தார்கள்.

உக்ரேனின் ஆயுதமோதல் புவியியல் எல்லைகளைத் தாண்டி, ஐரோப்பா முழுவதும் பெருந்தாக்கம் செலுத்த முனைந்த சமயத்தில் ஐரோப்பிய நாடுகள் விழித்துக் கொண்டன எனலாம்.

ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை வலுப்படுத்துவதற்காகவேனும் உக்ரேனிய நெருக்கடி தொடர வேண்டுமென அமெரிக்கா சிந்தித்தவேளையில், பிரச்சினை தீவிரம் பெறுமானால் ரஷ்யாவில் இருந்து கிடைக்கும் எரிபொருள் இல்லாமல் போகலாம் என ஐரோப்பிய நாடுகள் அச்சம் கொண்டன.

இந்த முறை மேற்குலகம் பிளவுபட்டது. ரஷ்யாவை பலவீனப்படுத்துவதற்காக தாம் கையில் எடுத்துக் கொண்ட ஆயுதம், தமக்கு எதிராகத் திரும்பியிருப்பதை மேற்குலகம் உணர்ந்து கொண்டது.

தமது பலவீனத்தை மறைப்பதற்காக ஐரோப்பிய நாடுகள் கையிலெடுத்த ஆயுதம் தான் சமாதான உடன்படிக்கை.

ஐரோப்பிய பாதுகாப்பு ஒத்துழைப்புக்கு கான ஸ்தாபனம் என்ற அமைப்பின் ஊடாக கடந்த செப்டெம்பர் மாதம் முதல் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

உக்ரேனிய அரசாங்கமும், தமது பிராந்தியங்களுக்கு சுதந்திரம் கோரும் ரஷ்ய சார்புக் குழுக்களும் 12 அம்ச சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

இந்த சமாதான உடன்படிக்கை மூலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படக்கூடிய அளவுக்கு எளிதானதாக களநிலவரம் இருக்கவில்லை.

தமது பிராந்தியங்களுக்கு சுதந்திரம் கோரும் கிழக்கு உக்ரேனிய அமைப்புக்கள் ஐரோப்பிய அமைப்பையோ உக்ரேனிய அரசாங்கத்தையோ நம்பத் தயாராக இருக்கவில்லை.

இவை போர்க்களத்தில் தமக்கிருந்த வலுவான நிலையைப் பயன்படுத்தி சண்டையை ஆரம்பித்ததால், ஜனவரி மாதம் சமாதான உடன்படிக்கை தகர்ந்தது.

உக்ரேன் விவகாரத்தில் அமெரிக்க ஜனாதிபதி ரஷ்யாவுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை என்பதை அறிந்து கொண்ட ஐரோப்பியத் தலைவர்கள், ஆயுத மோதலின் தீவிரத்தை உணர்ந்து மீண்டுமொரு சமாதான உடன்படிக்கையை வரைந்தார்கள்.

இந்த முயற்சியில் ஜேர்மன் ஜனாதிபதி அஞ்சலா மேர்க்கலும், பிரான்ஸின் ஜனாதிபதி பிரன்சுவா ஹொல்லந்தேயும் அதீத அக்கறை காட்டினார்கள். அதன் விளைவாக, பெலரூஸ் தலைநகரில் கடந்த வாரம் மற்றொரு சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வில், அஞ்சலா மேர்க்கல், பிரன்சுவா ஹொல்லந்தே ஆகியோர் மாத்திரமன்றி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், உக்ரேனின் ஜனாதிபதி பெட்ரோ பொரொஷென்கோ ஆகியோரும் பங்கேற்றார்கள். இது மிகவும் முக்கியமான தருணமாக நோக்கப்பட்டது அல்லது சித்தரிக்கப்பட்டது.

சமாதான உடன்படிக்கை போர் நிறுத்தத்தை முன்மொழிகிறது. போர் நிறுத்தம் சனிக்கிழமை நள்ளிரவு அமுலாகியிருக்க வேண்டும்.

பொது எல்லையில் இருந்து ஆயுதங்களை அப்புறப்படுத்துவது அடுத்த அம்சம். இரு தரப்புக்களும் பிடித்து வைத்துள்ள கைதிகளை விடுதலை செய்வது, சண்டை பிடித்தவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதும் மற்றைய அம்சம்.

சுதந்திரம் கோரும் பிரதேசங்கள் மீது உக்ரேன் விதித்துள்ள கட்டுப்பாடுகளை நீக்கி, அங்குள்ள மக்களின் வாழ்க்கையில் இயல்பு நிலையை ஏற்படுத்துவது பற்றியும் சமாதான உடன்படிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரம் கோரும் பிரதேசங்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் உக்ரேனில் அரசியல் யாப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கும் யோசனை கூறப்பட்டுள்ளது.

முன்னைய சமாதான உடன்படிக்கையில் இருந்த சில குறைபாடுகள் புதிய உடன்படிக்கையில் நீக்கப்பட்டுள்ளன. நிபந்தனைகளை நிறைவேற்ற கால வரையறைகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

முதலில் போர் நிறுத்தத்தை அமுலாக்கக்கூடிய களநிலவரம் உக்ரேனின் கிழக்குப் பிராந்தியத்தில் கிடையாது என்பது முக்கியமான விடயம்.

இரண்டா வதாக, போர் நிறுத்தத்தை அமுலாக்குவதற்குப் பொறுப்பான தரப்புக்களின் ஈடுபாடு என்ற விடயமும் இருக்கிறது.

மின்ஸ்க் உடன்படிக்கையில், ரஷ்ய ஜனாதிபதியோ, உக்ரேனிய தலைவரோ கைச்சாத்திடவில்லை. மாறாக, அவர்களின் பிரதிநிதிகள் கைச்சாத்திட்டார்கள். புட்டினும், பொரஷென்கோவும் கைகுலுக்கிக் கொண்டது உண்மை தான்.

வேறு பக்கம் பார்த்துக் கொண்டு தான் இருவரும் கைகுலுக்கினார்கள். போர் நிறுத்த உடன்படிக்கையின் சாதக பாதகங்கள் பற்றி பத்திரிகையாளர்களுக்கு விபரித்துக் கூறிய சமயத்திலும் வெவ்வேறு அறைகளில் தான் இருவரும் இருந்தார்கள்.

இது உக்ரேனிய தேசத்தில் வலிந்து திணிக்கப்பட்ட பிரச்சினையின் மூலம் இரு சமூகங்கள் எந்தளவு தூரம் விலகியிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டியது.

பரஸ்பர நம்பிக்கையின்றி போர் நிறுத்த உடன்படிக்கையின் அம்சங்களை அமுலாக்குவதில் உள்ள சிரமங்களையும் பிரதிபலித்தது.

மறுபுறத்தில், இந்தப் போர் நிறுத்த உடன்படிக்கையின் முழுப்பொறுப்பும் ரஷ்யாவைச் சார்ந்ததென சித்தரிக்கும் முயற்சிகள் ஆரம்பம் தொட்டு மேற்கொள்ளப்பட்டன.

போர் நிறுத்தம் பொய்க்குமானால், உக்ரேனியப் படைகளுக்கு ஆயுதங்களை வழங்கப் போவதாக அமெரிக்கா தெரிவித்த கருத்துக்களைக் குறிப்பிடலாம்.

உடன்படிக்கையில் கிழக்கு உக்ரேனிய கிளர்ச்சிக் குழுக்களின் தலைவர்களை கைச்சாத்திடச் செய்யும் பொறுப்பு ரஷ்ய ஜனாதிபதியைச் சார்ந்தது என்று மேர்க்கல் அம்மையார் கூறியதையும் சற்று ஆழமாக நோக்க வேண்டும்.

இதன்மூலம், உடன்படிக்கை முறியும் பட்சத்தில் அதற்குக் காரணம் ரஷ்யா எனக்கூறி, விளாடிமீர் புட்டின் மீது பழிபோடுவது மேற்குலகின் நோக்கமாக அமைந்துள்ளது.

ஒரு பலசாலி தேசத்தை பலவீனப்படுத்துவதற்காக இன்னொரு தேசத்தை பகடைக்காயாக பயன்படுத்திய மேற்குலகின் இராஜதந்திரம், இன்று 52 இலட்சம் மக்கள் வாழும் பிரதேசத்தை போர்க்களமாக மாற்றியிருக்கிறது.

இவர்களின் வாழ்க்கையில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகளில் இதய சுத்தியுடன் செயற்படாமல், இன்னொரு தடவையும் மேற்குலகம் தவறான வழியில் செல்லுமானால் 52 இலட்சம் என்ற எண்ணிக்கை பல மடங்கு உயரலாம் என்பதில் சந்தேகம் கிடையாது.

# சிறிசேனா சாதித்தது என்ன?

- மேனா.உலகநாதன்

**1956 இல் சிங்கள மொழி மட்டுமே ஆட்சி மொழி என்று கொண்டு வரப்பட்ட சட்டத்தை எதிர்த்து, அறவழியில் தமிழர்கள் நடத்திய போராட்டத்தை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கியது, 1958இல் நடைபெற்ற படுகொலைகள், 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் நடத்தப்பட்ட படு கொலைகள், 1977ஆம் ஆண்டு தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், 1981இல் யாழ் நூலகம் எரிக்கப்பட்டது, 1983 இல் நடைபெற்ற வெலிக்கடைச் சிறைப் படுகொலைகள் தொடங்கி 2008-09 மே வரையிலும் நடைபெற்ற படுகொலை கள், தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப் பட்ட கொடுமைகள் என அனைத்து இனவெறிக் குரூரங்களை யும் அந்தத் தீர்மானம் பட்டியலிட்டிருக்கிறது.**

பீகார் மாநிலம் கயாவில் உள்ள போதி மரத்தடியில் நின்று வழிபட்ட இலங்கை யின் புதிய அதிபர் மைத்திரி பால சிறிசேன வின் மனதில் எழுந்தடங் கிய எண்ண அலைகள் பற்றி நமக்குத் தெரியாது.

ஆனால், ஆண்டாண்டு காலமாக ஆறாத ரணத்துடன் துடித்துக் கொண்டி ருக்கும் ஈழத் தமிழர்களின் வேதனைக்கு அவரிடம் எந்த மருந்தும் இல்லை என் பதை மட்டும் அவரது இந்தப் பயணம் நமக்குத் தெளிவுபடுத்திவிட்டது.





புதிய அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர் சிறிசேன மேற்கொள் ளும் முதல் வெளிநாட் டுப் பயணம் என்ற அள வில், அவரது இந்திய வருகை ஊடகங்களில் மிகைபடவே பேசப்பட்டது.

கயா சென்றார். புத்தரை வழிபட்டார். திருப்பதி சென்றார். பெருமாளை வழிபட் டார். டெல்லி சென்றார். மோடியை வழிபட்டார். இவற்றைத் தவிர கவனத்தில் கொள்ளும் அளவுக்கு அவரது இந்தப் பயணத்தில் ஏதாவது நிகழ்ந்ததா?

வழக்கமான இரு நாட்டு உறவுகளை வலுப்படுத்தும் ஒப்பந்தங் களும், கைகுலுக்கல் களும், புன்னகை போஸ்களும் டெல்லி நாடக அரங்கில் மிக அமர்த்தலாகவே அரங் கேறின. அவற்றின் பின்னணியில் டெல்லி யின் சர்வதேச அளவிலான அரசியல் நோக்கங்களும் இல்லாமல் இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்லா மாபாத்துடன் நெருக்கம் காட்டிய இலங்கை அரசை, இப்போது தன்பக்கம் ஈர்த்திருப் பதாக டெல்லிக்காரர்கள் கொலரைத் தூக்கி விட்டுக் கொள்ளலாம். கொழும்புத்துறை முகத்தில் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பலை நிறுத்தியது போன்ற முந்தைய ராஜபக்ஷ அரசின் இந்திய விரோதப் போக்கில் இருந்து இலங்கையை மெல்லத் திசைதிருப்பி இருப்பதாகவும் மகிழ்ச்சி கொள்ளலாம். இவையெல்லாம் உண்மையானவை தானா என்பதற்கான உத்தரவாதம் எதுவும் இல்லை என்பது வேறு செய்தி.

ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை அணுசக்தி தொடர்பான தொழில் நுட்பம், நுண்ணாளுமை, வல்லுநர்கள் உள்ளிட்ட அம்சங்களைப் பரிமாறிக் கொள்வதற்கான உடன்பாடு முக்கியமாகக் கூறப்படுகிறது. கூடங்குளம் அணுஉலை குறித்து முன்னர் அச்சம் தெரிவித்த இலங்கை அரசு, தற்போது இத்தகைய ஒப்பந்தத்தை மேற்கொண்டிருப்பதையும் கூட, இந்தியா தனக்குக் கிடைத்த சாதகமான சமிக்ஞையாகக் கருத இடமிருக்கிறது.

எல்லாம் சரிதான். சிறிசேனவின் இந்த வருகை தமிழர்களுக்குச் சொன்ன செய்தி என்ன?

ராஜபக்ஷவுக்கும், சிறிசேனவுக்கும் எந்த வேறுபாடும் இல்லை என்ற கசப்பான செய்திதான் அது. இலங்கை அதிபர் வருகை என்ற இந்த ராஜாங்க ரீதியான நாடகத்தின் காட்சிகள் இதனை மிகத் துல்லியமாகத் தெளிவுபடுத்தி இருக்கின்றன.

ஆனால், இதில் அதிர்ச்சி அடைய எதுவும் இல்லை. அதிபராகப் பதவியேற்ற சில நாள்களிலேயே, தமிழர் பகுதியில் இருந்து ராணுவத்தைத் திரும்பப்பெறும் பேச்சுக்கே இடமில்லை என்று சிறிசேன அறிவித்துவிட்டார். அது மட்டுமல்ல; போர்க் குற்றம் தொடர்பான விசாரணை அறிக் கையை, மார்ச் 25ஆம் திகதி வெளியிடு வதை ஒத்திவைக்க வேண்டும் என்று ஐ.நா மனித உரிமை ஆணையத்திடம், இலங்கை யின் தற்போதைய அரசு கோரியது. இதற்காக அமெரிக்கா சென்றிருந்த சமர வீர, நியூயோர்க்கில் உள்ள ஐ.நா தலைமை யகத்தில், ஐ.நா பொதுச்செயலாளர் பான்கி மூனை நேரில் சந்தித்து இந்தக் கோரிக் கையை வலியுறுத்தினார். இலங்கை அரசின் இந்தக் கோரிக்கையை ஏற்று போர்க்குற்றம் தொடர்பான விசாரணை அறிக்கையை வெளியிடுவதை ஆறுமாதங் களுக்கு ஒத்திவைப்பதாக ஐ.நாவின் மனித உரிமை ஆணையர் சையித் ராத் அல் ஹுசேன் (Zeid Raad Al Hussein) கடந்த 16ஆம் திகதி அறிவித்தார். அதாவது இலங்கை அதிபர் சிறிசேன இந்தியா வந்தடைந்த தருணத்தில் மிகச்சரியாக இந்த அறிவிப்பு வெளியானது.

ஜெனிவாவில், மனித உரிமை மாநாடு கூட இருக்கும் தற்போதைய தருணத்தில், இந்த அறிவிப்பை வெளியிட்டதன் மூலம், இலங்கையின் போர்க்குற்றங்களுக்கான நீதி அண்மையில் கிடைப்பதற்கான வாய்ப்பே இல்லை என்ற செய்தியை தமிழர்களின் முகத்தில் அறைந்து சொல்லி இருக்கிறது ஐ.நா அமைப்பு.

ஐ.நா மனித உரிமை ஆணையத்தின் அறிவிப்புக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என மோடி தலைமையிலான அரசு சொல்லலாம். வெளிப்படையாக வும், ராஜாங்க நடவடிக்கை ரீதியாகவும் அது சரியாகக் கூட இருக்கலாம். ஆனால், ஐ.நா மனித உரிமை ஆணையம் இந்த முடிவை எடுக்க இந்தியா வும் ரகசியமாக உதவியிருக் கிறது என்று பரவா லகப் பேசப்படுவதை அர்த்த மில்லாத அரசியல் கிசுகிசுப்பாகக் கருதி ஒதுக்கிவிடுவதற்கில்லை. பேரினவாதமும், பெரும் பான்மை வாதமும் கைகோர்ப் பது மிக இயல்பானதுதானே!

மன்மோகன்சிங் தலைமை யிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கடைப்பிடித்த அத்தனை அணுகு முறைகளையும், அதனை விட அழுத்தமாகவும், விரிவாகவும் கடைப் பிடிக் கும் மோடி அரசு, தமிழர்கள் விவ காரத்தில் மட்டும் தடம்புரண்டு யோசிக்கும் என்று நம்புவதை அறிவீனம் என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்.

அந்த வகையில், ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் மன்மோகன் சிங் அரசுக் கும், நரேந்திர மோடி அரசுக்கும் எந்த வேறுபாடும் இல்லை என்ற நமது புரிதலையும், சிறிசேனவின் இந்த வருகையின் போது நடந்த உப்புச் சப்பில்லாத நிகழ்வுகள் உறுதிப்படுத்தி இருக்கின்றன.

ஆக, ராஜபக்ஷவுக்கும் சிறிசேனவுக்கும் எப்படி ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் வேறுபாடு எதுவும் இருக்கப் போவதில்லையோ, அதே போலவே மன்மோகன் அரசுக்கும், மோடி அரசுக்கும் எந்த வேறுபாடும் இருக்கப் போவதில்லை என்ற புரிதலின் அடிப்படையில் இந்தச் சிக்கலை அணுக தமிழ்ச்சமூகம் தயாராக வேண்டும்.

கடந்த ஆண்டு ஐ.நா மனித உரிமை மாநாட்டில் தாக்கல் செய்யப்பட்ட, போர்க் குற்ற விசாரணை தொடர்பான குறைந்த பட்ச நிபந்தனைகளைக் கொண்ட தீர்மானத் தையும் கூட நிராகரிக்க சிறிசேன அரசு திட்ட மிட்டுள்ள நிலையில், மோடி அரசு அதனை வழிமொழியவும் தயாராகி விட்டது. சிறிசேன வின் தற்போதைய வருகையின் போது தமிழர்கள் விவகாரம் குறித்து இருதரப்பின ரும் காத்த கனத்த மௌனம், இந்த உண்மையை நமக்கு உரத்துச் சொல்கிறது.

அதாவது, போர்க்குற்றங்கள் குறித்து இலங்கை அரசே விசாரித்துக் கொள்ளும் என்ற ராஜபக்ஷ அரசின் வாதத்தையே சிறிசேன அரசும் மனித உரிமை மாநாட் டில் முன்வைக்கப்போகிறது. அதனை இந்தியாவும் வரவேற்கப் போகிறது.

சிறிசேன இந்தியா வருவதற்கு சில தினங் களுக்கு முன்னதாக வடமாகாண சபை யில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தின் தாக்கம் எந்த அளவுக்கு இருக்கும் என்ற கேள்வி ஒருபுறம் இருந்தாலும், அதில் முன்வைக்கப்பட்டிருக் கும் கோரிக்கைகளும், பிரகடனங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை மறுக்க முடியாது.

1948 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் திகதி, ஐ.நா. மன்றத்தின் பொதுச்சபையில், இனப்படுகொலையைத் தடுக்கவும், தண் டிக்கவும் நிறைவேற்றப்பட்ட பிரகடனத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இனப்படுகொலைக் குற்றங்களுக்கு உரிய அத்தனை நிகழ்வுகளும் இலங்கையில் நடைபெற்று உள்ளன என்பதை இந்தத் தீர்மானம் ஆணித்தரமான ஆதார சாட்சியங்களோடு எடுத்துக் காட்டுகின்றது.

1956 இல் சிங்கள மொழி மட்டுமே ஆட்சி மொழி என்று கொண்டு வரப்பட்ட சட்டத்தை எதிர்த்து, அறவழியில் தமிழர்கள் நடத்திய போராட்டத்தை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கியது, 1958இல் நடைபெற்ற படுகொலைகள், 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் நடத்தப்பட்ட படுகொலைகள், 1977ஆம் ஆண்டு தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், 19 81இல் யாழ் நூலகம் எரிக்கப்பட்டது, 1983 இல் நடைபெற்ற வெலிக்கடைச் சிறைப் படுகொலைகள் தொடங்கி 2008-09 மே வரையிலும் நடைபெற்ற படுகொலைகள், தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட கொடுமைகள் என அனைத்து இனவெறிக் குரூரங்களையும் அந்தத் தீர்மானம் பட்டியலிட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு ஐ.நா. மனித உரிமை பேரவையில், ஈழத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்து விசாரிப்பதற்கு அமைக்கப்பட்ட சுதந்திர மான குழு தனது விசாரணையில், இனப் படுகொலை குறித்தும் விசாரிக்க வேண்டும் என்றும், இனப்படுகொலைக் குற்றவாளி களைத் தண்டிக்கும் நடவடிக்கைகளை ஐ.நா. மன்றத்தின் பாதுகாப்பு பேரவையில் மேற்கொள்ள வேண்டும் என்றும் வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானம் பிரகடனம் செய்கிறது.

இலங்கைத் தீவில் கடந்த மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்விய டைந்து, புதிய அதிபராக மைத்ரிபால சிறிசேன பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னரும், ஈழத்தமிழர்களுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகள் தொடர்வதையும், மூன்று தமிழர்களை ஒரு ராணுவ வீரர் கண்காணிக்கும் நிலையே தற்போதும் நீடிப்பதையும் அந்தத் தீர்மானம் மிகுந்த வலியோடு சுட்டிக்காட்டுகிறது. ஈழத்தமிழர்களின் துயரத்தைப் போக்க புதிய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காது என்ற தனது அவநம்பிக்கையையும் வட மாகாண அரசின் அந்தத் தீர்மானம் அழுத்தமாகச் சுட்டிக் காட்டுகின்றது.

ஆக, சிறிசேன அரசு என்றில்லை, சிங்களப் பேரினவாதத்தின் ஆதரவில் அமையும் எந்த ஒரு அரசிடம் இருந்தும் ஈழத்தமிழர்கள் தங்கள் வேதனைக்கான விடியலையும், தீர்வையும் தேடிக்கொள்ள முடியாது என்பதே இந்தத் தீர்மானம் சொல்லும் செய்தியாக இருக்கிறது. அந்த வகையில் வடக்கு மாகாண சபை உறுப்பி னர் சிவாஜிலிங்கத்தால் தாக்கல் செய்யப் பட்டு, முதலமைச்சர் விக்னேஸ்வரனால் நிறைவேற்றப்பட்டிருக்கும் அந்தத் தீர்மான மும், அதில் இடம்பெற்றுள்ள பிரகடனங் களும் முக்கியத்துவம் பெறுகின்றன.

இதில் இருந்தே சிறிசேனவின் இந்திய வருகையால் ஈழத்தமிழர்களுக்கு கிடைக்கப்போவது எதுவுமில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளவும் முடிகிறது.

குறைந்த பட்சம், தமிழர்கள் பகுதியில் மறுவாழ்வுத் திட்டங்களை துரிதகதியில் மேற்கொள்ள வலியுறுத்தப்பட்டது என்பது போன்ற சம்பிரதாய அளவிலான அறிவிப்பு கள் கூட சிறிசேன மோடி சந்திப்பைப் பற்றிய செய்திகளில் நாம் பார்க்க முடியவில்லை என்பதில் இருந்தே அந்த உண்மை மேலும் நமக்கு உரைக்க வேண்டும்.

ஓர் இனத்துக்கான விடுதலையை அந்த இனம்தான் வென்றெடுக்க வேண்டுமே அன்றி, ஆதிக்க வல்லூறுகள் ஒருபோதும் அதனை தாமே முன்வந்து வழங்கமாட்டா என்ற வரலாற்று உண்மையை தமிழர்கள் இனியேனும் புரிந்து கொள்ள வேண்டும்.

**சுடர் ஒளி**

வாராந்த சஞ்சிகை

sudarolijaffna@gmail.com

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 567 7609

## போராட்டங்களைப் பகடையாக்காதீர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரனின் கொடும்பாவி எரிப்பு விவகாரம் கூட்டமைப்புக்குள் பெரும் சலசலப்பை உண்டு பண்ணியிருக்கிறது. குறித்த கொடும்பாவியை யார் எரித்தார்கள் என்று இதுவரை இனங்காணப்படாதபோதும் இந்தக் கொடும்பாவி எரிப்பின் பின்னணியில் கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஸ் பிரேமச்சந்திரனும் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தியும் இருப்பதாகவே குற்றஞ்சாட்டப்படுகிறது.

இது குறித்து தமிழரசுக் கட்சியின் கூட்டத்திலும் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. உண்மையில் உட்கட்சி ஜனநாயகம் கூட்டமைப்புக்குள் பேணப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு பலமாக எழுந்துவரும் பின்னணியில் இவ்வாறான உருவப்பொம்மை எரிப்பு நிகழ்ந்துள்ளமை கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் கூட்டமைப்பு சார்பான முக்கியமான முடிவுகளை கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்புக்கு மாறாக இரா.சம்பந்தனும் சுமந்திரனுமே தீர்மானிப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்த வருடம் இலங்கையின் சுதந்திர தினக்கொண்டாட்டத்தின் போது கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனவே இதில் கலந்து கொள்வதா? இல்லையா? என்பது குறித்து கூட்டமைப்பினர் உயர் மட்டத்தில் கூடி ஆராய்ந்தனர். இதன்போது இலங்கை சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் இதுவரை கூட்டமைப்பு பங்கேற்கவில்லை. அதையே இந்த முறையும் பின்பற்றுவோம் என்பதே அநேகரின் ஒருமித்த கருத்தாக இருந்தது. ஆனால். அந்த முடிவுக்கு மாறாக கட்சியின் உறுப்பினர்களுக்குக்கூட அறிவிக்காமல் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் சுமந்திரனும் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் பங்குபற்றியிருந்தனர். இது கட்சிக்குள்ளே பெரும் அதிர்வலைகளை எழுப்பியது.

கட்சியின் உயர் மட்டம் எடுத்த முடிவினை அதன் தலைவரே மீறுவது சரியா? என்ற குரல்கள் கட்சி மட்டத்தைத் தாண்டி மக்களிடத்தில் இருந்தும் எழத்தொடங்கியது. இதன்போதுதான் மீண்டும் உட்கட்சி ஜனநாயகம் தொடர்பான குரல்கள் மீண்டும் மேற்கிளம்பத்தொடங்கின. தலைவர் சம்பந்தனும் சுமந்திரனும்தான் கட்சியின் விருப்புக்கு மாறான எல்லா முடிவுகளையும் எடுப்பார்கள் என்றால் பின்னர் எதற்காக உயர்மட்டக்கூட்டம், ஆலோசனைக் கூட்டம் என்றெல்லாம். நேரத்தையும் வீணடித்து மக்களையும் ஏமாற்றுகின்றார்கள் என்று கூட்டமைப்பினரும் மக்களும் அங்கலாய்த்துக்கொண்டனர்.

இது தொடர்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் பகிரங்கமாக சம்பந்தனையும் சுமந்திரனையும் ஊடகங்களில் தாக்கிப்பேசினார். அதுவரையில் அவர் நடந்து கொண்டது சரி. ஆனால் காணாமல் போனோர் தொடர்பான ஆர்ப்பாட்டத்தின்போது அதில் சுமந்திரனின் கொடும்பாவியை எரித்து அதை அரசியல் பரபரப்பாக மாற்றியது யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டிய ஒரு விடயமே.

ஏனெனில் காணாமல்போனோர் விடயம் என்பது ஒரு அரசியல் கட்சியின் உள்வீட்டுப் பிரச்சினையைப் பேசுகின்ற அரங்கு அல்ல. இது ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும் கண்ணீர்ப்பிரச்சினை. போர் முடிந்த பின்னரும் கூட இன்னமும் ஏக்கத்தோடு வாழ்கின்ற மக்களின் துயரம் அது. தமது பிள்ளைகள் உயிரோடு இருக்கிறார்களா? இல்லையா? என்றுகூடத் தெரியாமல் தவிக்கின்ற பெற்றோரின் ஏக்கங்கள் வெளிப்படுகின்ற இடமே இத்தகைய ஆர்ப்பாட்டக் களங்கள். இதன் போது தமது அரசியல் கட்சிக்குள் நடக்கும் குத்துவெட்டுக்களை அரங்கேற்றுவது என்பது காணமல் போனோருக்காகப் போராடுபவர்களை அசிங்கப்படுத்தும் ஒரு செயலாகும்.

ஒரு கட்சிக்குள் காணப்படும் பேதங்களை கட்சிக்குள்ளேயே தீர்க்கப்படுவதே அரசியலுக்கு அழகு. அதைவிடுத்து மக்களின் வெகுஜனப் போராட்டங்களை தங்கள் அரசியல் பகடைக்காக பயன்படுத்த முற்பட்டால் காலம் எல்லோரையும் பகடையாக்கிவிடும்.

**- தங்கமயில் புருஜோத்தமன்**




தமிழ் மக்களின் அடுத்த கட்ட நகர்வு என்ன என்பது தொடர்பில் உலகம் எப்போதுமே உன்னிப்பாக கவனித்து வந்திருக்கின்றது. அது, இன விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் வெற்றிகரமாக கோலோச்சிய காலத்திலும், அந்த ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்கால் கடற்கரையில் ஒட்டுமொத்தமாக தோற்கடிக்கப்பட்ட பின்னரான இன்றைய காலத்திலும் தொடர்ந்து கவனிக்கப்பட்டே வருகிறது.

ஆயுதப் போராட்டத்தின் முடிவுக்குப் பின்னால் தமிழ் மக்கள் பெரும்பாலும் ஆழ் உறக்க நிலையிலேயே இருக்கின்றார்கள். வைக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆழ் உறக்க நிலையில் இருந்து தண்ணீர் தெளிக்கப்பட்டு தமிழ் மக்கள் எழுப்பப்படும் ஒவ்வொரு தருணத்திலும் ஏதோவொரு முக்கிய நிகழ்வோ, மாற்றமோ ஏற்படுகின்றது. அல்லது இந்தியாவினாலும் மேற்கு நாடுகளினாலும் ஏற்படுத்தப்படுகின்றது.

**ஆயுதப் போராட்டத்தின் முடிவுக்குப் பின்னால் தமிழ் மக்கள் பெரும்பாலும் ஆழ் உறக்க நிலையிலேயே இருக்கின்றார்கள் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆழ் உறக்க நிலையில் இருந்து தண்ணீர் தெளிக்கப்பட்டு தமிழ் மக்கள் எழுப்பப்படும் ஒவ்வொரு தருணத்திலும் ஏதோவொரு முக்கிய நிகழ்வோ, மாற்றமோ ஏற்படுகின்றது. அல்லது இந்தியாவினாலும் மேற்கு நாடுகளினாலும் ஏற்படுத்தப்படுகின்றது.**

கடந்த ஆறு ஆண்டுகளில் தமிழ் மக்கள் அப்படி முக்கியமான மூன்று தருணங்களில் பங்களித்திருக்கின்றார்கள்.

1. இறுதி மோதல்களின் போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தை வலியுறுத்துவதற்கான போராட்டங்களை குறிப்பிட்டளவில் முன்னெடுத்தமை. அல்லது அதற்காக மேற்கு நாடுகளினால் கையாளப்பட்டமை.
2. இந்தியாவின் விருப்பத்துக்காக இலங்கை அரசாங்கத்தால் தவிர்க்க முடியாமல் நடத்தப்பட்ட வடக்கு மாகாண சபைத் தேர்தலில் பெரும் பங்களிப்போடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆட்சியில் அமர்த்தியமை.
3. சீனா சார்பு இலங்கை அரசாங்கத்தினை மாற்றி தனக்குச் சார்பான அரசாங்கமொன்றை அமைப்பதற்காக இந்தியா மற்றும் மேற்கு நாடுகளின் திட்டங்களுக்காக கையாளப்பட்டமை. அல்லது ஒத்திசைந்தமை.

இந்த மூன்று தருணங்களிலும் தமிழ் மக்களுக்கு சில சிறிய நன்மைகள் கிடைத்திருக்கின்றன என்பதை மறுதலிக்க முடியாது. ஆனால், ஒட்டுமொத்தமான நன்மைகள் என்பது தமிழ் மக்களைக் கையாண்ட தரப்புக்களுக்கே கிடைத்தன.

அதனைவிட முதல் இரண்டு தருணங்களும் மூன்றாவது பெரும் தருணத்துக்காக வடிவமைக்கப்பட்டவை. அதாவது, தமக்குச் சார்பான அரசாங்கமொன்றை இலங்கையில் அமைப்பதற்கான திட்டங்களின் போக்கில் இந்தியாவினாலும், மேற்குநாடுகளினால் ஏற்படுத்தப்பட்டவை.

தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஆழ் உறக்கத்தில் இருப்பதும், கருவிகளாக கையாளப்படுவதும் விடுதலையையோ, உரிமைகளையோ பெற்றுத்தந்துவிடாது. இதை, நேற்றுப் பிறந்த குழந்தைகூட புரிந்து வைத்திருக்கின்றது. ஆனால், கருவியாக கையாளப்படுவதிலிருந்து விடுவித்துக் கொள்வது என்பதுவும் அவ்வளவு இலகுவானது அல்ல.

அப்படியிருக்கின்ற நிலையில், கையாளப்படுவதன் போக்கில் மெல்ல நகர்ந்து சந்தர்ப்பங்களைப் பற்றி எமது வலிமையை உறுதி செய்ய வேண்டும்.

தமிழ் மக்களின் மன உறுதி மற்றும் போராட்ட குணம் தோற்கடிக்கப்பட்டு விட்டதாக இலங்கை அரசாங்கம் உள்ளிட்ட எந்தத் தரப்புமே இறுதியாக நம்பவில்லை. ஆயுதப் போராட்டத்தை மட்டுமே தோற்கடிக்க முடிந்திருக்கின்றது என்ற உண்மையையும் உணர்ந்து வைத்திருக்கின்றன. அப்படியான நிலையில், தமிழ் மக்களை மிகுந்த அவதானமாகவே கையாள அல்லது எதிர்நோக்க வேண்டிய தேவை அந்தத் தரப்புக்களுக்கு உண்டு. அதனால்தான், தமிழ் மக்களாகிய எம்மை ஆழ் உறக்கத்தில் வைத்திருக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதனை, இந்தியா, மேற்குநாடுகள் உள்ளிட்ட தரப்புக்கள் செவ்வனே செய்கின்றன.

நாம் எப்படி ஆழ் உறக்கத்திலிருந்து விழித்துக் கொள்வது என்பதுதான் இப்போதுள்ள பெரும் விடயம். ஏனெனில், ஆறு ஆண்டுகள் என்ற பெரும் உறக்க நிலையில் எமக்கு எதிரான மேலும் பல காரியங்கள் ஆற்றப்பட்டுவிட்டன. இது, தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் பட்சத்தில் எமது முடிவுரையை நாமே எழுதிவிட்டு மயானங்களில் போய் படுத்துக்கொள்ள வேண்டிவரும்.

ராஜபக்ஷக்களின் கடுமையான ஆட்சி மாற்றப்பட்டு கடுமையின் அளவு கொஞ்சமாக குறைக்கப்பட்ட அல்லது அப்படிக் காட்டப்படுகின்ற மைத்திரி ஆட்சிக் காலம் ஏற்பட்டிருக்கின்றது. இந்தக் காலப்பகுதியின் நீட்சியில் அவ்வளவுக்கு நம்பிக்கை கொள்ள முடியாது. ஆனால், கிடைத்திருக்கின்ற கால இடைவெளியை எம்மை சரியான புள்ளியில் ஒருங்கிணைப்பதற்காகப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். அது, எம்மை வன்முறை ரீதியிலான ஆயுத அரசியல் போராட்டத்தின் பக்கம் தள்ளாமல் வலிமையான ஜனநாயக ரீதியிலான அரசியல் போராட்டத்தின் பக்கம் நகர்த்துவதற்காக இருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியிலான அரசியல் மீள் எழுச்சி என்பது இன்றைக்கு தவிர்க்க முடியாத ஒன்று. ஏனெனில், அது, இலங்கையின் சிங்கள பௌத்த தேசியவாத அரசாங்கங்கள், இந்தியா, மேற்குநாடுகள் உள்ளிட்ட தரப்புக்களை எதிர்கொள்வதற்கு மாத்திரமின்றி, எம்மை பிழையான நோக்கங்களுக்காக கையாள முயலும் தமிழ் அரசியல் தலைமைகளையும் சரிப்படுத்துவதற்கு அவசியமாகின்றது.

தமிழ் மக்கள் எழுச்சிகொண்டு ஒருங்கிணைகின்ற ஒவ்வொரு தருணத்திலும் தமிழ் அரசியல் தலைமைகள் தவிர்க்க முடியாமல் இறங்கி வருகின்றன. இல்லாவிட்டால், அக்கறையின்றி தனிப்பட்ட அரசியல் நலன்களின் போக்கில் நடந்து எம்மை சிக்கலுக்குள் தள்ளிவிடுகின்றன. இதனை காலம் காலமாக உணர்ந்து வைத்திருக்கின்றோம். ஆயுதப் போராட்டத்தின் தோல்விக்குப் பின், தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் சிறுசிறு குழுக்கள் என்கிற அளவிலேயே முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

**1. காணாமற்போனவர்களை மீட்டுத்தரக் கோரும் போராட்டங்கள்**

**2. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை கோரும் போராட்டங்கள்**

**3. இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள காணிகளை விடுவிக்கக்கோரும் போராட்டங்கள்**

**உலக அரசியலின் போக்கினை சரியாக உள்வாங்கி, மக்களை சரியான புள்ளியில் இணைத்து, அரசியல் தலைமைகளை கையாண்டு எமது உரிமைகளுக்கான இலக்குகளை நோக்கி நகர்வதே தமிழ் இளைஞர்களின் முன்னாலுள்ள பெரும் கடமை. அது எந்தவொரு தருணத்திலும் ஜனநாயக அடிப்படைகளிலிருந்து மாறிவிடாமலும் யதார்த்த பார்வைகளிலிருந்து விலகி வில்லங்கங்களை வாங்கிக் கொள்ளும் அளவுக்கும் செல்லாத அளவுக்கு இருக்க வேண்டும்.**

**4. இறுதி மோதல்களில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு நீதி கோரும் போராட்டங்கள்.**

இந்த போராட்டங்கள் அனைத்திலும் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களே அதிகம் பங்கெடுத்து வந்திருக்கின்றார்கள். நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் என்பது காணாமற்போனவர்களை மீட்கக் கோரும் போராட்டங்களிலும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் போராட்டங்களிலும் உறவினர்களும் காணி மீட்பு போராட்டங்களில் உரிமையாளர்களுமே பங்கெடுத்து வந்திருக்கின்றனர். இறுதி மோதல்களில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு நீதி கோரும் போராட்டங்களிலேயே நேரடியாகப் பாதிக்கப்பட்ட தரப்பிலிருந்து வெளியிலிருந்தும் சில தரப்புக்கள் பங்கெடுத்தன. இதுதான் இந்தப் போராட்டங்களின் வீரியத்தினை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தாமல் சிறுநிகழ்வுகள் என்ற தோற்றப்பாட்டை வழங்கிவிட்டு ஒய்ந்து போயிருக்கின்றன.

இந்தப் போராட்டங்கள் அனைத்திலும் பாதிக்கப்பட்ட தரப்பு என்கிற ரீதியில் உறவினர்கள், உரிமையாளர்களை மாத்திரம் முன்னிறுத்தாமல் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தார்மீகக் கடப்பாடு இருக்கின்றது. அந்தக் கடப்பாட்டினை மறுதலிக்கின்ற அல்லது அசண்டையீனமாகக் கையாளுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பமும் எமது இருப்புக்கு நாம் ஆப்பு வைத்துக்கொள்கின்றோம் என்று கருதிக்கொள்ள முடியும்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இந்தப் போராட்டங்களில் தவிர்க்க முடியாமல் சிறு பங்களிப்பை ஆற்றி வந்திருக்கின்றன. ஆனால் அது, அவ்வளவு அர்ப்பணிப்பாக இல்லை. அதுபோல போராட்டங்களின் மீள் எழுச்சி தமக்கே ஆபத்தாக மாறிவிடுமோ என்கிற அச்ச உணர்வோடு அணுகப்பட்டு வந்திருக்கின்றன.

இந்த நிலையில் தான், யாழ் பல்கலைக்கழக சமூகம் அண்மையில் (பெப் 24, 2015) முன்னெடுத்த 'இலங்கையின் இறுதி மோதல்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் முன்னெடுத்த விசாரணைகளின் அறிக்கையை உடனடியாக வெளியிட வேண்டும்' என்று வலியுறுத்தும் கவனயீர்ப்புப் போராட்டம் கவனம் பெறுகின்றது.

**“ தமிழ் மக்களின் மன உறுதி மற்றும் போராட்ட குணம் தோற்கடிக்கப்பட்டுவிட்டதாக இலங்கை அரசாங்கம் உள்ளிட்ட எந்தத் தரப்புமே இறுதியாக நம்பவில்லை. ஆயுதப் போராட்டத்தை மட்டுமே தோற்கடிக்க முடிந்திருக்கின்றது என்ற உண்மையையும் உணர்ந்து வைத்திருக்கின்றன. அப்படியான நிலையில், தமிழ் மக்களை மிகுந்த அவதானமாகவே கையாள அல்லது எதிர்நோக்க வேண்டிய தேவை அந்தத் தரப்புக்களுக்கு உண்டு. அதனால்தான், தமிழ் மக்களாகிய எம்மை ஆழ் உறக்கத்தில் வைத்திருக்க வேண்டிய் தேவை இருக்கின்றது. அதனை, இந்தியா, மேற்குநாடுகள் உள்ளிட்ட தரப்புக்கள் செவ்வனே செய்கின்றன. ”**

ஏனெனில், தமிழ் அரசியல் போராட்டங்களின் முக்கிய கட்டங்களில் மாணவர்களும் இளைஞர்களும் பெரும் பங்களித்திருக்கின்றார்கள். அந்த பங்கினை தமிழ் அரசியல் தலைமைகள் பிழையாக கையாண்டிருக்கின்றன என்பது வேறு விடயம். ஆனால், தமிழ் மக்களின் போராட்ட குணம் என்றைக்குமே தோற்கடிக்க முடியாதது என்பதை மாணவர்களும் இளைஞர்களுமே தொடர்ந்தும் நிரூபித்து வந்திருக்கின்றார்கள். அனைத்து வகைப் போராட்டங்களிலும் அவர்களின் அர்ப்பணிப்பும் ஆக்ரோசமும் பெருமளவில் இருந்திருக்கின்றது. இப்போதும் அதுதான் அவசியமாக இருக்கின்றது.

உலக அரசியலின் போக்கினை சரியாக உள்வாங்கி, மக்களை சரியான புள்ளியில் இணைத்து, அரசியல் தலைமைகளை கையாண்டு எமது உரிமைகளுக்கான இலக்குகளை நோக்கி நகர்வதே தமிழ் இளைஞர்களின் முன்னாலுள்ள பெரும் கடமை. அது எந்தவொரு தருணத்திலும் ஜனநாயக அடிப்படைகளிலிருந்து மாறிவிடாமலும் யதார்த்த பார்வைகளிலிருந்து விலகி வில்லங்கங்களை வாங்கிக் கொள்ளும் அளவுக்கும் செல்லாத அளவுக்கு இருக்க வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக சமூகம், தமிழ் இன விடுதலைப் போராட்டங்களின் தீர்மானம்மிக்க சக்தியாக தொடர்ச்சியாக செயற்பட்டு வந்திருக்கின்றது. இப்போதும் அவ்வாறான அவசியமொன்றை உணர்ந்து கொண்டு முன்வந்திருக்கின்றது. ஆனால் அது, வடக்குக்கு மாத்திரமானதாக இருக்காமல் வடக்குக்கு வெளியிலுள்ள கிழக்கு மாகாணத்திலும் கொழும்பிலும் கூட அக்கறையை செலுத்தி கூட்டிணைந்து செயற்பாட்டுத் தளத்துக்கு நகர வேண்டிய பொறுப்புணர்வை எடுக்க வேண்டியிருக்கின்றது.

தமிழ் மக்களின் சார்பில் தீர்மானம் மிக்க அரசியல் முடிவுகளை யாழ்ப்பாணமும் கொழும்பும் எடுக்கும் நிலையை மாற்றி கிழக்கு நோக்கியும் அர்ப்பணிப்போடு நகர வேண்டும். அதுதான் தமிழ் மக்களின் மீள் ஒருங்கிணைப்புக்கும் எழுச்சிக்கும் மிகவும் அடிப்படையானது. எந்தவொரு தரப்பும் இன்னொரு தரப்பினை யதார்த்தங்களைப் புரிந்துகொள்ளாமல் கையாளவே கூடாது.

ஜனநாயக அச்சுறுத்தலுள்ள நாட்டுக்குள்ளேயே தொடர்ந்தும் இருக்கின்றோம். ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டிருக்கின்றது என்பதற்காக தமிழ் மக்களின் ஒருங்கிணைவையும் அரசியல் மீள் எழுச்சியையும் அனுமதிப்பார்கள் என்று அர்த்தமல்ல.

ஆக, எமக்கு எதிராக வைக்கப்படுகின்ற பொறிகளையும் சூழ்ச்சித் திட்டங்களையும் விழிப்பாக எதிர்கொண்டு, எந்தவொரு தருணத்திலும் உணர்ச்சி மேலிடுகையில் சிக்கிக் கொள்ளாமல் அரசியல் போராட்டங்களை ஒருங்கிணைத்துக்கொண்டு செல்ல வேண்டியது இளைஞர்களின் கடமையாக இருக்கின்றது. அதுதான், ஆழ் உறக்கத்திலிருந்து தமிழ் மக்களை விடுவித்து, சந்தர்ப்பங்களைக் கையாண்டு எமது நிலைபெறுகைக்கான ஆதாரத்தினைப் பற்றிக்கொள்ள உதவும்!

**ஐந்து வருடங்களாக இலங்கைக்குள் தான் மறைந்து வாழ்ந்தேன்: சரத் பொன் சேகாவின் மருமகனான தனுக திலகரட்ண வுடனான சுவா ரஸ்ய செவ்வி :-**

**2010 ஜனாதிபதி தேர்தலின் பின் சரத் பொன்சேகாவைக் கைது செய்த மஹிந்த அரசு, அவரது மருமகனான தனுகவையும் குறிவைத்தது. தனுக கைதானால் ஹைகோப் வழக்கில் பொன்சேகா இலகுவில் குற்றவாளியாகலா மென்று மகிந்த கணக்குப் போட்டார்.**

**மஹிந்தவின் ஆலோசனையில் தனுகவின் மீதான பிடியாணை பிறப்பிக் கப்பட்டது. எனினும், பொலிசாரால் இவரைக் கைதுசெய்ய முடியவில்லை. ஐந்து வருடங்கள் பொலிசாருக்குத் தண்ணீர் காட்டியபடி தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தார். ஐந்து வருடங்களின் பின், அண்மையில் அரசியல் சூழல் மாறிய பின்னரே நீதிமன்றத்தில் தன்னை ஒப்படைத்தார். தனுக தனது ஐந்து வருட தலைமறைவு வாழ்க்கையைப்பற்றி இங்கே விபரிக்கிறார்.**

**லங்காதீபவில் வெளியான இந்த நேர்காணலை தமிழில் மொழி பெயர்த்தவர் தேவா.**



# ஐந்து வருட அஞ்ஞாத வாசம்

**ஏன் நீங்கள் அதனை நம்பவில்லை?**

பெருந்தொகைப் பணச்செலவில் இவரது சேவையை அரசு பெறுமென்று நாங்கள் நம்பவில்லை. இரண்டாவதாக இராணுவக் குடும்பத்தின் அங்கத்தவர்களாகிய நாங்கள் அரசின் சட்டம், ஒழுங்கில் அசையாத நம்பிக்கை வைக்கப் பயிற்றப்பட்டவர்கள். நிர்வாகம், நீதி என்பதையும் தீவிரமாக நம்புகின்றவர்கள்.

**ஆயுத 'டீல்'களில் நீங்கள் ஈடுபடவில்லையென மறுக்கிறீர்களா?**

ஆம், இந்த நாட்டில் நான் மேற்கொண்ட வியாபாரங்கள் எல்லாமே லங்கா அட்வேன்சர் றேடிங் கொம்பனி நடத்தியதே.

**நீங்கள் குற்றமேதும் செய்யாவிட்டால் ஏன் தலைமறைவானீர்கள்? நீதி பரிபாலனத்தையும் நிர்வாகத்தையும் நம்புவதாகக் கூறியிருக்கிறீர்களே?**

சட்டம் தனது வேலையை காலப்போக்கில்செய்யும் என்ற நம்பிக்கையில் தான் நான் தலைமறைவானேன். அந்த நாள்களில் சட்டம் பயன்படுத்தப் பட்ட விதம் சட்டம் எனும்சட்டகத் தினுள் வராத ஒன்று. சேறுபூசும் தங்கள் வேலையை தொடங்கிய வுடன் சிஜடி என்னை அழைத்தது. தேர்தல் பரப்புரைகள் நடந்துகொண்டிருந்த நேரம் சிஜடி தலைமைக் காரியாலயத்துக்குப் புறப்பட ஆயத்தமானபோது தொலைநகலில் எனது பிரசன்னம் தேவையில்லை என செய்திவந் தது. ஜனாதிபதி தேர்தல் முடிந்து நாங்கள் வீட்டிலிருந்தபொழுது மூன்று நாள்களுக்குள் என்னைச்சமூகமளிக்கச் சொல்லி மீண்டும் அழைப்பாணை வந்தது. இருந்தும் சிஜடிகுழு ஒன்று அன்றே என்னக்கூட் டிச்செல்ல வீட்டுக்கு வந்தது.

என்ன நடக்கின்றது என்பதை எம்மால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிந்தது. அது தவிர இராணுவத்திடமிருந்தும் எங்களுக் குத் தகவல்கள் வந்துகொண்டிருந்தது. சில அதிகாரிகள் எங்கள் பாதுகாப்பு பற்றி எங்களுக்கு எச்சரிக்கை செய்தார்கள். இந்த இயல்புக்குப் பொருத்தமற்ற நிலையை சாதாரணமாக எடுக்கவேண்டாமென்றும் வலியுறுத்திச் சொன்னார்கள்.

எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பதற்காக அல்ல என்பதும் தெளிவாகப் புரிந்தது. இராணு வத்தனமான ஜெனரலின் கைது, சட்டம் ஒழுங்குடனான நாகரிகமான சமூகத்தின் நடைமுறைக்கு எதிரானதொன்று. நான் எந்தக் காரணங்கொண்டும் சிஜடி அழைப் பைத்தட்டிக்கழிக்க முயலவில்லை.

விட்ட இடத்திலிருந்து தொடருகின் றேன். சிஜடி அழைத்தபோதெல்லாம் போவதற்கான ஆயத்தத்துடன் தான் இருந்தேன். தலைமறைவு பற்றிய எண்ணம் எனக்கு அப்போது இருக்க வில்லை. ஜெனரல் கூட நீங்கள் அங்கு போவதால் பாதகமாக எதுவும் நடந்துவிட மாட்டாது. இந்த நாட்டில் சட்டம் உயிர்ப்பு டன் தான் இருக்கின்றது. நீங்கள் பயப்படு வதற்கு ஒன்றுமில்லை என்று சொன்னார். இதற்கிடையில் இராணுவப்புலனாய் விடமிருந்து ஒரு சதித்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அதனை நிறைவேற்ற எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்டுள்ளதாகவுமென தகவல் கிடைத்தது.

**தகவல் தந்த இராணுவப்புலனாய் வாளர்கள் அந்தத் திட்டம்பற்றி தகவல் தரவில்லையா?**

உங்கள் மீது அழுத்தம் செலுத்தி ஜெனரலுக்கு எதிராக சாட்சி சொல்லவைக்கப்போகிறார்கள். இந்த சாட்சியத்தை கொடுக்கும்வரை உங்களை தடுப்புக்காவலில் வைக்கப்போகிறார்கள். இது வாரங்கள், மாதங்கள் என நீளலாம். இந்தச்சூழலில் தான் நாங்கள் மாற்றுவழி ஒன்றைத் தேடவேண்டியிருந்தது. ஒன்றில் நான் ஜெனரல் மீது குற்றம் சுமத்தவேண் டும் அல்லது தலைமறைவாக வேண்டும்.

**ஐந்து வருடகாலம் தலைமறைவாக இருந்திருக்கிறீர்கள். பிரபாகரனின் பதுங்குகுழி இருப்பிடத்தையே கண்டு பிடிக்க முடிந்த பாதுகாப்புப் படையினரால் உங்களை தேடிப்பிடிக்கமுடியாமல் போயிற்றா?**

இது பற்றி நான் நிறையச்சொல்ல இருக்கிறது. சில குழுக்கள் என்னைப்

## மர்மத்தை உடைக்கிறார் பொன்சேகாவின் மருமகன்

**உங்களைப் பற்றிச் சுருக்கமாகக் கூறமுடியுமா?**

எனது பெயர் தனுன திலகரட்னே, றோயல் கல்லூரியில் ஆரம்ப, இடைநிலைக் கல்வியின் பின் அமெரிக்காவுக்கு உயர்கல்விக்காகச் சென்றேன். ஐ.ரி துறையில் பட்டம் பெற்ற பின்பு ஆலோசகராக ஐந்து வருடங்கள் பணியாற்றினேன். பின்பு இலங்கை திரும்பி லங்கா அட்வேன்சர் றேடிங் கொம்பனி என்ற நிறுவனத்தை ஆரம்பித்தேன்.

**எவ்வாறு சரத்பொன்சேகா குடும்பத்துடன் அறிமுகமானீர்கள்?**

எனது தந்தை இராணுவத்தில் பணி புரிந்தவர். பிரிகேடியராக ஓய்வுபெற்றார். நாங்கள் இராணுவச்சமூகத்துடனே தான் வளர்ந்தோம். ஜெனரல் சரத்பொன் சேகாவை எனக்கு பன்னிரண்டு வயதிலிருந்தே தெரியும்.

**அவரது மகளை எப்போது திருமணம் செய்தீர்கள்?**

2007 இல் எங்கள் திருமணம் நடந்தது.

**உங்கள் மீது ஆயுதவியாபாரத்தில் மோசடி செய்ததாகவும் அதற்கு உங்கள் மாமனார் உடந்தையாக இருந்தார் என்றும் குற்றம் சாட்டப்பட்டதே?**

ஆம், கடுமையான குற்றச்சாட்டு என்மீது வைக்கப்பட்டது. இந்தக் குற்றச் சாட்டு வைக்கப்பட்ட நேரம்பற்றி நான் விளக்க மாகச்சொல்லலாமா? அரசுக்கும் எங் களுக்குமான உறவு முறுகலடைந்த போது இராணுவத்துக்கான தளபாடங்கள், ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய அரசு தனி நிறுவனம் ஒன்றை நிறுவ முடிவெடுத் தது. சட்டபூர்வமாக ஆயுதக்கொள்வன வுக்காக 'லங்கா லொஜிஸ்ரிக்' என்ற நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. ஆயுதக் கொள்வனவுக்கான அந்நேர நடைமுறை யில் துல்லியமான ஆவணப்படுத்தல் தேவையிருந்தது. ஆயுதக்கொள்வனவுக் கான உத்தரவிலிருந்து அது வழங்கப்படும் வரை இந்த நடைமுறை பேணப்படவேண்டும். சட்டபூர்வமற்ற முறையில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்தல், இறக்குமதிசெய்தல் என்பனவற்றுக்கு இடமில்லை. ஓர் ஆயுதக்கொள்வனவில் நானோ என் நிறுவனமோ ஈடுபட்டிருந்தால் எனது பெயர் அல்லது நிறுவனத்தின் பெயர் ஆவணங்களில் பதிவாகியிருக்கவேண்டும். இந்தத் தகவல்கள் அப்போது நாடாளு மன்றத்தில் கூட வெளியிடப்பட்டவை.

**நீங்கள் பொதுநிதியைக் கையாடல் செய்ததாக ஹைகோப் வழக்கில் உங்கள் மீதுகுற்றம் சாட்டப்பட்டிருந்ததே?**

இந்த வழக்கில் எனது மாமனாரின் மீது சேறு பூசுவதற்காக எனது பெயரும் பொய் யாகச்சேர்க்கப்பட்டது. குரங்கு நெருப்புத் தணலில் இருக்கும் உணவை பூனை யின் காலைப்பிடித்து எடுப்பதுபோல்தான் நான் பயன்படுத்தப்பட்டேன். சதிசெய்தவர் கள் வேறு ஒருவரின் பெயருக்காக எனது பெயரை உள் நுழைத்துவிட்டிருந்தனர். வெளிநாடொன்றிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இவரை யார் இங்கு கொண்டுவந்தார்கள். இதற்காக அவருக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்ற விபரங்களை திரட்டிக்கொண்டிருக் கின்றோம். இவர்பற்றி நாங்கள் ஏற்கனவே அறிவோம். ஆனால் இந்தச் சூதாட்டத்தில் இவர் ஒரு காயாக பயன்படுவார் என்று நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை.

**அந்தச்சமயத்தில் என்ன நடந்தது?**

எனக்கு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் சமூகம் தரும்படி அதிகாரப்பூர்வமான தகவல்களை சிஜடி தலைமைக்காரியாலயம் அனுப்பியிருக்க எப்படி நீங்கள் என்னை அழைத்துச்செல்ல வருவீர்கள் என்று கேட்க எந்தப்பதிலையும் அவர்களால் தரமுடியவில்லை. இந்தத் தருணத்தில் தான் அவர்கள் சட்டத்துக்கு வெளியே தங்கள் நடவடிக்கைகளைச் செய்கின்றார்கள் என்று எனக்குப் புரிந்தது.

மீள யோசித்தபோது தேர்தல் அன்று இரவு நாங்கள் ஒரு ஹொட்டலில் தங்கியிருந்தோம். அடுத்த நாள் நாங்கள் அந்த ஹொட்டலைவிட்டு வெளியே வந்தபோது, அப்போது முடிவுகள் வெளியாகியிருந்தது. மக்களிடையே பயப்பீதியைக் கிளப்பிவிடும் சூழல் உருவாக்கப்பட்டிருப்பதைக் கண்டோம்.

நகரம்முழுவதும் தடை அரண்களும் இராணுவப்பிரசன்னமும் அதீதமாக இருந்தது. எங்கள் வீடுகள் இராணுவத் தினரால் அடர்த்தியாகச் சூழப்பட்டிருந்து. மக்கள் மனதில் பீதியை உருவாக்க அவர்கள் இதனைச் செய்கின்றார்கள் எனப் புரிந்துகொண்டோம். எனது தந்தை இராணுவத்தில் பணிபுரிந்தவர், எனது மாமனாரும் இராணுவ அதிகாரி. எனவே பாதுகாத்தன. எங்கள் இராணுவப் பின்னணியால் சில தந்திரோபாயங்களை எங்களால் கடைபிடிக்க முடிந்தது.

**மிகுந்தலையில் புத்த கோவில் ஒன்றில் உங்களுக்காக இராணுவம் மறைந்து காத்திருந்ததாமே?**

இது பற்றி நானும்கேள்விப்பட்டேன்.

**அந்தக்கோவிலில் நீங்கள் மறைந்து இருந்தீர்களா?**

இல்லை, நான் அங்கிருக்கவில்லை.

**நீங்கள் கொழும்பிலா அல்லது வெளியிடங்களிலா மறைந்திருந்தீர்கள்?**

பல இடங்களில், உண்மையைச் சொல்லவேண்டுமானால் நாட்டில் பல பாகங்களில் மறைந்து வாழ்ந்தேன்.

**கண்ட இடத்தில் கைது என்ற வோண்டற் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தது அல்லவா?**

நாட்டில் அங்குமிங்கும் போனபோது நான் அதனைப்பார்த்தேன்.

**எந்த வீதித்தடைமுகாமிலும் சோதனைக்குட்படுத்தப் படவில்லையா?**

நாடு முழுவதும் சோதனைச்சாவடிகள் அப்போது இருந்தன. நான் பலதடவைகள் பொலிஸ் சோதனைச்சாவடிகளில் நிறுத்தப்பட்டேன் ஒருதடவை கடற்படைச்சாவடியிலும் நிறுத்தப்பட்டேன்.

**நீங்கள் சோதனைக்குட் படுத்தப்பட்டபோது தனியாக இருந்தீர்களா அல்லது வேறு யாருடனாவது இருந்தீர்களா?**

என்னுடன் பலபேர் இருந்தனர். ஆனால் பலசந்தர்ப்பங்களில் நான் தனியாகப் பிரயாணம் செய்தபோதும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டேன்.



**தலைமறைவாக இருந்தபோது உங்கள் உணர்வுகள் எப்படி இருந்தன? சாதாரணமாக இருந்தீர்களா? அல்லது பயப்பீதியுடன் இருந்தீர்களா?**

மரணபயம் எதனையும் நான் உணரவில்லை. நான் இராணுவக்குடும்ப அங்கத்தவன். ஆயுதம் தாங்கிய சீருடை தரித்த இராணுவத்தினர் எங்களை சுற்றியிருப்பது பழக்கமானதொன்று. சிறுவயதிலிருந்தே அவர்கள் எங்களைப் பாதுகாப்பர் என்ற உணர்வு தான் எங்களிடம் இருந்தது. கிடைத்த தகவல்களில் இராணுவம் எங்களை வேட்டையாடுகின்றது என்பதை நம்பமுடியவில்லை. நிலைமை மோசமடைந்தால் நான் இராணுவ பாதுகாவலிலியே இருப்பதையே விரும்புகின்றேனென என் குடும்பத்துக்கு முன்னரே சொல்லியிருக்கின்றேன்.

**ஜெனரல் பொன்சேகா இதற்கிடையில் கைதானார் அல்லவா?**

ஜெனரல் கைதாகும் வரை ஒவ்வொரு நாள் காலையும் முந்திய நாள் நடந்தவை களைப் பற்றிக் கலந்து பேசுவோம். அப்போதெல்லாம் ஜெனரல் சீஜடி எப்போதெல்லாம் என்னைஅழைக்கிறதோ அப்போதெல்லாம் நான் போகவேண்டு மென சொல்வார். அவர் கைதானபின் இந்த ஆலோசனையை அவர் சொல்வ தில்லை. அவரின்கைது சட்டத்துக்கு புறம்பானது. ஓர் உயர் இராணுவ அதிகா ரியை அவரிலும் உயர் பதவியிலுள்ள இராணுவ அதிகாரியால் தான் கைது செய்யமுடியும். மூன்று நட்சத்திர ஜெனரலை நான்கு நட்சத்திர ஜெனரல் தான் கைதுசெய்யமுடியும். பொன்சேகா வின் கைது இராணுவச்சட்டங்களை மீறிய கைது. ஒரு மூன்று நட்சத்திர ஜெனரலை கைதுசெய்யும்போதே சட்டத்தைப்பற்றி எந்தக்கவனமும் எடுக்காத அவர்கள் என்னைப்போன்ற சாதாரணனை எவ்வாறு நடத்துவார்கள் என்ற கேள்வியே தொடர்ந்தும் நான் தலைமறைவாக இருக்க என்னைத் தூண்டியது.

**ஜெனரல் இராணுவத்தடுப்பில் இருந்தபோது அவரைச் சந்தித்தீர்களா?**

எனக்கு அவரைச் சந்திக்க நேரம் இருக்கவில்லை. ஜெனரலின் கைதுக்குச்சிறிது முன்புதான் நான் தலைமறைவாவதற்கு முடிவெடுத்தேன். அவர் கைதானதும்தலைமறைவானேன். என்மீதான பிடியாணை கூட ஜெனரலின் கைதின் பின் தான் பிறப்பிக்கப்பட்டது.

**உங்கள் தாயும். பெரியதாயாரும் நீங்கள் தலைமறைவாக இருந்தபோது கைதானார்களா?**

என் தாய் கைதுசெய்யப்பட்டு ஒருநாள் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். அவருக்கெதிரான வழக்கு இன்னும் நிலுவையிலுள்ளது. பின்பு என் பெரியதாயார் நான் தங்க ஒருநாள் இடம் தந்ததற்காக கைதானார்.

**உங்கள் தாய். பெரியதாயாரின் கைதுகளுக்குப் பின்னும் பயம்தானா உங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவிடாது தடுத்தது?**

பயம் அல்ல, தொடர்ந்து என் தாயாரிடமிருந்தும் மாமியாரிடமிருந்தும் தலைமறைவை தொடரச்சொல்லியே செய்திகள் வந்தன. தாங்கள் துன்புறுத்தப்பட்டாலும் அதனை சகித்துக்கொள்ளும் மனவலிமை தங்களிடம் இருப்பதாக என்னிடம் சொன்னார்கள். எனது பெரியதாயாருக்கு அப்போது வயது எண்பத்திரண்டு.

எங்கள் குடும்பக்குழு தங்கள் தைரித்தை வளர்த்துக்கொண்டனர். அதுபோல நம்பிக்கையையும் அவர்கள் தொலைத்துவிடவில்லை. அழுத்தத்தில் அவர்கள் உடைந்துபோனால் தலைமறைவை விட்டு வெளியே வர நான் நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பேன்.

ஒரு தொடர்பு இடையறாது என்னையும் அவர்களையும் நித்தம் இணைப்பில் வைத்திருந்தது. எனது பெரிய அண்ணையின் வீட்டில் பணிபுரிந்தவர்கள்கூட விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். நண்பர்களில்சிலர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். எனது தாயாரின் 'பியூட்டிப்பாலர்' வாடிக்கையாளர் கூட விசாரிக்கப்பட்டனர். பயத்தால் வாடிக்கையாளர் 'பியூட்டிப்பாலர்' வருவதை நிறுத்திக்கொண்டனர்.

**இராணுவப்புலனாய்வாளர்கள் உங்கள் மறைவிடங்களுக்கு வந்தார்களா?**

நான் மறைவிடங்களாக பாவித்த இடங்கள் சிலவற்றுக்கு அவர்கள் வந்தார்கள். அந்த வேளைகளில் நான் அங்கிருக்கவில்லை. அவர்கள் தகவல்கள் கிடைத்தபோதெல்லாம் அதனை சரிபார்த்துக் கொண்டனர்.

**யார் உங்களுக்கு மறைவிடங்களைக் கொடுத்தார்கள்?**

ஒரு நாள் பெயர்களை நான் வெளிவிடுவேன்.

**உங்கள் குடும்பத்துக்கு ஏற்பட்ட இடர்கள்பற்றி விபரிக்கமுடியுமா?**

இவைகள் நடந்தேறுவதற்கு முன்பே எனது தந்தையார் இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றுவிட்டார். ஒரு செக்கியூறிற்றி நிறுவனத்தில் சி.இ.ஓ. ஆக பணியாற்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தார், ஆனால் அந்தப்பதவியை விட்டு விலக நேரிட்டது. அந்த ஒப்பந்தத்தின் படி அவர் மாதாந்த சம்பளம் ரூபா இரண்டு இலட்சம். எனவே கடந்த ஐந்து வருடங்களில் பணமாக இழப்பு பன்னிரண்டு மில்லியன் களுக்கு மேல். என் தாயாரின் பியூற்றிப் பாலர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியதால் வேலைசெய்வோர் விலகிச்சென்றனர். என் அம்மாவின் இளைய தம்பி கண்காணிப்புக்குள்ளானார். அவர் போகும் இடமெல்லாம் கண்காணிப்பாளர்கள் நிறுத்திவைக்கப்பட்டனர். நான்கு வழக்குகள் எங்கள் குடும்ப அங்கத்தவர்கள்மேல் தொடுக்கப்பட்டது. வழக்குச்செலவுகள் பெருந்தொகை. எனது நிறுவன வளாகத்துக்கு தீ வைத்தனர். அதுபற்றிய வழக்கொன்றும் இன்னும் நிலுவையிலுள்ளது.

**தலைமறைவுகாலத்தில் உங்கள் மனைவியை நீங்கள்சந்தித்தீர்களா?**

அவரும் அவரதும் சகோதரிகளும் அமெரிக்காவில் வாழ்கிறார்கள். அங்குதான் அவர்கள் பணிபுரிகிறார்கள். முந்தைய ஜனாதிபதித் தேர்தலின் பின் இரு வாரங்கள் இங்கு வந்திருந்தனர் பின்பு அமெரிக்காவுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

**உங்கள் தலைமறைவுகாலத்தில் எப்போதாவது வெளிநாடு சென்றீர்களா?**

இதுபற்றி பின்பு பதில் சொல்கின்றேன். இன்ரபோலுக்கும் என் பற்றிய அறிவுறுத்தல் செய்யப்பட்டிருந்தது.

**ஜனாதிபதி ராஜபக்ஷ ஜெனரலுக்கு மன்னிப்பு வழங்கினார். நீங்கள் தலைமறைவாகவே இருந்தீர்கள். இந்த மன்னிப்பின் திரைமறைவில் ஒப்பந்தங்கள் ஏதாவது இருந்ததா?**

மன்னிப்புப்பற்றிய பேச்சுவார்த்தை களின்போது நான் தொடர்பின்றி இருந்தேன். ஒப்பந்தமோ புரிந்துணர்வோ இரண்டுசாராருக்குமிடையில் இருந்திருக்கலாமென்று நான் நம்பவில்லை. சர்வதேச அழுத்தம் தான் மன்னிப்புக்கு காரணமென நான் நினைக்கின்றேன்.

**நீங்கள் திடீரென நீதிமன்றத்தில் ஆஜராகினீர்கள். உங்கள்பிணைக்கு எந்த ஆட்சேபனையும் எழும்பவில்லை. மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் எந்த ஒப்பந்தமும் இல்லாது இது நடைபெறச் சாத்தியமா?**


இதுபற்றி பத்திரிகைகளில் நானும் வாசித்தேன். அரசுக்கும் எங்களுக்குமிடையில் எந்த ஒப்பந்தமும் இல்லை. எனது வழக்குப்பற்றி சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசித்த பின்னரே சரணடைந்தேன்.

**ஜனாதிபதி தேர்தல் காலத்தில் நீங்கள் மறைவிலிருந்து வெளிவந்தீர்களா?**

நான் இந்தச்சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக்கொண்டேன். இந்த நேரத்தில் அவர்கள் பிழையான நடவடிக்கை எடுத்திருந்தால் அது அவர்களுக்குத்தான் கேடாக இருந்திருக்கும்.

**இருபக்க இணைப்பாளரான ஜயந்த ஹொட்டகொடயுடன் நீங்கள் ஒரு டீல் செய்துகொண்டீர்கள் என நான் சொன்னால்?**

நான் அவரை சந்திக்கவுமில்லை. அவருடன் பேசியதுகூட இல்லை. சிலர் இவ்வாறான சந்தர்ப்பங்களை தங்கள் நன்மைக்காக பயன்படுத்திக்கொள்வார்கள். இதுதான் இந்த பரப்பப்பட்ட கதைக்கான பதில். நான் ஒரு டீலும் செய்யவில்லை யென உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.



**உங்கள் உடனடித்திட்டங்கள் என்ன?**

என் வங்கிக்கணக்குகளும் முடக்கப்பட்டுள்ளன. எனது வாகனம் பொலிசார் வசமுள்ளது. 'பாஸ்போட்' தடைசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறான பிரச்சினைகளே இப்போதுள்ளது. நான் நீதியை எதிர்பார்த்திருக்கிறேன். சட்டத்தின்மீதுதான் நம்பிக்கை வைக்கவேண்டியுள்ளது.

**அரசியலில் வர உத்தேசம் உண்டா?**

அரசியல் பற்றிய சிந்தனை எனக்கு எப்போதுமே ஏற்படவில்லை.

**உங்களை துன்புறுத்தியவர்கள்மீது உங்களுக்கு வெறுப்பு உண்டா?**

நிச்சயமாக இல்லை. எனக்கும் என் குடும்பத்துக்கும் இழைத்த தீங்கெல்லாம் அவர்களது அறியாமையையும் சரியாக சீர்தூக்கிப்பார்க்க இயலாத தன்மையுமென்றுதான் நான் கருதுகின்றேன். பலம் பொருந்திய இதுபோன்ற குடும்பங்களின் சிறுபிள்ளைத்தனமான நடவடிக்கைகள் அவர்களது பெயருக்கும் செல்வாக்குக்கும் எதிரானதாகவே இருக்கும். நாமல் ராஜபக்ஷ பற்றிய சில செய்திகளை வாசிக்கும்போது அவரை தொலைபேசியில் அழைத்து மல்லி, கவலைப்படாதே இவைகளைச் சுலபமாக எடுத்துக்கொள். உனக்காக என்னால் எதைச்செய்யமுடியுமோ அதைச்செய்ய தயாராக இருக்கின்றேன். நீதிக்குப் புறம்பாக உனக்கு ஏதாவது நடக்குமானால் அதை தடுக்க என்னாலானதைச் செய்வேன்என்று சொல்லவே நினைக்கின்றேன். இப்படித்தான் நான் யோசிப்பது.

**நகரம்முழுவதும் தடை அரண்களும் இராணுவப் பிரசன்னமும் அதீதமாக இருந்தது. எங்கள் வீடுகள் இராணுவத்தினரால் அடர்த்தியாகச் சூழப்பட்டிருந்து. மக்கள் மனதில்பீதியை உருவாக்க அவர்கள் இதனைச் செய்கின்றார்கள் எனப்புரிந்துகொண்டோம். எனது தந்தை இராணுவத்தில் பணிபுரிந்தவர். எனது மாமனா ரும் இராணுவ அதிகாரி. எனவே என்ன நடக்கின்றது என்பதை எம்மால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிந் தது. அது தவிர இராணுவத்திடமிருந்தும் எங்களுக்குத் தகவல்கள் வந்துகொண்டிருந்தது. சில அதிகாரிகள் எங்கள் பாதுகாப்பு பற்றி எங்களுக்கு எச்சரிக்கை செய்தார்கள்.**

# சிம்ம சொப்பனம்

## 11

காஸ்ட்ரோ மீண்டும் பள்ளிக்கு அனுப் பப்பட்டான்.

காஸ்ட்ரோ தங்கியிருந்த வீட்டில் பெலன் எனும் பெண்மணியும் வசித்து வந்தார். இவர் ஒரு பியோனோ . ஆனால் இவ ருக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை: இவ ருடைய கணவர் ஸான்டியாகோ டி-க்யூபாவின் ஹைத்தி பிரதிநிதி. அவர் பெயர் லூயிஸ். காஸ்ட்ரோவுக்கு இவரைப் பிடித்தி ருந்தது. ஒருநாள் இருவரும் பேசிக் கொண்டி ருக்கும்போது. காஸ்ட்ரோ தனக்குஇன்னமும் ஞானஸ்தானம் செய்து வைக்கப்படவில்லை எனும் சங்கதியைத் தெரிவித்தார். இதைக் கேட்டுத் திகைத்துப் போன லூயிஸ்அதற்கான காரணத்தையும்கேட்டு அறிந்து கொண் டார். ஞானஸ்தானம் மிக மிக அவசியம் என்று கருதிய அவர், மறு கணமே காஸ்ட்ரோவின் ஞானத் தந்தை யாக இருக்க தன்னு டைய சம்மதத்தை தெரிவித்தார்.

ஒரு நாள் மதியம் சான்டியாகோ- டி-க்யூபாவில் இருந்த தேவாலயத்துக்கு காஸ்ட் ரோவை அழைத்துச் சென்றனர். அவன் மீது புனிதநீர் தெளிக்கப்பட்டது. ஞானஸ் தானம்செய்வித்தது லூயிஸ்தான் என்ற போதி லும் அவரது பெயர் காஸ்ட்ரோவின் பெய ரோடு இணைக்கப்படவில்லை. ஒரு வேளை முன்னரே இவரைச்சந்திக்கும்வாய்ப்புஅமைந் திருக்கு மானால் ஃபிடல் என்பது லத்தீன் மொழிச்சொல். கற்பு, ஒழுக்கம், நெறி போன்ற பண்புகளைக் குறிக்கும் சொல். ஃபிடலின் முழுப்பெயர் ஃ பிடல் அலெஜாண்ட்ரோ ரஸ் காஸ்ட்ரோ. அலெஜாண்ட்ரோ என் பது அலெஸ்ஸாண்டரின்பெயர். ஸ்பானிய மொழி வழக்கில் அலெஜாண்ட்ரோ என்று மாறி விட்டது. காஸ்ட்ரோவுக்கு அலெ ஜாண்ட் ரோ எனும் பெயரே பிடித்திருந்தது. பள்ளியில் தன்னை அலெஜாண்ட்ரோ என்றே அவர் பெருமையுடன் கூறிக் கொண்டார்.

லூயிஸ் ஞானத்தந்தையாக மாறி விட்ட தால் அவர் மனைவி பெலன். காஸ்ட்ரோ வின் ஞானத் தாயாக மாறினார். பெலன் காஸ்ட்ரோவுக்கு வீட்டிலேயே வகுப்புகள் எடுத்தார். அப்போது காஸ்ட்ரோவின் விருப்பப் பாடம் கணிதம். புத்தகத்தின் அட்டைகளைக் கூட விட்டு வைக்காமல் பெருக்கல் ,கூட்டல், வகுத்தல், என்று ஓயா மல் கணக்குப் பழகிக் கொண்டிருப்பான். மற்றப்படி அந்த வீட்டில் அவர் பெரிதாக எதையும் கற்றுக் கொள்ளவில்லை. வீட் டில் பிரச்சினைகளும் பெருகிக் கொண்டே போனது. ஓரியண்ட்டில் அவரது தந்தை குவியல் குவியலாக பணத்தை வைத்தி ருந்து என்ன பயன்? ஆசைப்பட்டபோது ஒரு கோன் ஐஸ் கூட காஸ்ட்ரோவுக்குக் கிடைக்க வில்லை என்பதே நிஜம்.

பொறுத்துப் பொறுத்து பார்த்து பேசாமல் வீட்டை விட்டு வெளியேறி பள்ளி விடுதியில் சேர்ந்து கொண்டான் காஸ்ட் ரோ. ஆனால் அங்கும் அதே பிரச்சினை. கட்டுப் பாடுகள், கட்டுப்பாடுகள், கட்டுப்பாடுகள், கட்டுப்பாடு எனும் வார்த்தையை யார் பயன்படுத்தினாலும், அவர்களை அறை ந்து விடலாம் எனும் அளவுக்கு வெறுப்பின் உச்சத்துக்கே போனான். சட்ட திட்டங்கள் என்னென்ன என்று தெரிந்து வைத்துக் கொண்டு நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஒவ்வொன்றாக மீறினான். அதே சமயம் காஸ்ட்ரோ படிப்பதை விட்டு விடவில்லை. நல்ல மதிப்பெண்களையே பெற்று வந் தான். இதனால் மூன்றாவது வகுப்பிலிருந்து ஐந்தாவது வகுப்புக்கு அனுப்பப்பட்டான். ஸான்டியாகோ டி-க்யூபாவில் தங்கியிருந்த கால கட்டத்தில் காஸ்ட்ரோ தான் பிறந்து வளர்ந்த ஓரியண்ட் மாகாணத்தை மறக்க இயலாதவனாக இருந்தான். கரும்புத் தோட்டங்களையும், தன் வீட்டு அடி வாரத்தில் சதா கத்திக் கொண்டிருக்கும்வளர்ப் புப் பிராணிகளையும், சேவல் சண்டைகளை யும் அடிக்கடி நினைத்துப் பார்த்தான். ஒவ்வொரு விடுமுறையின் போதும் தன் வீட்டுக்கு ஓடி வந்து விடுவான். பள்ளி யில் சேர்வதற்கு முன்னால் தன் வீட்டில் அனுபவித்த எல்லையற்ற சுதந்திர த்தை நினைத்து நினைத்து ஏங்கினான். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை விடுமுறை அளிக்கப்பட்டது.கிறிஸ் துமஸ் சமயங் களில் இரண்டு வாரங் களுக்கு லீவு கிடை க் கும்.

காஸ்ம்ரோவுக்குப் பிடித்த முக்கியப் பொழுது போக்கு குதிரைச்சவாரி. அப் போது காஸ்ட்ரோ வின் குடும்பத்தாருக்கு பல ஏக்கர் நிலங் கள் சொந்தமாக இருந்தன. க்யூபா வில் நிலத்தை கேபல்லரியா முறை யில் கணக்கெடுப்பார்கள். ஒரு கேபல் லரியா என்பது 13.4 ஹெக்டேருக்குச் சமமா னது. ஏஞ்சலிடம் கிட்டத்தட்ட 800 ஹெக்டேர் நிலம் இருந்தது) அவற் றில் பொரும்பாலான நிலங்கள் பைன் மரங்கள் நிறைந்த மலைச் சரி வாக இருந்தன.700, 800 மீற்றர் உயரத் தில் தான் மேட்டு நிலம் இருக் கும். இது வளமான செம்மண் நிறைந்த பகுதி. நிக்கல் மற்றும் உலோகப் படிவங்கள் மிகுதியாக இருந்தன. காஸ்ட்ரோ வுக்கு இந்தச் செம்மண் நிலத்தில் குதிரைச்சவாரி செய்வது மிக வும் பிடிக்கும். சரிவான பகுதிகளில்செல்லும் போது உற்சாகத் துடன் கத்தத் தொட ங்கி விடுவான். பிறகு, குதிரையை ஓர் இடத் தில் கட்டி வைத்துவிட்டு பைன் மரங் களை அண் ணாந்து பார்த்த படி பொழு தைக் கழிப் பான்.

காஸ்ட்ரோவுக்கு கிறிஸ்துமஸ் பிடிக் கும். கிறிஸ்துமஸ் விடுமுறையும் ரொம் பவே பிடிக்கும். காரணம், மேற் சொன்ன உல்லாசம் தான். மற்றப்படி கிறிஸ்து மஸ் பண்டிகைக்கு பின்னால் ஒளிந்தி ருந்த மத நம்பிக்கைகளை அவன் ஏற்றுக் கொண்டான் என்று சொல்வ தற் கில்லை.



---

## சொற்சிலம்பம் போட்டி இல. 662

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | 9 | | |
| 10 | | 11 | | | 12 | | |
| 13 | | | | 14 | | | |
| | | 15 | 16 | | | | 17 |
| | 18 | | | | | 19 | |
| 20 | | | | 21 | 22 | | |
| 23 | | | 24 | | | | |

அனுப்புபவர் பெயர்:-------------------------------

விலாசம்:-------------------------------------------

-----------------------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### மேலிருந்து கீழ்

1- பழக்க தோஷம்.
2 - சிறு ஓடம் போன்றது.
3- புத்திரன்.
4- வலிமை.
5- துட்டத்தனமான காரியம் செய்பவன்.
6- ஊதல்,( ஆங்கிலப் பெயரையே பயன்படுத்துவர்).
9 - காதலியின் மனம் கவர்ந்தவன்.
11 - திருமணம்.
14-சொத்தைப் பங்கிடு.
16- கணிதத்தில் அவசியமான குறியீடு.
17- கூரிய தன்மை.
18- கூரையை ஒட்டி அமைக்கப்படும் களஞ்சியம்.
19 -ஒன்றோடு ஒன்று இடிபடுதல்.
20- குரங்கு.
21-பார்ப்பதால்,கேட்பதால் ஏற்படும் மனமகிழ்ச்சி

### இடமிருந்து வலம்

1- காந்தி அமைத்த ஆச்சிரமம்.
5- இரண்டு.
7- யானை.
8- பார்வையிட்டு அறியும் நிகழ்வு.
10- பத்திரிகைகள், சஞ்சிகைகளின் ரசிகன்.
11 - சில நாடுகளில் நடப்பது.
12- வாழை நார்.
13- பேச்சு வழக்கில் பணத்தைக் குறிப்பிடுவது.
14- குழந்தை.
15- இரப்பவன்.
18 - ஒன்றுக்கு ஈடாக வைக்கப்படுவது.
19 - தயிரைக் கடைந்து பெறுவர் .
20 - கை.
21- முதல் திதி.
23- வான்.
24-வெகுமதி.

### போட்டி இல. 662

■ சொற்சிலம்பம் போட்டி 662ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, மார்ச் 25 மற்றும் ஏப்ரல் 01ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபா லட்டை யில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 660இல் பரிசு பெற்றோர்

1 அ.பொ.திரவியநாதன், பொன்னையா வீதி, ஆணைக்கோட்டை.

2 கா.பொ.க.குலசிங்கம், 5 ஆம் வட்டாரம், நயினாதீவு.

3 இ.சண்முகதாஸ், கொத்தியால் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவல கத்திலும், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, கொழும்பு, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள உதயன்-சுடர் ஒளி பிராந்திய அலுவலகங்களிலும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

ரூபிணி சிவரூபன், இலட்சுமணன் தோட்டம், தும்பளை, பருத்தித்துறை.

திருமதி.து. வத்சலா, ஆழ்வாண் கிணற்றடி, பன்னாலை, தெல்லிப்பளை.

இ. விஜயசிறி, வேலணை கிழக்கு, வேலணை-04

சி. சங்கீதா, அரசடி வீதி,வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை.

ஸ்ரீ.அற்புதராணி, இல 15/11, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி 660இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. சேவல்.
2. துரை.
3. சதகம்.
4. முல்லை.
5. திராணி.
6. ரசி.
10. வாரம்.
11. அகம்பாவம்.
12. ஒணான்.
13. சய.
14. அவமதி.
15. அம்மா.
16. புகை.
18. மசகு.
20. திதி.
21. நட

**இடமிருந்து வலம்**

1. சேது சமுத்திரம்.
7. வரைதல்.
8. ராசி.
9. கலைவாணி.
12. ஓம்.
13. சக.
14. அணா.
15. அம்புயம்.
17. வன்மம்.
19. சமாதி.
21. நவ.
22. திக்கு.
23. திட்டம்.



# சங்கக்காரா செய்வது சரியா?

மெல்பர்னில் பங்களாதேஷுடன் நடந்த ஒருநாள் போட்டி குமார் சங்ககாராவின் 400வது ஒருநாள் போட்டி. இதில் அதிரடியாக ஆடி சங்கா சதமடித்திருந்தார்.

எதிரணியைச் சேர்ந்த குறிப்பிட்ட பந்து வீச்சாளன் தொடர்ந்து விக்கட்டுக் களை எடுக்கத் தொடங்கும் ஒவ்வொரு தடவையும் அவனை எதிர்த்து சங்ககாரா மூர்க்கமாக அடித்தாடத் தொடங்குகிறாரே? இதனால் அடிக்கடி ஆட்டமிழக்கவும் செய்கிறாரே ?? இந்த ஆட்டம் பொறுப்பற்ற ஆட்டமா ? இப்படி ஆட வேண்டிய தேவை என்ன ?

சங்ககாரா உலகின் தலைசிறந்த கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர். கிரிக்கெட்டில் பல சாதனைகளை கொண் | I.C.C. எனப்படும் உலகக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் தற்போது (2015 பெப்ரவரி முதற் கொண்டு) உலகின் முதலாமிட கிரிக்கெட் வீரர் என கௌரவப்படுத்தப்பட்டுள்ளவர்.

இவர் இலங்கையின் கண்டி ட்ரினிட்டி கல்லூரியில் கல்வி பயின்ற போது மிகவும் ஒழுக்கமான மற்றயோருக்கு முன் மாதிரியான மாணவனாகத் திகழ்ந்தவர். மாணவர் தலைவராக கல்லூரி நிர்வாகத்தால் நியமிக்கப்பட்டவர். கல்லூரியில் நடைபெற்ற எல்லா விளையாட்டுப் போட்டிகளிலும் அது டெனிஸ் ஆனாலும் சரி. பட்மிண்டன் போன்ற எதுவானாலும் அதில் பங்குபற்றிய மாணவன். ஒரு முறை இவரது தாயார் திரு...ரி. சுரங்கனாவை சந்தித்த கல்லூ...ன் அதிபர் திரு. லியானோர்ட் டி அல்விஸ்.



- கலைச் செல்வன் றெக்ஸி

சங்காவை கிரிக்கெட்டில் கவனம் செலுத்துமாறு ஊக்குவியுங்கள் எனக்கூற அதன்படி அந்தத்தாயும் தந்தையும் மகனுக்குக் கொடுத்த ஒத்துழைப்பும் உற்சாகமும் இன்று உலகின் ஒப்பற்ற ஒரு கிரிக்கெட் வீரனை அடையாளம் காட்டியிருக்கின்றது. அதன் பிறகு இதுவரையில் சங்கா செய்துள்ள சாதனைகள் அதிகம்.

அவற்றுள் மிகச் சிலவற்றை கீழே பட்டியலிடுகிறேன்:

கிரிக்கெட் வரலாற்றில் டெஸ்ட் கிரிக்கெட்டில் 12 இரட்டைச் சதங்களை அடித்த அவுஸ்திரேலியாவின் சேர்.டொனால்ட் பிரட்மனுக்கு அடுத்து. அதிகமான 11 இரட்டைச்சதங்கள் அடித்த வீரர் என்ற பெருமையைக் கொண்டுள்ளவர்.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் ஒரு விக்கட் காப்பாளராக அதிக ஆட்டமிழப்புக்களான 473 ஆட்டமிழப்புக்களை எதிரணியினருக்கு ஏற்படுத்தியவர். இதில் 96 Stampings ஒரு விக்கட் காப்பாளராக ஒருநாள் கிரிக்கெட்டில் இதுவும் அதிகமான சாதனைதான்.

12.000 ஓட்டங்களை டெஸ்ட் கிரிக்கெட்டில் பெற்றுள்ளார். இதிலே குறிப்பிட வேண்டிய விடயம் என்னவென்றால், டெஸ்ட் கிரிக்கெட்டில் ஏற்கனவே 12000 ஓட்டங்களைத் தாண்டிய ஏனைய வீரர்களுடன் ஒப்பிடும் போது இவர் ஆடிய போட்டிகளும் (130 டெஸ்ட் போட்டிகள் ) இனிங்ஸ்சுகளும் (224 Innings) குறைவானவை. அத்துடன் இவரின் துடுப்பாட்ட சராசரி. (Batting Average) 58.26 ஆகும். இதுவும் ஏனைய வீரர்களை விட அதிகம்,

ஐ.சி.சி.யினால் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் என்ற மிகவும் கௌரவமான உயர் கௌரவத்தை 2012 இலும்.

சிறந்த டெஸ்ட் வீரர் என்ற கௌரவத்தை அதே ஆண்டிலும்

சிறந்த ஒரு நாள் கிரிக்கெட் வீரர் என்ற கௌரவத்தை 2011 ., 2013 இலும் பெற்ற வீரர்.

சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட்டில் 13.000 ஓட்டங்களுக்கு மேல் பெற்ற மிகச் சில வீரர்களுள் ஒருவராகி, சச்சின் .ரிக்கி பொண்டிங், சனத் ஜயசூரியாவுக்கு அடுத்து ஒரு நாள் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்களைப்பெற்ற வீரர் என்ற பெருமையையும் கொண்டவர்.

இதேபோல சங்காவின் சாதனைகள் இன்னும் பல .. அவற்றினை இங்கே பட்டியலிடுவதல்ல எனது நோக்கம்.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் வரலாற்றை எடுத்து நோக்குவோமாகில் அவர்கள் அந்த அணியில் இடம்பெற்றுவரும் ஸ்ரார் வீரர்களின் வெற்றிகளிலேயே தங்கியிருப்பவர்கள். 90 களில் இலங்கை அணியின் ஸ்ரார் வீரர்களாக அரவிந்தவும் சனத் ஜெயசூரியாவும். களுவிதாரணவும். முரளியும் சமிந்த வாசும் இருந்து வந்துள்ளமை வரலாறு. இந்த ஸ்டார் வீரர்களில் ஒருவர் சதம் போட்டாலோ அல்லது அதிக விக்கட்டுக்களை எடுத்தாலோ இலங்கை அணி அந்தப் போட்டியில் வெல்லும் என்பது வரலாறு. இதனை சனத் ஜெயசூரியா சிட்னியில் விளையாடிய மூன்று போட்டிகளில் நான் கண்கூடாகக் கண்டவன். அந்த மூன்று போட்டிகளிலும் சனத் சதங்களை எடுத்திருந்தார். அவற்றில் இலங்கை அணியே வென்றிருந்தது. இந்த வரலாற்றுக்கு அமைய. தற்போது இலங்கை அணியின் ஸ்ரார் வீரர்களாக சங்கக்காரா. டில்ஷான். மஹெலமற்றும் மலிங்கா காணப்படுகின்றனர். இவர்களுள் ஒருவரின் சாதனைதான் இலங்கை அணியின் வெற்றிக்கு வழி வகுத்துவருகின்றது. ஆனால் பங்களா தேஷுக்கு எதிரான போட்டியின் போது டில்சான் 161 ஓட்டங்களை எடுத்திருந்தாலும் அதிரடியாக ஆடி சங்கா அடித்த சதமே அனைவரதும் கவனத்தை ஈர்த்தது.

காரணம் இந்தப் போட்டி நடைபெற்ற மைதானம் அவுஸ்திரேலிய M.C.G. இந்த மைதானமானது சங்ககாராவின் விளையாடும் பாணிக்குப் பொருத்தமான மைதானமாகும்.

சங்ககாரா கிரிக்கெட்டில் வீசப்படும் Short Ball வகைப்பந்து வீச்சை எதிர்த்து அதிரடியாக ஆடும் வல்லமையை இயற்கையாகத் தன்னகத்தே கொண்டுள்ளவர். எனவே அவுஸ்திரேலிய மெல்பேர்ன் ஆடுகளத்தில் அவர் பிரகாசிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. இருந்த போதிலும் அவரது பலவீனமான Out Swinger பந்தை தேடி அடித்து முதலாவது ஸ்லிப்புக்குப் பிடி கொடுத்து ஆட்டமிழக்கும் அபாயமும் அந்த மைதானத்தில் இல்லாமலில்லை.

பொதுவாக சிறந்த வீரனான சங்காவைப்பற்றி பலரும் ஒரு விடயத்தைக் கூற நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதாவது. தனது அணியில் உள்ள மற்றைய துடுப்பாட்ட வீரர்கள் விரைவாக ஆட்டமிழக்கும் தருணங்களில் கூட இவர் நிதானமாக ஆடாமல் அடித்து ஆட முனைந்து ஆட்டமிழப்பது ஏன்??

இது அவரது பொறுப்பற்ற தன்மையைக் காட்டுகின்றதா? என்பதே அந்தக் கேள்வி .

இது தப்பான கருத்து. அது அவரது பொறுப்பற்ற தன்மையைக் காட்டவில்லை கிரிக்கெட்டைப் பற்றிய அவருக்குள்ள புரிதலின் வெளிப்பாடே இந்த அதிரடி ஆட்டம் என்பது என் கணிப்பு.

கிரிக்கெட்டில் துடுப்பாடும் போது இரண்டு விதமாக ஆடவேண்டும் .

1) அடித்தாடுதல் .( Attacking shots)
2) தடுத்தாடுதல் (Defensive shots)

தனது சக வீரர்கள் தொடர்ந்து ஆட்டமிழக்கும் தருணங்களில் ஒரு வீரன் நின்று நிதானமாக விளையாட வேண்டுமாயின் தடுத்தாடுவதே சிறப்பானதென பொதுவாக கிரிக்கெட்டைப் பார்ப்போர்கள் நினைப்பதுண்டு. ஆனால் உலகின் தலைசிறந்த வீரர்கள் நினைப்பதோ வேறு மாதிரி. அவர்கள் எதிரணி பந்து வீச்சாளனின் மனோ திடத்தை சீண்டிப் பார்க்கும் தாக்குதலில் இறங்குவார்கள். இதற்கான காரணம் என்ன ?

கிரிக்கெட் விளையாட்டுக்கு மனோதிடம் மிக முக்கியம். ஒரு பந்து வீச்சாளனோ அல்லது துடுப்பாட்ட வீரனோ தன்மேலும் , தன்னுடைய திறமையின் மேலும், தன்னுடைய Timing ன் மேலும் வைக்கும் நம்பிக்கைதான் அவனை சிறப்பாக விளையாட வைக்கிறது. அதைத்தான் சங்காவின் அதிரடி ஆட்டத்தில் நான் காண்கிறேன். அதாவது தன்னுடைய சக வீரர்களை அடுத்தடுத்து ஒரு பந்து வீச்சாளர் ஆட்டமிழக்க வைக்கிறார் என்பதைக் காணும் சங்கா அந்த வீரரின் பந்து வீச்சை எதிர்த்து ஓர்மத்துடன் ஆட ஆரம்பிப்பதன் காரணம் அந்தப் பந்து வீச்சாளரை தன்னம்பிக்கையைக் குலைப்பதற்கே அதாவது அந்தப் பந்துவீச்சாளரானவர். தான் தொடர்ந்து எடுக்கும் விக்கட்டுக்களால் தன்னம்பிக்கையில் உச்சத்தில் காணப்பட்டு மீண்டும் மீண்டும் மிகத் தன்னம்பிக்கையுடன் பந்து வீசத் தொடங்குவார். இந்த வேளையில் அவரை எதிர்த்து மூர்க்கமாக ஆடாமல் விட்டால் தொடர்ந்து அந்தப் பந்து வீச்சாளரின் கையே ஓங்கத் தொடங்கி மேலும் அதிக விக்கட்டுக்களை இழக்க வேண்டிய நிலைமை கட்டாயமாக ஏற்படும். எனவே இப்படியான மனநிலையை தகர்த்தெறிய வேண்டியது ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரனின் கடமையாகும். இதனைத்தான் உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்கள் செய்து வந்துள்ளார்கள் அதைத்தான் சங்கா செய்கிறார். இது ரிஸ்க்கான விஷயம்தான் .அது சங்காவுக்கும் நிச்சயமாகத் தெரியும். ஆனால் வேறு வழியில்லை.

இதனை உறுதிப்படுத்துவது போலவே தனது 400 ஆவது போட்டியில் சதம் அடித்தார் சங்கா. சங்ககார களம் இறங்குவதற்கு முன்னர் இலங்கையின் ஆரம்பத் துடுப்பாட்ட இணையான டில்சானும். திரிமன்னேயும் இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களைக் கடந்திருந்தாலும் ஓட்டச் சராசரி மிகக் குறைவானதாகவே இருந்தது. ஆனால் திரிமன்னே ஆட்டமிழந்ததும் நிலைமை மாறியது. சங்கா அதிரடி அவதாரம் எடுத்து பந்தை எல்லைக்கோட்டுக்கு விரட்டத் தொடங்கினார். ஒருமுனையில் சங்காவின் அதிரடி தொடர அதைப்பார்த்த டில்சானும் அதுவரை கடைப்பிடித்த நிதானத்தைக் கைவிட்டு தானும் ஆவேச ஆட்டத்தில் இறங்கினார். இதனால்தான் இலங்கையின் ஓட்ட எண்ணிக்கை 332 ஐத் தொடமுடிந்தது.

சங்ககார தான் மட்டுமல்லாது அணியையும் பலமாக்கும் நோக்கோடு விளையாடும் வீரர் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபணம் ஆகியிருக்கிறது.

**தன்னுடைய சக வீரர்களை அடுத்தடுத்து ஒரு பந்து வீச்சாளர் ஆட்டமிழக்க வைக்கிறார் என்பதைக் காணும் சங்கா அந்த வீரரின் பந்து வீச்சை எதிர்த்து ஓர்மத்துடன் ஆட ஆரம்பிப்பதன் காரணம் அந்தப் பந்து வீச்சாளரை தன்னம்பிக்கையைக் குலைப்பதற்கே அதாவது அந்தப் பந்துவீச்சாளரானவர், தான் தொடர்ந்து எடுக்கும் விக்கட்டுக்களால் தன்னம்பிக்கையில் உச்சத்தில் காணப்பட்டு மீண்டும் மீண்டும் மிகத் தன்னம்பிக்கையுடன் பந்து வீசத் தொடங்குவார். இந்த வேளையில் அவரை எதிர்த்து மூர்க்கமாக ஆடாமல் விட்டால் தொடர்ந்து அந்தப் பந்து வீச்சாளரின் கையே ஓங்கத் தொடங்கி மேலும் அதிக விக்கட்டுக்களை இழக்க வேண்டிய நிலைமை கட்டாயமாக ஏற்படும், எனவே இப்படியான மனநிலையை தகர்த்தெறிய வேண்டியது ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரனின் கடமையாகும்.**

## விஜய் ஸ்ருதிஹாசன் பாடல்

புலி படத்தில் விஜய்யுடன் பாடப் போகும் ஸ்ருதிஹாசன் - இளைய தளபதி விஜய் புலி படத்தின் படப்பிடிப்பில் தீவிரமாக நடித்து வருகிறார். சமீபத்தில் தான் இந்தப்படத்தின் இசை உரிமையை சோனி நிறுவனம் கைப்பற்றியுள்ளது. இந்த நிலையில் படத்தின் இசையமைப்பாளர் தேவிஸ்ரீ பிரசாத் ஏற்கனவே விஜய்யின் பல படங்களுக்கு இசையமைத்தவர், சிம்புதேவன் - தேவியின் ஆலோசனை படி ஸ்ருதிஹாசனுடன் விஜய்யை பாட வைக்கலாம் என்று ஐடியா வை விஜய்யிடம் சொன்ன போது அவரும் சம்மதம் தெரிவித்துள்ளாராம்.





## ஜோடி

இத்தனை நாளாக இப்படி ஒ
உருவாகவில்லை.. ஏன் யாரு
வரவில்லை.. அது பற்றிய ஒ
எதுவும் வெளியாகவில்லையே
விக்ரம்-நயன்தாரா பற்றித்தா
நயன்தாரா சினிமாவுக்கு வந்
வருடங்கள் உருண்டோடிவிட்
முன்னணி நடிகர்களுடனும் ந
இன்னும் இணைந்து நடிக்காத
விக்ரமும் தான். கமல் படத்தி
வரும் என சொல்லமுடியாது.
ஆனால் விக்ரம் படத்தில் நய
இன்னும் ஆச்சரியம். சரி.. பே
இப்போதாவது அதனை உரு
இயக்குநருக்காவது தோன்றிய
தான்.
ஏ.ஆர்.முருகதாசின் சிஷ்யர்
அறிமுகமாகும் படத்தில் விக்ர
தற்போது விஜய்மில்டனின் இ
படத்தில் நடித்துவரும் விக்ரம்
த்தில் நடிக்க இருக்கிறா
த்தில் நயன்தாராவுட

## ஆர்யாவுடன் ஸ்ருதிஹாசன்!

பி.வி.பி. தயாரிப்பு நிறுவனம் தயாரிக்கும் புதிய படத்தில் ஆர்யா நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இந்தப் படத்தில் ஆர்யாவுக்கு ஜோடியாக அனுஷ்கா நடிக்கிறார். மேலும், மாஸ்டர் பரத், ஊர்வசி ஆகியோரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். இந்தப் படத்தில் ஸ்ருதிஹாசன் கௌரவ தோற்றத்தில் நடிக்கிறார்.

தமிழ், தெலுங்கு என இருமொழிகளிலும் உருவாகும் இந்தப் படத்தை தெலுங்கு இயக்குநரான பிரகாஷ் கொவேலமுடி இயக்குகிறார். இவர் தெலுங்கு உலகின் பிரபல இயக்குனரான ராகவேந்திரா ராவின் மகனாவார். தெலுங்கில் சித்தார்த் - ஸ்ருதிஹாசன் நடித்த 'ஓன்ஸ் அப்பான் ஏ' வாரியர் உள்ளிட்ட பல படங்களை இயக்கியவர். தமிழுக்கு இந்த படத்தின் மூலம் அறிமுகமாகிறார். படத்துக்கு இன்னும் பெயர் வைக்கவில்லை.

படத்துக்கு நீரவ் ஷா ஒளிப்பதிவு செய்கிறார். கீரவாணி இசையமைக்கிறார். கதை மற்றும் திரைக்கதையை பிரபல எழுத்தாளர் கனிகா திலோன் என்பவர் எழுதுகிறார். இவர் திரையுலகில் ஷாருக்கான் நடிப்பில் பிரம்மாண்டமாக உருவான ரா ஒன் படத்துக்கும் திரைக்கதையாசிரியராக பணியா





## விரைவில் காஞ்சனா 2

சென்னை, பெப்ரவரி 26 காஞ்சனா படத்துக்குக் கிடைத்த பெரும் வரவேற்புக்குப் பிறகு லாரன்ஸ் இயக்கத்தில் விரைவில் காஞ்சனா 2 திரைப்படம் வெளியாகவுள்ளது. காஞ்சனா திரைப்படம் சிறுவர் முதல் பெரியவர் என அனைவருமே பார்த்து ரசித்து மகிழ்ந்த படமாகும். இப்போது அதன் தொடர்ச்சியாக மூன்றாவது பாகத்தை லாரன்ஸ் இயக்குகிறார்.

இந்தப் படத்துக்கு முதலில் 'முனி 3 கங்கா" என்று பெயர் சூட்டப்பட்டது.

ஆனால், தற்போது இந்தப்படத்தின் தலைப்பைக் காஞ்சனா-2 ஆக மாற்றி விட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

அதிக பொருள்செலவில் திகில் படமாகத் தயாராகியுள்ள இந்தப் படத்தைக் காஞ்சனா போலவே வித்தியாசமான மிரட்டலான படமாக அமையும் என நம்பப்படுகின்றது. இந்தப் படத்திலும் லோரன்சே நாயகனாகவும் நாயகிகளாக டாப்ஸி மற்றும் நித்யா மேனன் நடிக்கின்றனர்.

மேலும், ஸ்ரீமன், கோவை சரளா ஆகியோரும் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்து வருகிறார்கள். பிரம்மாண்டமாக உருவான ரா ஒன் படத்துக்கும் திரைக்கதையாசிரியராக பணியாற்றியுள்ளார்.

# ஜோடி சேரும் விக்ரம் நயன்தாரா





...ன நாளாக இப்படி ஒரு தயா... ஏன் ...கவில்லை.. ஏன் யாரும் உருவாக்க கூட முன் ...லை.. அது பற்றிய ஒரு கிசுகிசு மாதிரி கூட செய்தி வெளியாகவில்லையே கவனித்தீர்களா..? ...நயன்தாரா பற்றித்தான் சொல்கிறோம்.

...ாரா சினிமாவுக்கு வந்து விளையாட்டுப்போல பத்து ...ள் உருண்டோடிவிட்டன. கிட்டத்தட்ட அனைத்து ...ி நடிகர்களுடனும் நடித்துவிட்ட நயன்தாராவுடன் இணைந்து நடிக்காதவர்கள் என்றால் அது கமலும் ... தான். கமல் படத்தில் யாருக்கு, எப்போது வாய்ப்பு ...ன சொல்லமுடியாது.

... விக்ரம் படத்தில் நயன்தாரா நடிக்காததுதான் ... ஆச்சரியம். சரி.. போனது போகட்டும் விடுங்கள்.. ...ாவது அதனை உருவாக்கும் ஐடியா ஒரு அறிமுக ...ருக்காவது தோன்றியதே, அந்தவகையில் சந்தோசம்

...ருகதாசின் சிஷ்யர் ஆனந்தராஜ் இயக்குநராக ...ாகும் படத்தில் விக்ரம் நயன்தாரா தான் ஜோடி. ... விஜய்மில்டனின் இயக்கத்தில் 'பத்து ...றதுக்குள்ள ...நடித்துவரும் விக்ரம் அடுத்து கௌதம் ...ன்... ...ல் நடிக்க இருக்கிறார். அதை முடித்து...டு ...த்தில் நயன்தாராவுடன் இணைந்து நடிப்பார் ...ன

## நாலு போலிஸும் நல்லா இருந்த ஊரும்

நாலு பொலிஸும் நல்லா இருந்த ஊரும் என தலைப்பிலேயே படத்தின் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார் இயக்குநர் என்.ஜே.ஸ்ரீகிருஷ்ணா. பொலிஸ் நிலையம் இருந்தும் ஊரில் பிரச்சனையே இல்லையென்றால் எப்படி இருக்கும் என்கிற யோசனைக்கு இந்தப்படம் மூலம் கற்பனை வடிவம் கொடுத்திருக்கிறார். படத்தின் கதாநாயகன் அருள்நிதி பொலிஸ். கதாநாயகி ரம்யா நம்பீசனா ஆசிரியை.

அன்புச்செல்வன்-மாயா பாணியில் பொலிஸுக்கும் ஆசிரியை காதல் ஏற்படாதா என்ன நினைத்தால் அங்கே தான் சிக்கலே ஆரம்பிக்கிறதாம்.. அருள்நிதிக்கும், ரம்யாவுக்கும் சின்னவயதில் இருந்தே காதல் தான். ஆனால் சொல்லிக்கொள்ள மாட்டார்கள். இப்படியே இதயம் முரளி மாதிரி சொல்லாமலேயே தவிக்கும் அருள்நிதி, ரம்யாவை கண்டவுடனே ஜெய்ஹிந்த் கவுண்டமணி மாதிரி கனவுலகத்துக்குள் போய்விடுவாராம். மொத்தத்தில் நகைச்சுவையுடன் சேர்ந்து காதல் காட்சிகளும் கலகலப்பாக இருக்கும் என்கிறார் இயக்குநர் ஸ்ரீகிருஷ்ணா.

# திருமணம் எப்போது? – அஞ்சலி பதில்!



கற்றது தமிழ், படத்தின் மூலம் தமிழுக்குள் அடியெடுத்து வைத்தவர் அஞ்சலி. தொடர்ந்து அங்காடி தெரு, தூங்கா நகரம், மங்காத்தா, கலகலப்பு என பல படங்களில் நடித்தவர் திடீரென இடையில் ஏற்பட்ட சில சொந்த வாழ்க்கை பிரச்சனையால் சினிமாவை விட்டு ஒதுங்கினார்.

பிறகு தெலுங்கில் கீதாஞ்சலி தொடர்ந்து தமிழில் அப்பா டக்கர், மாப்பிள்ளை சிங்கம் போன்ற படங்கள் மூலம் தமிழுக்குள் ரீஎண்ட்ரி கொடுத்தார். பின் இடையில் அஞ்சலிக்கு கல்யாணம் என வதந்திகள் பரவியது. இதற்கு இல்லை என மறுப்ப தெரிவித்த அஞ்சலி தற்போது மீண்டும் அதை உறுதி செய்துள்ளார்.

ரகசிய திருமணம் செய்துகொள்ளும் அளவிற்கு எனக்கு அவசியம் இல்லை. மேலும் எனக்கு யாருடனும் திருமணம் ஆகவில்லை. உண்மையில்லாத விஷயம் குறித்து எத்தனை நாளைக்குத் தான் பதில் சொல்ல முடியும் எனவே தான் அமைதியாகிவிட்டேன் என கூறியுள்ளார் அஞ்சலி.



# குழப்பத்தில் ரஜனி ரசிகர்கள்

லிங்கா பட வெளியீட்டுக்குப் பிறகு தற்போது வரை பல சோதனைகளை சந்தித்து வருகிறார் ரஜினி.

இந்தநிலையில் ரசிகர்கள் அடுத்த படத்தின் அறிவிப்பை வெளியிடுங்கள். இந்த பிரச்சினையெல்லாம் மறைந்துவிடும் என்று சமூக வலைதளங்களில் கூறி வருகின்றனர்.

லிங்கா நடித்துக் கொண்டு இருந்த போதே அடுத்து ஷங்கர், கே. வி. ஆனந்த், ராஜமௌலி என்று வரிசையாக அடுக்கி கொண்டே போனது கோடம்பாக்கம்.

ஆனால் லிங்கா வெளியீட்டுக்குப் பிறகு அமைதி காத்து கொண்டே இருக்கிறார். இருப்பினும் அடிக்கடி ஷங்கர் மட்டும் சந்தித்து வருவதாக கூறப்படுகிறது.

# தெரிந்ததும் தெரியாததும்

- ஆண் குதிரைக்கு 40 பற்கள்.
- பெண்களின் இதயத்துடிப்பு ஆண்களின் இதயத்துடிப்பு வேகத்தைவிட அதிகமானது.
- நமது வாயிலிருந்து ஒரு நாளைக்கு 1 முதல் 1.5 லீற்றர் வரை உமிழ் நீர் சுரக்கிறது.
- உலகிலேயே அதிகம் பாடப்படும் பாடல், பிறந்தநாள் வாழ்த்துப் பாடலான 'ஹேப்பி பர்த்டே டூ யூ 'தான்.
- மோனோ ரயிலைக் கண்டுபிடித்த நாடு அயர்லாந்து.
- ஒருவன் 1 மணி நேரத்தில் 4 மைல் நடந்தால், 10 பேர் எத்தனை மைல் நடப்பர்? -நாலு மைல்.
- யானைக்கு பற்கள் உண்டு 4 பற்கள் உண்டு.
- நன்றி கூறுவதை சட்டமாக்கியிருக்கும் நாடு சுவீடன்.





இந்தஇரு படங்களிலும் இரு படங்களிலும் 05 வித்தியாசங்கள் உள்ளன. கண்டு பிடியுங்கள்.



## வர்ணம் தீட்டுங்கள்

**ஒரு எவர்சில்வர் கரண்டியை கப்பில் வைத்துவிட்டு, பின்னர் சூடான பானத்தை ஊற்றினால் கப் உடையும் வாய்ப்பு குறையும். ஏன்?**



பெரும்பான்மையான உலோகங்களும் கண்ணாடி அல்லது பீங்கானை விட வெப்பத்தை அதிக மாகக் கடத்தும் தன்மையுள்ளவை. ஒரு எவர்சில்வர் அல்லது வெள்ளிக் கரண்டியை கப்பினுள் வைத்துவிட்டு பின்னர் சூடான பானத்தை ஊற்றும்போது அந்தக் கரண்டி பெருமளவில் வெப்பத்தை கிரகித்துக் கொள்வதால் கப் சூடாவதும் விரிவடைவதும் குறைகிறது. எனவே கப் உடையும் வாய்ப்பும் கணிசமாக குறைந்து போகிறது.

## நல்ல நண்பன் கதை

ஒரு ஊரில் ஒரு இளைஞன் இருந்தான். அவன் எப்போதும் கோபப்படும் சுபாவத்தை கொண்டவன். ஒரு முறை அவனது நண்பன் அவனிடம் ஆணிகள் நிரம்பிய பையை கொடுத்தான். நீ எப்போதெல்லாம் கோபப்படுகிறாயோ அப்போதெல்லாம் ஒரு ஆணியை இந்த சுவரில் அடி என்றான்,

இளைஞனும் அப்படியே செய்து வந்தான். முதல் நாள் அவன் 35 ஆணிகளை அடித்தான், மறு நாள் 30 என்று இப்படியாக குறைந்து கொண்டு வந்தது. சில நாள்கள் கழித்து அவன் கோபப்படுவதை நிறுத்தி விட்டான். அதனால் அவன் ஆணிகளை அடிக்கவில்லை. அதை அவனது நண்பன் பார்த்துப் பெருமை பட்டான். அவனை முழுவதுமாக திருத்த ஆசைப்பட்ட அவன் அவனிடம் அடித்த ஆணிகளை பிடுங்கச் சொன்னான்.

இளைஞனும் அப்படியே செய்தான். அதை பார்த்த அவன் நண்பன் அவனிடம் சொன்னான். என் நண்பனே. நீ நான் சொன்னபடியே எல்லா வேலைகளையும் செய்தாய். இப்போது நீ அடித்த ஆணிகள் பிடுங்கப்பட்டு விட்டன. ஆனால் ஆணி அடித்த இடங்களில் உள்ள ஓட்டைகளைப் பார்.இந்த சுவர் முன்னர் இருந்த மாதிரி இல்லை. எல்லா இடங்களிலும் ஓட்டைகள் உள்ளன. அது போலத்தான் நீ கோபத்தில் சொல்லும் வார்த்தைகளும், செயல்களும் ஒரு வடுவை உண்டாக்கி விடும். நீ என்னதான் உன் செயல்களுக்கு மன்னிப்புக் கேட்டாலும் அந்த வடு மாறாது, மறையாது. நீ வார்த்தைகளால் உண்டாக்கும் வடுவுக்கும், செயல்களால் உண்டாக்கும் வடுவுக்கும் எந்த ஒரு வித்தியாசமும் இல்லை.

என் நண்பனே, உண்மையைச் சொல்லப் போனால் நண்பர்கள் ஒரு அரிய பொக்கிஷங்கள். அவர்கள் உன்னைச் சிரிக்க வைப்பார்கள். உன் வாழ்க்கையில் நீ உயர தட்டிக் கொடுப்பார்கள். நீ சொல்வதை காது கொடுத்துக் கேட்பார்கள். நீ நல்ல நிலைமைக்கு வரும் போது உன்னைப் புகழ்வார்கள். அதையும் இதைய பூர்வமாக செய்வார்கள். அதை தான் நான் இப்போது செய்தேன்,

என்னை மன்னித்து விடு, நான் உன்னில் ஏதாவது வடுவை உண்டாக்கி இருந்தால்..

## மயிலே குயிலே

மயிலே குயிலே
மயிலே, மயிலே ஆடிவா
மக்காச் சோளம் தருகிறேன்!
குயிலே, குயிலே பாடிவா
கோவைப் பழங்கள் தருகிறேன்!


பச்சைக் கிளியே பறந்துவா
பழுத்த கொய்யா தருகிறேன்
சிட்டுக் குருவி நடந்துவா
சட்டை போட்டு விடுகிறேன்!

ஓடைக் கொக்கு இங்கே வா
ஓடிப் பிடித்து ஆடலாம்!
மாடப் புறாவே இறங்கிவா
மடியில் குந்திப் பேசலாம்!





# குடிகாரக் கணவன்



நீ
செத்தாதான்யா நிம்மதி.

குடிகாரக் கணவனின்
ரகளை பொறுக்காத
கணங்களில்
ரணங்களோடு
கதறுவாள் மனைவி.

செத்தும் போவான்.
ஒருநாள்

அடிப்பதற்குக் கூட
ஆளில்லையே என
தொடரும் அவள் அழுகை.

-முநலி

-செல்வா

# காதல்மலர உதவிசெய்

எப்பாடு பட்டேனும்
அவளைக் கரைத்துவிடு ...!

காதல் கசக்குமென்ற
அவளின் எண்ணத்தை
தவிடு பொடியாக்கிவிடு ...!

காதல் திகட்டாத
தெள்ளமுதென்று
அவளுக்குக் காட்டிவிடு ...!!

கொளுத்தும் வெயிலின்
குளிர்தருவின் நிழலே
காதலெனச் சொல்லிவிடு ...!!

இதமான தென்றலின்
இனிதுணர் இன்பமே
காதலெனத் தெரிவித்திடு ...!!

காதலென்றால்
காததூரம் ஓடுமவளை
என்னருகில் சேர்த்துவிடு...!!

காதலென்ற ஒற்றைச்சொல்
கேட்டாலே செவிபொத்தும்
மடமையை மாற்றிவிடு ....!!

மருளுமவள் காந்த நயனங்களை
என்னிரும்பு விழிகளாலீர்த்திட
அவள்நோக்கை என்புறம்திருப்பி
காதல்மலர உதவிசெய் ....!!!

# கவிதைப்புனல்

# இதயத்தில் ஊடுருவிய வாள்

இதயத்தில் ஊடுருவிய வாள்
விளையாட்டு
என்று தான் கருதினேன்1
முதலில்.

முதல் சுவடிலேயே
சேருமிடத்தைக்
கணிக்க முடிந்திருக்கவில்லை
என்னால்.

உன்
பாதக் கிளிகள்
என்னிடம் வந்தே
இளைப்பாறும் என்றிருந்தன
என் இறுமாப்புகள்.

தொடக்கமும்
முடிவுமற்றுப் போன
ஒரு
வட்டக் குடுவைக்குள்
நீச்சலடித்துக் கொண்டிருந்தது
உனைச் சார்ந்த
என் நினைவுகள்.

நான்
உனக்களித்த சிறகை
நீ
என்னை விட்டுப் பறந்து போகவே
பயன்படுத்தினாய்
என்பதும்
எல்லோருக்கும் தெரிந்தபின்பே
எனக்குத் தெரிந்தது.

மகன் செய்த தவறுகளை
காலம் கடந்து அறிந்து
கதிகலங்கும்
தாயைப் போல.
இதயத்தை ஊடுருவியது வாள்.

கண்களை விட்டுப் பறந்தன
ஓராயிரம் பறவைகள்.
கால்களை விட்டு
வெளியேறின என் காலங்கள்.

இப்போது
என்
முதல் சுவடின் நிழலில்
கலைந்து கொண்டிருக் து
உன் கடைசிச் சுவடு.

-செல்வன்

*நினைக்கத்தெரிந்த உள்ளத்துக்கு*
*மறக்கவும் தெரியவில்லை*
*குழப்பமா? கலக்கமா?*
*காதலானா? கணவனா?*
*தொலைபேசி அழைப்பு*
*தொலைபேசி அழைப்பு*
*தொலைபேசி அழைப்பு*

-நவீனன்



# காதலனா? கணவனா?



எனக்கான முகமூடி
கனவு மூட்டைகளை
சுமந்துகொண்டு
நீண்டதொரு பயணம்,
ஏதும் இலக்கின்றி.
சாலையெங்கும் சுற்றித்திரிந்தன
மனிதஉடல்கள்
பல வண்ணங்களில்
மனித முகங்கள் .
நாற்றமெடுத்து அழியபோகும்
சதைபிண்டங்களை
தூக்கிச்செல்லும் பிணங்களோடு
சந்திப்புகள்.
சந்திப்புகள் சிலதூரங்களில்
பாதை மாறின.
ஏன்? என்ற கேள்வியோடு
பயணத்தடை.
பதிலின்றி பயணம்
தொடர அச்சம்.
தெரிந்துகொள்ள
முயற்சித்து அதிர்ச்சி.
அனைத்தும் முகமூடி
போர்த்தியவை.
புரிந்து கொண்டேன்
முகமூடியின் அவசியத்தை.
பகட்டான முகமூடியின்றி
பயணத்தை தொடரமுடியாது.
எங்கே எனக்கான முகமூடி?

-ஹரிணா

# ராஸிக்-கொலை: துலங்குமா மர்மம்

- ருக்கி பெர்னான்டோ, தமித் சந்திமால்

Groundviews தளத்தில் Pattani Razeek: No justice 5 years after abduction and killing என்ற தலைப்பில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம்.



இலங்கையின் நன்கு அறியப்பட்ட மனித உரிமைப் பாதுகாவலர்களில் ஒருவரான பட்டாணி ராஸிக் கடத்தப்பட்டு 2015 பெப்ரவரி 11ஆம் திகதி ஐந்து வருடங்கள் நிறைவடைகின்றன. அவருடைய உடல் 2011 ஜூலை 28ஆம் திகதி அன்று தோண்டியெடுக்கப்பட்டது. கடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் சமூக நம்பிக்கை நிதியம் (CTF) (www.ctfsrilanka.org) நிதியம் என்ற அமைப்பின் முகாமைத்துவ அறங்காவலராகவும், மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான ஆசிய மன்றத்தின் (FORUM ASIA) நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும் இருந்து வந்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் குறித்து இதுவரையில் துப்புத் துலக்கப்படவில்லை. இது தொடர்பாக கைது செய்யப்பட்ட ஒரு முக்கியமான சந்தேக நபர் விடுவிக்கப்பட்டதுடன், பின்னர் ஒரு சாட்சியமாக மாறினார். இதில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் கருதப்படும் இன்னொரு நபர், ஒரு சந்தேக நபராக பெயர் குறிக்கப்படவோ அல்லது கைது செய்யப்படவோ இல்லை. சந்தேக நபராக இனங்காணப்பட்ட மூன்றாவது நபர் கைது செய்யப்பட்டாரா, இல்லையா என்பது தெரியாது. இது தொடர்பான முக்கியமான பல சான்றுகள் ஆழமாக பரிசீலனைக்கு உட்படுத்தப்படவில்லை போல் தெரிகிறது. பொலிஸார் புலன் விசாரணையையும், நீதிமன்றத்தில் சாட்சியங்க ளை நெறிப்படுத்துவதனை யும் மிக மோசமான விதத்தில் கையாண்டு வருகின்றனர். உடலை மீண்டும் தோண்டி எடுப்பதில் இடம் பெற்ற தாமதம், மரணத்துக்கான உண்மையான காரணத்தை நிர்ணயித்துக் கொள்வதனை சாத்தியமற்றதாக்கி இருக்கின்றது என பிரேத பரிசோதனை அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

### நீதிமன்ற வழக்குகள்

தொடக்கத்தில் ராஸிக் அவர்களின் தலைமறைவு தொடர்பாக புத்தளம் மற்றும் பொலன்னறுவை ஆகிய நீதிமன்றங்களில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. ஒரு சில வழக்குகள் முடிக்கப்பட்டதுடன், ஏனையவை இப்பொழுது தனியொரு வழக்காக ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. பொலன்னறுவை மாஜிஸ்ரேட் நீதிமன்ற வழக்கு இல. 92264. வழக்கின் அடுத்த விசாரணைத் திகதி 2015 பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி ஆகும்.

புத்தளம் மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தின் BR177/10/P இலக்கம் கொண்ட பொலிஸ் வழக்கு, பொலன்னறுவை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தின் BR177/10/P வழக்கு மற்றும் பொலன்னறுவை மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தின் BR177/10/P வழக்கு என்பன மேலே குறிப்பிடப்பட்ட ஒரு வழக்காக ஒன்றுதிரட்டப்பட்டன. ராஸிக் அவர்களின் சகோதரருக்கும் நிஹ்மத் (இந்தக் கடத்தல் மற்றும் கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதாக ராஸிக் அவர்களின் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் தோழர்கள் சந்தேகிக்கும்) என்பவரின் உறவினர்களுக்கும் இடையில் காணித் தகறாறு இடம்பெற்று வந்துள்ளது. முந்தல் பிரதேசத்தில் ராஸிக் அவர்களின் வீட்டுக்கு அருகில் வசித்து வந்த உறவினருக்குமிடையிலான காணித் தகராறு தொடர்பான வழக்கு (இல. 57913) புத்தளம் நீதிமன்றத்தில் முடிவாக்கப்பட்டுள்ளது.

### DNA, பிரேத பரிசோதனை அறிக்கைகள் மற்றும் மரணச் சான்றிதழ்

ஒரு நீதிமன்ற ஆணையை அடுத்து 2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ராஸிக் அவர்களின் உடலிலிருந்து பெறப்பட்ட நான்கு பற்கள், தசை மாதிரிகள் மற்றும் ஒரு எலும்பு என்பனவும், ராஸிக்கின் மகன் ரிக்ஷானிடமிருந்து பெறப்பட்ட இரத்த மாதிரியும் DNA பரிசோதனைக்கென கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினால் (CCD) Jene Tech Computer Lab ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. DNA அறிக்கை தாமதமடைந்த பொழுது, ரிக்ஷான் 2012 பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி இது குறித்து Jene Tech நிறுவனத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அப்பொழுது DNA அறிக்கை இரு வாரங்களில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அவரிடம் தெரிவிக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும், நீதிமன்றக் கட்டளையில் 9 மாதங்களின் பின்னர், 2012 மே மாதம் 29ஆம் திகதியன்று DNA பரிசோதனை வெற்றியளிக்கவில்லை என நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப்பட்டது. உயர் ஈரப்பதன் அல்லது உயர் வெப்பநிலை போன்ற சூழல் காரணிகளை நீண்ட நேரம் எதிர்கொண்டு வந்தமை மற்றும் உயிரியல் பொருள்களின் குறைபாடு போன்ற காரணங்களினால் எலும்பு, தசைகள் மற்றும் பற்கள் என்பவற்றில் அடங்கியிருந்த DNA கூறுகள் சீரழிவுக்குள்ளாகியிருக்க முடியுமென கூறப்பட்டிருந்தது.

2011 ஜூலை மாதம் பிரேத பரிசோதனை நடத்தப்பட்ட பின்னர், பிரேத பரிசோதனை அறிக்கை 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி வெளியிடப்பட்டது. உடல் உயர் அளவுக்கு அழுகிய நிலையில் இருந்து வந்த காரணத்தினால் மரணத்துக்கான சரியான காரணத்தை நிர்ணயித்துக் கொள்வது கடினமானது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது போல் தெரிகின்றது. எவ்வாறிருப்பினும், வாயில் துணி அடைக்கப்பட்டமை, மூச்சுத் திணற வைக்கப்பட்டமை, கயிற்றினால் குரல்வளை நெரிக்கப்பட்டமை, கையினால் குரல்வளை நெரிக்கப்பட்டமை என்பன மரணத்துக்கான காரணங்களாக இருந்து வர முடியும் என்றும் கூறப்பட்டிருந்தது.

ஒக்ரோபர் 28ஆம் திகதியே இதற்கான மரணச் சான்றிதழ் வழங்கப்பட்டது. அந்த மரணச் சான்றிதழிலும் மரணத்துக்கான காரணத்தை நிர்ணயித்துக் கூற முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாவது சந்தேக நபரை விடுவித்தமையும், அவரை ஒரு சாட்சியாக ஆக்கியமையும்

முதலாவது சந்தேக நபரான சஹாப்தீன் நௌஷாத் என்ற நபர் கைது செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதுடன், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் ஒரு சாட்சியாக பெயர் குறிக்கப்பட்டார். அந்தத் திணைக்களம் 2012 ஏப்ரல் 4ஆம் திகதியிட்ட கடிதம் ஒன்றின் மூலம் முதலாவது சந்தேக நபருக்கு எதிராக தாம் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இனிமேல் எதிர்பார்க்கவில்லை என்பதனையும், அதன் காரணமாக அவரை விடுவிக்க முடியும் என்பதனையும் பொலன்னறுவை மஜிஸ்ரேட் நீதவானுக்கு தெரிவிக்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தது. 2012 ஏப்ரல் 24ஆம் திகதியிடப்பட்ட மற்றொரு கடிதத்தின் மூலம் சஹாப்தீன் நௌஷாத் என்ற நபரை விடுவிப்பதற்கு தீர்மானித்திருப்பதாகவும், அவரை வழக்கின் ஒரு சாட்சியாக பெயர் குறித்திருப்பதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவித்திருந்தது.

நௌஷாத் என்பவர் ஒரு சந்தேக நபர் என்ற நிலையிலிருந்து சாட்சியாக மாற்றப்பட்டமை, அமைச்சர் பதியுதீனுடன் அவர் கொண்டிருந்த தொடர்புகள் காரணமாக இடம்பெற்றதா என்பது குறித்த சந்தேகங்கள் நிலவி வருகின்றன. புத்தளம் உயர்நீதிமன்றத்தில் முடிவாக்கப்பட்ட (திருத்தல் மனு, வழக்கு இல. (HCR/08/10) முன்ஜாமீன் மனுவில், தான் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் ஒரு நெருங்கிய கூட்டாளியாக இருந்து வரும் விடயத்தை நௌஷாத் ஏற்றுக் கொண்டிருந்ததுடன், 2010 பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி ராஸிக்கை சந்தித்திருந்தமையையும், திரு. ராஸிக் காணாமல்போன நேரத்தில் அவர் அதே பிரதேசத்தில் (பொலன்னறுவையில்) இருந்தமையையும் ஏற்றுக் கொண்டிருந்தார்.

**நௌஷாத் என்பவர் ஒரு சந்தேக நபர் என்ற நிலையிலிருந்து சாட்சியாக மாற்றப்பட்டமை, அமைச்சர் பதியுதீனுடன் அவர் கொண்டிருந்த தொடர்புகள் காரணமாக இடம்பெற்றதா என்பது குறித்த சந்தேகங்கள் நிலவி வருகின்றன.**

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் நௌஷாத் 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி கைது செய்யப்பட்டதுடன், 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார், கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி 2012ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி பொலன்னறுவை மஜிஸ்ரேட் நீதவானிடம் சமர்ப்பித்த அறிக்கையின் பிரகாரம் (நீதிமன்ற வழக்கு இல. B/651/2011), ரூ. 20 மில்லியன் கப்பம் கோரியமை, விடுதலைப் புலிகள் இயக்கத்தினரைப் போல ஆள்மாறாட்டம் செய்தமை, பட்டாணி ராஸிக் காணாமல் போனமை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு நிதி சேகரித்தமை, அந்தப் பணத் தொகைகளை கொண்டு ஆயுதங்களைக் கொள்வனவு செய்தமை மற்றும் அரச படைகளுக்கு எதிராக யுத்தம் செய்வதற்கு சூழ்ச்சி செய்தமை என்பன நௌஷாதுக்கு எதிரான குற்றச்சாட்டுகளாக இருந்து வந்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான நௌஷாத்தின் தொடர்புகள், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு நிதி சேகரித்தமை மற்றும் அரசப் படைகளுக்கு எதிராக யுத்தம் செய்வதற்கு சூழ்ச்சி செய்தமை ஆகிய நௌஷாத் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் போலியாக சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் போல் தோன்றுகின்றன. ஏனெனில், இந்தக் காலப் பிரிவின் போது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட நபர்களுக்கு எதிராக வழமையாக இந்த மாதிரியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டி ருந்தன. இந்த சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள், ராஸிக்கின் தலைமறைவுடன் அவர் கொண்டிருந்த தொடர்பை குறைத்து மதிப்பிடுவதற்கு பங்களிப்புச் செய்திருக்க முடியும்.

கப்பத் தொகைகளைக் கோருவதற்காக அழைப்புக்களை எடுப்பதற்கு பயன்படுத்தப்பட்ட தொலைபேசி நௌஷாத்துக்குச் சொந்தமானது என்ற விடயத்தை வழக்கு விசாரணைகளின் போது அவரது சட்டத்தரணி ஏற்றுக் கொண்டிருந்தார். மேலும், நௌஷாத்துக்குச் சொந்தமான சிம் கார்டிலிருந்து எத்தகைய தொலைபேசி அழைப்புக்களும் எடுக்கப்படவில்லை என்றும் அவருடைய சட்டத்தரணி வாதிட்டார். ஆனால், பொலிஸ் புலனாய்வின் பொழுது கப்பத் தொகைகளைக் கோருவதற்கென பயன்படுத்தப்பட்ட சிம் அட்டைகள் ராஸிக்குக்குச் சொந்தமான அட்டைகள் என்ற விடயமும், நௌஷாத்துக்குச் சொந்தமான தொலைபேசியைப் பயன்படுத்தி கப்பத் தொகைகளைக் கோருவதற்கான தொலைபேசி அழைப்புக்கள் எடுக்கப்பட்டன என்ற விடயமும் தெரிய வந்தது (புத்தளம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பொலிஸ் வழக்கு PR/177/10P புத்தளம் நிலைய பொறுப்பதிகாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை). ராஸிக் கடத்தப்படுவதற்கு முன்னர் அவருக்கு வந்த பல தொலைபேசி அழைப்புக்கள் நான்கு இலக்கங்களிலிருந்து வந்தன என்பதனையும், அது தொடர்பான சிம் அட்டைகள் CTF அமைப்பின் அறங்காவலர் ஒருவரின் பெயரில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன என்ற விடயத்தையும் ராஸிக்கின் மகன் விசாரணைகளின் போது தெரிவித்தார். CTF இன் முன்முயற்சியொன்றான பிரஜைகள் கமிட்டியின் தலைவராக நௌஷாத் இருந்து வந்தார்.

நௌஷாதுக்கு எதிராக பல்வேறு சாட்சியங்கள் இருந்து வந்த போதிலும், அவர் விடுவிக்கப்பட்டமை குறித்து ராஸிக்கின் மகன் தனது எமாற்றத்தை தெரிவித்திருந்தார். தனது முன்ஜாமீன் விண்ணப்பப்பத்திரத்தில்



ராஸிக் கடத்தப்பட்ட தினத்தன்று தான் அவரைச் சந்தித்ததாகவும், அவர் காணாமல் போன அதே பிரதேசத்தில் (பொலன்னறுவையில்) தான் இருந்ததாகவும் நௌஷாத் ஏற்றுக் கொண்டிருந்த விடயத்தையும் இது உள்ளடக்குகின்றது.



# ராஸிக் கொலை: துலங்குமா மர்மம்

### ஏனைய சந்தேக நபர்கள்

அந்தச்சந்தர்ப்பத்தில் ஒரே ஒரு நபர் மட்டுமே குற்றம் சாட்டப்பட்டவராக பெயர் குறிக்கப்பட்டதுடன், அவருடைய பெயர் முஷ்தீன் என்பதாகும். அவர் ராஸிக்கை கடத்தியது தொடர்பாக ஒப்புதல் வாக்கு மூலம் அளித்திருந்தார். அவரும் 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார். அது ராஸிக்கின் சடலம் தோண்டி எடுக்கப்பட்ட பொழுது அவர் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், ராஸிக்கை கொலை செய்வதற்கான அவருடைய நோக்கம் தெளிவற்றதாக இருந்து வருவது போல் தெரிகின்றது. எனவே, இது தொடர்பாக முஷ்தீன் தனித்துச் செயற்படவில்லை என்றும், ராஸிக்கை தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கும் நபர்களின் ஆதரவு அவருக்குக் கிடைத்து வருகின்றது என்றும் ராஸிக்கின் உறவினர்கள் சந்தேகிக்கின்றனர். கடத்திச் சென்றவர்களின் கோரிக்கைகளுக்கூடாக இந்த விடயத்தை நிரூபிப்பதற்கு துணை சேர்க்க முடியும். ராஸிக் அவர்களின் மகன் பொலிஸாருக்கு வழங்கிய ஒரு வாக்குமூலத்தின் பிரகாரம், கடத்திச் சென்றவர்களின் கோரிக்கைகள் பின்வருவனவாகும்.

கடத்திச் சென்றவர்களுக்கான செலவுத் தொகையாக ரூ. 20 மில்லியன் செலுத்தப்படுதல் வேண்டும். குடும்பத்தினர் CTF சொத்துக்கள் தொடர்பான விபரங்களை வழங்குதல் வேண்டும். அறங்காவலர்கள் தமது பெயர்களிலிருக்கும் அனைத்துச் சொத்துக்களையும், முன்னைய அறங்காவலர்களில் ஒருவரான திரு. நிஹ்மத் என்பவரினால் அமைக்கப்பட்ட நுஜூம் டிரஸ்ட் என்ற பெயருக்கு மாற்றுதல் வேண்டும். இந்தக் கோரிக்கைகள், கடத்தல்காரர் (கள்) ராஸிக்கின் நடவடிக்கைகளை, முஷ்தீன் என்ற நபரிலும் பார்க்க அறிந்திருப்பார்கள் என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. ராஸிக்குக்கும் CTF அமைப்புக்கும் இடையில் நிலவி வந்த தொடர்பு குறித்து முஷ்தீன் அறிந்திருக்கவில்லை.

முதலாவது சந்தேக நபரான நௌஷாத் வழக்கின் ஒரு சாட்சியாக பெயர் குறிக்கப்பட்டிருப்பதும், நிஹ்மத் ஒருபோதும் ஒரு சந்தேக நபராக பெயர் குறிப்பிடப்படாததும் வியப்பூட்டுவதாகும். எனவே, முஷ்தீன் இந்த வழக்கின் பிரதான சந்தேக நபராக ஆக்கப்பட்டிருக்கின்றார். ராஸிக்கைப் பொறுத்தவரையில் முற்றிலும் ஒரு புதிய நபரான முஷ்தீன் வேலை இடத்தில் ராஸிக்கின் எதிரிகளின் அழுத்தம் இல்லாமல், ராஸிக்கை கொலை செய்திருப்பார் என்றும், மேலும் CTF தொடர்பாக தகவல்களைச் சேகரிப்பதற்கும், CTF நிதியங்களை மற்றொரு அமைப்புக்கு மாற்றுவதற்கும் அவர் செயற்பட்டிருப்பார் என்றும் நம்புவது கடினமாகும்.

CTF அமைப்புடன் சம்பந்தப்பட்டிருந்த நௌஷாத் மற்றும் நிஹ்மத் என்பவர்களால் முஷ்தீன் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருக்க முடியும் என ராஸிக்கின் உறவினர்கள் கருதுகின்றனர். நௌஷாத் மற்றும் நிஹ்மத் ஆகியோர் ராஸிக்குடன் பல்வேறு தகராறுகளையும் கொண்டிருந்தனர். கடத்தல்காரர்களின் கோரிக்கைகளில் ஒன்று CTF நிறுவனத்தின் சொத்துக்கள் தொடர்பான விபரங்களை வழங்க வேண்டும் என்பதும், அறங்காவலர் தமது பெயரில் இருக்கும் சொத்துக்களை நுஜூம் டிரஸ்ட் என்ற பெயரில் 2009ஆம் ஆண்டில் (CTF இன் முன்னைய பிரதம அறங்காவலராக) நிஹ்மத் என்பவரால் உருவாக்கப்பட்டிருக்கும் நம்பிக்கை நிதியத்துக்கு மாற்ற வேண்டும் என்பதுமாகும். எவ்வாறிருப்பினும், முந்தல் பொலிஸார் மற்றும் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோர் நிஹ்மத்திடமிருந்து பெறப்பட்ட இரண்டு வாய்மூலமான வாக்குமூலங்கள் தவிர, ராஸிக் காணாமல்போனமை தொடர்பாக நிஹ்மத்தின் தொடர்புகள் குறித்து எவ்வித புலனாய்வுகளும் நடத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

மேலும், CTF நிதியங்களை நிஹ்மத்தினால் அமைக்கப்பட்டிருந்த OED டிரஸ்ட் என்ற அமைப்புக்கு மாற்ற வேண்டும் என்ற கடத்தல்காரர்களின் கோரிக்கை தொடர்பாக பொலிஸார் மஜிஸ்ரேட் நீதவானுக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை எனத் தெரிகின்றது. பொலிஸாருக்கு வழங்கிய வாய்மூலமான வாக்குமூலங்களில் ராஸிக்கின் குடும்ப உறுப்பினர்கள் இந்த விடயத்தைக் குறிப்பிட்டிருந்த போதிலும், அவர்கள் இதனை அறிக்கையிடவில்லை.

ராஸிக் அவர்களின் காணாமல் போதலுக்கென பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வானின் சாரதியான முஹம்மத் ஷம்மி என்ற மற்றொரு சந்தேக நபரையும் பொலிஸார் இனங்கண்டிருந்தனர். ராஸிக் காணாமல் போனமை தொடர்பாக பொருத்தமான புலனாய்வுகளை நடாத்துவதற்கு போதியளவிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பது தெளிவற்றதாகவே இருந்து வருகின்றது. வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பும் பொழுது அவரை கைது செய்வதற்கு ஒரு கட்டளையை வழங்குமாறு பொலிஸார் நீதிமன்றத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்த போதிலும், இது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாகத் தெரியவில்லை.

நாம் அறிந்த வரையில், ராஸிக் அவர்களின் கடத்தல் மற்றும் கொலை தொடர்பாக தகவல்களை தெரிந்து வைத்திருந்தாகக் கருதப்படும் பின்வரும் நபர்களிடம் பொலிஸார் விசாரணைகளை நடத்தியிருந்ததாகவோ அல்லது அவர்களை நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தியதாகவோ தெரியவில்லை.

- இர்ஷாத், அமைச்சர் ரிசாத் பதியுத்தீனின் அப்போதைய நாடாளுமன்றச் செயலாளர். இவர் 2010ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ராஸிக் பாதுகாப்பு அமைச்சினால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

### ராஸிக் கடத்தப்பட்ட வாகனத்தில் சந்தேக நபரான முஸ்தீன் உடன் பயணித்த நபர்கள்

ராஸிக் காணாமல் போன தினத்தன்று அவரை பொலன்னறுவையில் சந்தித்திருந்தமையை ஏற்றுக்கொண்ட சந்தேக நபரான நௌசாத்துடன் பிரயாணம் செய்த ஆள்கள். நௌசாத்தின் கூற்றின் பிரகாரம், அப்பொழுது அமைச்சர் பதியுத்தீன் தலைமையில் இருந்து வந்த மீள்குடியேற்ற அமைச்சுக்குச் சொந்தமான ஒரு வாகனத்தில் அவரும் இன்னும் பலரும் பயணித்துக் கொண்டிருந்தனர்.

### பொலிஸ் புலனாய்வுகளிலும், வழக்கை முன்னெடுத்துச் செல்வதிலும் பொலிசாரின் தரப்புப் பலவீனங்கள்

ஒரு சில சந்தர்ப்பங்களில் பொலிஸாரின் பலவீனங்கள் காரணமாக இந்த வழங்கு தாமதமடைந்திருந்ததாகத் தெரிகின்றது. உதாரணமாக, சாட்சியங்கள் பொருத்தமான விதத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றும், குற்றவியல் நடைமுறைக் கோவையின் பிரகாரம் தொகுக்கப்பட்டிருக்கவில்லை என்றும் (வழக்கு இல. B/651/2011 ஆகஸ்ட் 6, 2012) நீதவான் குறிப்பிட்டிருந்தார். அதன் விளைவாக ராஸிக் அவர்களின் மகன், மனைவி மற்றும் CTF அமைப்பின் ஊழியர்கள் ஆகியோரின் வாக்குமூலங்கள் நீதவானின் அறிவுறுத்தல்களையடுத்து கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பதிவு செய்யப்பட்டன.

இதனால், வழக்கு நீடித்துச் செல்லும் ஒரு நிலைமை ஏற்பட்டது.

### நீதி எப்பொழுது நிலைநாட்டப்படும்?

மூன்று வருடங்களுக்கு முன்னர் 2011 நவம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் LLRC அறிக்கை பட்டாணி ராஸிக் அவர்களின் வழக்கு தொடர்பாக கருத்துத் தெரிவிப்பதற்கு பல பந்திகளை ஒதுக்கியிருந்தது. பக்கம் 162 இல் அது முன்வைத்திருக்கும் குறிப்புக்களை இங்கு மீண்டும் குறிப்பிடுவது பயனுள்ளதாக இருக்கும்: (பந்தி 5.31). குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு ஆணைக்குழு விஜயம் செய்த சந்தர்ப்பங்களில், காணாமல்போன நபர்கள் தொடர்பாக பொதுமக்களினால் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட பல கவலைக்குரிய குற்றச்சாட்டுக்களில் புத்தளத்தைச் சேர்ந்த ராஸிக் பட்டாணி என்பவரின் சம்பவம், அந்த வழக்கு தொடர்பாக ஆணைக்குழுவுக்குக் கிடைத்த ஏமாற்றத்துடன் கூடிய அனுபவத்தை கருத்தில் கொண்டு இங்கு குறிப்பிடப்படுகின்றது.

இந்த விடயத்தை ஆணைக்குழுவும் கூட பிரதேசத்தைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு எடுத்து வந்திருந்த நிலையிலும், சட்டத்தை அமுல் செய்யும் தரப்பின் சார்பில் காட்டப்பட்ட மிகவும் கண்டிக்கத்தக்க விதத்திலான அலட்சிய உணர்வை அது சுட்டிக்காட்ட விரும்புகின்றது. ஆணைக்குழு இந்த அறிக்கையை எழுதும் வேளையில், ராஸிக் அவர்களின் உடல் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. உரிய நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் ஒருவேளை அவருடைய உயிரைப் பாதுகாத்துக் கொண்டிருக்க முடியும்.

(பந்தி 5.32, புத்தளம் பிரதேசத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி வழங்குவதில் ஈடுபட்டிருந்த அரச சாரா அமைப்பொன்றின் உத்தியோகத்தரான ராஸிக், சம்பந்தப்பட்ட அரச சாரா அமைப்பு செய்திருந்த ஒரு சில செலவுகள் தொடர்பாக கேள்வி எழுப்பியிருந்த காரணத்தினாலும், அந்த அமைப்பின் பணிப்பாளர்களின் பெயர்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஒரு சில சொத்துக்கள் தொடர்பாக கேள்வி எழுப்பியிருந்த காரணத்தினாலும் அவர் கடத்தப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. நீதிமன்ற உத்தரவையடுத்து, குற்றம்சாட்டப்பட்ட கடத்தல் நபரை கைது செய்வதில் ஒரு தாமதம் ஏற்பட்டிருந்தது ஏன் என பிரதேசத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் வினவப்பட்ட பொழுது, சந்தேக நபர் எங்கிருக்கிறார் என்று பொலிஸாருக்குத் தெரியவில்லை என்றும், அவர் எங்கிருக்கிறார் என்று பொதுமக்கள் அறிந்திருந்தால் அவர்கள் அதனை பொலிஸாருக்குத் தெரிவிக்கலாம் என்றும், அந்த நிலையில், சந்தேக நபரைக் கைதுசெய்ய முடியும் என்றும் பதிலளிக்கப்பட்டது. இது தொடர்பாக சந்தேக நபர் அவருக்கிருந்த அரசியல் தொடர்புகள் காரணமாக கைது செய்யப்படுவதிலிருந்து தப்பித்துக் கொண்டார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது நிரூபிக்கப்படுமிடத்து, அத்தகையதொரு மனப்பாங்கு, குறிப்பாக பொலிஸார் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் இருக்கும் நம்பிக்கையை முழுமையாக இல்லாமல் செய்து விடும் என்பதனையும், சட்டத்தையும் ஒழுங்கையும் பராமரிக்கும் விடயத்தை மேலும் கடினமானதாக்கி விடும் என்பதனையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். மேலும், பொலிஸாரின் தரப்பில் குறைபாடுகள் இடம்பெறுவதற்கு மோசமான அரசியல் தலையீடும் பங்களிப்புச் செய்துள்ளது என்ற விடயம் குறித்து ஆணைக்குழு அதே விதத்தில் கவலை கொண்டுள்ளது.


இந்த விடயம் தொடர்பாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் கருத்துக்கள் தொடர்பாக எவ்வித கவனமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது கவலையளிக்கத்தக்க ஒரு விடயமாகும். இந்த அறிக்கை வெளியிடப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் கூட, நாங்கள் இன்னமும் நீதிக்கு அருகில் செல்ல முடியாதவர்களாக இருந்து வருகிறோம்.

நல்லாட்சியை வழங்குவதாக வாக்குறுதியளித்திருக்கும் புதிய அரசின் கீழ் பட்டாணி ராஸிக் அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் நீதி கிடைக்குமா என்பதனை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**கடத்திச் சென்றவர்களுக்கான செலவுத் தொகையாக ரூ. 20 மில்லியன் செலுத்தப்படுதல் வேண்டும்; குடும்பத்தினர் CTF சொத்துக்கள் தொடர்பான விபரங்களை வழங்குதல் வேண்டும். அறங்காவலர்கள் தமது பெயர்களிலிருக்கும் அனைத்துச் சொத் துக்களையும், முன்னைய அறங்காவலர்களில் ஒருவரான திரு. நிஹ்மத் என்பவரினால் அமைக்கப்பட்ட நுஜூம் டிரஸ்ட் என்ற பெயருக்கு மாற்றுதல் வேண்டும். இக் கோரிக்கைகள், கடத்தல்காரர் (கள்) ராஸிக்கின் நடவடிக்கைகளை, முஷ்தீன் என்ற நபரிலும் பார்க்க அறிந்திருப்பார்கள் என்பதனை எடுத்துக் காட்டுகின்றன.**

# அனர்த்தங்களும் பெண்களும்

**- காயத்திரி.வி**



இன்று சகல துறைகளிலும் பெண்களின் முன்னேற்றம் என்பது பேசு பொருளாகிவிட்டது. கல்வியில், தொழிலில், அரசியலில், சமூக வாழ்வியலில், ஏன் நாட்டின் பொருளாதாரத்தின் பெரும் பங்காற்றலில் பெண்கள் முக்கியம் பெறுகின்றார்கள் என்று கூறினால் கூட எத்தனை வீதமானோர் இன்றும் அடக்கு முறைகளுக்குள்ளும், அடிமைத்தனத்துக்குள்ளும், பொருளாதார இறுக்கு முறைக்குள்ளும் சிக்கித் தவிக்கின்றனர் என்பதை எம்மால் மறந்துவிடவோ அல்லது அதனை மறுத்துவிடவோ கூடாது. இவர்களையும் இவர்களது நடைமுறைச் சிக்கல்களையும் இன்றைய தினத்திலாவது நாம் நினைவுகூராவிடின் சமூக ஆர்வலர்கள் என்று கூறிக்கொள்வதில் எந்தவித பலனுமில்லை. பெரும்பாலான பிரச்சினைகளுக்கு அவர்களின் குடும்பப்பின்னணி, வறுமை.குடும்ப வன்முறை, விவாகரத்து என்று காரணம் கூறினால் கூட எமது நாட்டைப் பொறுத்தவரை தொடர்ந்து நடந்த முப்பது வருட யுத்தத்தால் பட்ட அவதிகள் மட்டுமல்லாது அத்துடன் இலங்கையை மிகவும் அழிவுக்குள் ளாக்கிய சுனாமி அனர்த்தம், தற்போது வந்துபோன பாரிய வெள்ளம், மண்சரிவு என்பவற்றால் முக்கியமாகப் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களும் குழந்தைகளும் என்றால் அது மிகையாகாது.

அனர்த்தங்களானவை ஆண்களைவிட பெண்களையே அதிகம் பாதித்து வருகின்றது என்பது வெளிப்படை. ஆய்வாளர்களதும், அறிக்கைகளினதும் பிரகாரம் பெண்கள், பிரசவத்தாய்மார்கள், பெண் குழந்தைகள், வயதான முதுமையடைந்த பெண்களையே அதிகம் பாதித்து வருகின்றது. காரணம் சமூக அந்தஸ்து, விழுமியங்கள், பெண்களுக்கு சமூகத்திலுள்ள வகிபங்கு, உதாரணமாகத் தாய்மை மட்டுமே ஒரு பெண் தனது வாழ்க்கையில் வகிக்க வேண்டிய பாத்திரம், பெண் நாளாந்தம் வீட்டு வேலைகளில் ஈடுபடுவது, பிள்ளை பராமரிப்பது, சமைப்பது என்பவற்றிலே தான் கவனம் செலுத்த வேண்டும், பெண்கள் அதிகம் கல்வி கற்கக் கூடாது, வேலைக்குச் செல்லக் கூடாது போன்ற விழுமியங்களால் இன்றும் பெண்கள் பாதிக்கப்படுவதுடன் குறிப்பாக வேலைக்குச் செல்லும் அல்லது கல்வியறிவுள்ள பெண்களை விட கல்வியறிவில்லாத, வீட்டிலிருக்கும் பெண்களே அதிகம் பாதிப்புறுவதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இலங்கைச் சனத்தொகை 20,359,439 (2012)ஐ எட்டிய போதிலும் இதில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பெண்களாகவும் இவர்களில் 23 விகிதமானவர்கள் கடந்த காலத்தில் நடந்து முடிந்த பலவிதமான அனர்த்தங்களாலும் குடும்பத்தைச்சுமக்கும் குடும்பத் தலைவியான பணிக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள். இவர்களில் 50 விகிதமானோர் 30 வயதுக்குட்பட்டவர்கள் எனக் கடந்த அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அனேகமான வளர்ந்த, வளர்ந்து வரும் நாடுகளில் மனித காரணங்களைக் காட்டிலும், இயற்கைக் காரணங்களே பெண்களை நிர்க்கதியாக்கி வருகின்றது. ஆனால் எமது நாட்டில் குறிப்பாக தமிழர் பிரதேசத்தில் அதிகளவிலான பெண்களை விதவைகளாகவும், வாழ் வாதாரத்தை இழந்தவர்களாகவும், பொருளாதார ரீதியில் நசுக்குண்டவர்களாகவும், இதைவிட வாய்விட்டே சொல்ல முடியாத சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாகி வருபவர்கள் எனும் பட்டியலில் முன்னணி வகிப்பவர்கள் எம் தமிழ்ப் பெண்கள் என்பது மறுக்க முடியாத விடயம் மட்டுமல்ல கவலைக்கிடமான விடயமும் கூட. தொடர்ந்து நடந்தேறிய முப்பது வருடப்போரினால் பெண்களின் வாழ்வியலில் பல தரப்பட்ட மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. உயிர் அழிவுகள், அங்கவீனங்கள், உடைமைகளின் அழிவுகள், இடம் பெயர்வுகள் என்பன மிக அதிகளவில் இலங்கையில் நடந்திருக்கின்றன. அத்துடன் இயற்கை அனர்த்தம் கூட இவர்களை விட்டு வைக்கவில்லை. சுனாமி அனர்த்தத்தின்போது இலங்கையில் 30,000பேர் கொல்லப் பட்டதுடன்பெரும்பாலும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, முல்லைத்தீவு, மாத்தறை, காலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாகவும் அவர்களில் பெரும்பான்மையினர் பெண்களாகவும் உள்ளனர். காரணம் அன்றைய தினம் காலைவேளையில் அதிகளவான பெண்கள் தமது வீட்டுவேலைகளில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததென்றும் அதனாலேயே அதிகளவிலான பெண்கள் பாதிக்கப்பட்டதாகவும் அறிக்கைகள் கருத்து தெரிவிக்கின்றன. அத்துடன் 15,000 கர்ப்பிணித் தாய்மார்கள் பாதிக்கப்பட்டதுடன் பல்லாயிரக் கணக்கானோர் விதவைகளாகவும், ஒட்டுமொத்த உறவினர்களை இழந்தவர்களாகவும் நிர்க்கதியாக்கப்பட்டனர். அதே போல் அடிக்கடி நிகழும் வெள்ளப்பெருக்குகள், அதைவிட அண்மையில் நடந்து முடிந்த கொஸ்லாந்தா நிலச் சரிவுகூட பெண்களை குறிப்பாகத் தமிழ்ப் பெண்களையே தாக்கியது. அன்றைய தினம்கூட அதிகளவான குடும்பத் தலைவர்கள் தொழிலுக்குச் சென்றதுடன் பிள்ளைகள் பாடசலைக்குச் சென்ற சமயம் நிகழ்ந்தமையால் அதிலும் பாதிக்கப்பட்ட தொகையினர் பெண்களே. இதன் விளைவுகளால் இவர்களின் சாதாரண வாழ்க்கை அசாதாரணமாவிருக்கின்றது.

இலங்கையில் 03 தசாப்த காலமாக தொடர்ந்து நடந்த போரின் காரணமாக விதவையாக்கப்பட்டவர்கள் 100,000க்கும் அதிகம் என்று சொல்லப்படுகிறது. அதில் 90,000 போர் வரையிலுள்ளவர்கள் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கிறார்கள். இதில் எனது குடும்பமும் விதிவிலக்கல்ல.அத்துடன் போரால் அங்கவீனமானவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள். அநாதையாக்கப்பட்ட பெண்குழந்தைகள் பல நூறாகும். உதாரணமாகச் சொல்லப்போனால் கிழக்கு மாகாணத்தின் தலைநகரை அண்டி மட்டும் 14 சிறுவர் நிலையங்கள் இருக்கின்றன அதில் கணிசமான தொகையினர் பெண்களாவர். போரில் பங்கேற்ற பெண்களில் கைதிகளானவர்கள் 2,000 புனர்வாழ்வுத்திட்டங்களின் பின் விடுதலை செய்யப் படுகிறார்கள். சில போராளிகளின் மனைவிமார் இன்னும் தடுப்புக்காவல்களில் வைக்கப் பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் நாளாந்தம் சந்திக்கும் பிரச்சினைகள் சொல்லிடங்கா. பாதுகாப்பின்மை, வறுமை, போசாக்கின்மை, வேலைவாய்ப்பின்மை, தொழில் பெற்றுக்கொள்வதில் பெரும் இடர்பாடு என அடுக்கிக் கொண்டே போகலாம். குறிப்பிட்டுச் சொல்லப்போனால் பெரும்பாலான பெண்கள் கணவனை இழந்த பின்னரே தொழில் செய்ய நிர்ப்பந்திகப்படுகிறார்கள்.. அதுவும் குடும்பச் சூழ்நிலை கருதியே. அவ்வாறு தொழிலுக்காக செல்லுமிடங்களில் தொழில் தருணர்களால் உடல், உளத் தாக்கத்துக்கு ஆளாகின்றனர். கிட்டத்தட்ட 40,000 பெண்கள் தங்களது குடும்பத்துக்காக தாங்களே கூலி வேலை செய்து பிழைத்து வாழ்க்கையை ஒட்டுகின்றனர். இவர்களுக்கென்று கிடைக்கும் நிவாரண நிதிகள் மிகச்சொற்பமே. வடக்கில் 60 விகிதமானவர்களின் வருமானம் 9,000 ரூபாய்க்கும் குறைய இருக்கிறது. வடக்கிலும் கிழக்கிலும் வேலையில்லாத் திண்டாட்டத்தால் பல படித்த பெண்கள் கடைகளிலும் தனியார் நிறுவனங்களிலும் மிகக் குறைந்த சம்பளத்தில் வேலைபார்க்கிறார்கள்.சில இடங்களில் பெண் குழந்தைகள் கூட இதற்கு விதிவிலக்கல்ல.உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புக்காக செல்பவாகளும் சரி தினமும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தே தமது குடும்பத்தை கொண்டுநடத்த வேண்டியிருக்கின்றது.

வெளிநாட்டுக்கு வேலைக்குப் போகும் பெண்களின் நிலை மிகப் பரிதாபமாகவிருக்கிறது. இவர்கள் எதிர்நோக்கும் பல தரப்பட்ட உடல் உள, பாலியல் வன் முறைகள் இல்ங்கைப் பத்திரிகைகளில் அடிக்கடி பேசப்பட்டு வந்தாலும் அந்தச் செய்திகளைப் பார்த்துவிட்டும், இன்னமும் வெளிநாடுகளில் பணிப்பெண்ணாக வேலைபார்க்க ஆயிரக்கணக்கான பெண்கள் முன்வருவதற்கு இவர்களின் வறுமையும், வேலைவாய்ப்பின்மையுமே பிரதான காரணங்களாகவிருக்கின்றது. பணிப் பெணகளாகவிருக்கும் பெண்களை மிருகத்தனமாக அடித்தல், அவர்களின் உடம்பில் ஆணிகளை அடித்து சித்திரவதை செய்தல், அவர்களின்மேல் கொலைக்குற்றம் சுமத்துதல் என்பன மத்திய தரைக்கடல் நாடுகளில் பரவலாக நடக்கின்றன. 2007ஆம் ஆண்டு சவுதி அரேபியாவில் வேலைக்குப்போய் அங்கு கொலைக் குற்றம் சாட்டப்பட்ட றிஷானா நபீக் என்ற இளம் பெண்ணின் நிலை அதற்கு ஒரு உதாரணமாகும். குறிப்பாக வேலையில்லாத் திண்டாட்டத்தால் 1.8 மில்லியன் இலங்கையர் அந்நிய நாடுகளில் பணிபுரிகிறார்கள். இதில் 500,000 பெண்கள் மத்திய தரைக்கடல் நாடுகளில் வேலைக்குப்போகிறார்கள் இவர்களால் 3.5 பில்லியன் டொலர்ஸ் அந்நியச் செலாவணி இலங்கைக்குக் கிடைக்கிறது. ஆனாலும் என்ன பயன்???? வெளிநாடு செல்லும் பெண்களின் துயர்கள் இன்னமும் நீண்ட வண்ணமே இருக்கின்றன. மேலும் வெளிநாடு செல்வோர் 18லிருந்து 40 வயது வரையிருக்கும் தாய்களாக இருப்பதாலும் அவர்கள் தாங்கள் குழந்தைகளை உற்றார், உறவினர் பாதுகாப்பில் விட்டுச்செல்வதாலும் பல தரப்பட்ட உள உடல் நலப் பிரச்சினைகளுக்குக் குழந்தைகள் உள்ளாகிறார்கள். இதனுடன் சேர்த்து இன்னுமொரு விடயத்தையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

வெளிநாடு செல்லும் பெண்களுக்கு நடக்கும் கொடுமைகள் பற்றி 2004-2005 இல் 796 குற்றச்சாட்டுக்கள் வந்தன. அதில் சவுதி அரேபியாவிலிருந்து மட்டும் 40 விகிதமான புகார்கள் வருகின்றன. சிலர் வேலைபார்க்கப் போகுமிடங்களிலிருந்து பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகுவதுமட்டுமல்லாது இலங்கைக்கு வரும்போது அவர்கள் வேலை செய்யும் இடங்களிலுள்ள ஆண்களின் கொடுமைக்குள்ளான துன்பத்தால் கர்ப்பம்

**அனேகமான வளர்ந்து, வளர்ந்துவரும் நாடுகளில் மனித காரணங்களைக் காட்டிலும், இயற்கைக் காரணங்களே பெண்களை நிர்க்கதியாக்கி வருகின்றது. ஆனால் எமது நாட்டில் குறிப்பாக தமிழர் பிரதேசத்தில் அதிளவிலான பெண்களை விதவைகளாகவும், வாழ்வாதாரத்தை இழந்தவர்களாகவும், பொருளாதார ரீதியில் நசுக்குண்டவர்களாகவும், இதைவிட வாய்விட்டே சொல்ல முடியாத சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாகிவருபவர்கள் எனும் பட்டியலில் முன்னணி வகிப்பவர் கள் எம் தமிழ்ப் பெண்கள் என்பது மறுக்க முடியாத விடயம் மட்டு மல்ல கவலைக்கிடமான விடயமும் கூட. தொடர்ந்து நடந் தேறிய முப்பது வருடப் போரினால் பெண்களின் வாழ்வியலில் பல தரப்பட்ட மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. உயிர் அழிவுகள், அங்கவீனங்கள், உடைமைகளின் அழிவுகள், இடம் பெயர்வு கள் என்பன மிக அதிகளவில் இலங்கையில் நடந்திருக் கின்றன.**

# அனர்த்தங்களும் பெண்களும்



அடைந்து குழந்தைகளையும் கொண்டுவருவதால் அவர்கள் இலங்கையிலுள்ள அவர்களின் சமுதாயத்திலிருந்து விலக்கி வைக்கப்படுகிறார்கள். சில வருடங்களுக்கு முன் இப்படிப் பிறந்த 4,000 குழந்தைகளை இலங்கை அரசு இலங்கைப் பிரஜைகளாக ஏற்கவேண்டி வந்தது. இவ்வாறான பிரச்சினைகள் இன்றுவரைக்கும் தொடர்ந்த வண்ணம் உள்ளதுடன் ஆரம்பத்தில் அவ்வாறான பாதிப்புக்களில் இலங்கைச் சிங்களவர், முஸ்லீம்கள், மலையகத்தவர் என்ற நிலையே பன்னெடுங்காலமாக இருந்து வந்தது. ஆனால் நடந்து முடிந்த யுத்தம் தமிழர்களையும் அதில் இணைக்க வைத்துவிட்டது.

தற்போது விலைவாசி அதிகரிப்பதும் குறைவதும் மாறி மாறி நடக்கின்றது என்றாலும் இவர்களின் வாழ்க்கையில் எதுவித முன்னேற்றத்தையும் தரப் போவதில்லை. இவர்களின் அன்றாட வாழ்வே மிகக் கஷ்டமாவிருக்கிறது. பல விதவைகளுக்கு அவர்களின் வாழ்வு தவிகளுக்குக் கொடுக்கப்பட்ட ஆடு,மாடு, கோழிகள் அண்மைய இயற்கை அனர்த்தால் அழிந்துவிட்டன. ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் வெள்ளத்தில் அழிந்துவிட்டன. ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர் நிலம் வெள்ளத்தாலும், வரட்சியாலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. தென்னை மரங்கள் ஒருவித நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. விதவைகளுக்கும், ஏழைகளுக்கும் கட்டிக்கொடுத்த பல வீடுகளை வெள்ளம் பாதித்துவிட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பெண்களின் நிலை படுமோசமாக உள்ளது. அதிலும் வன்னி போன்ற பகுதிகளில் வாழும் பெண்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். பல கிராமங்களில் 80% பெண்களே உள்ளனர். அவர்கள் தங்களது கணவர்களுடன் விவசாயத்திலோ, மீன்பிடி தொழிலிலோ உதவி செய்து வாழ்ந்து வந்தவர்கள்.தற்போது அவர்களுக்கான வாழ்வாதாரம் குறித்து அரசு எந்தத் தனித்துவமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. விவசாய நிலங்கள் இராணுவத்தின் கையில் உள்ளது. அவர்களால் புதிதாக ஏதும் தொழில் தொடங்கி வாழ வழியில்லை. தெற்கில் வாழும் சிங்களப் பெண்ணின் வாழ்வைவிட இவர்களது வாழ்க்கை மோசமானது.வீட்டில் உள்ள பெண் குழந்தைகளை தனியாக விட்டு வேலைக்கு செல்லஇயலாது. இதனால் ஒரு சிலர்தங்கள் நகைகளை அடமானம் வைத்து தங்கள் வாழ்க்கையை நடத்தி

**தொழில் உதவி என்ற பெயரில் வடக்கிலிருந்து பழைய போராளிப் பெண்கள், கணவனை இழந்தவர்கள் தென்பகுதிகளுக்குக் கொண்டு சென்று வேலை கொடுப்பதாகச்சொல்லப்பட்டது. விசாரித்துப் பார்த்தபோது இவர்கள் துணி தைக்கும் ப்றி ட்ரேட் சோன் (Free Trade Zone) பகுதிகளில் வேலைக் கமர்த்தப்படு கிறார்கள் என்று தெரியவந் தது. இந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கு எந்த விதமான தொழிலாளர் பாதுகாப்பும் கிடையாது. மிகவும் மோசமான விதத்தில் வேலைவாங்கப் படுவார்கள். இங்கிருக்கும் நிலையைமாற்றிச் சம்பளத்தைக் கூட்டிப் பெண்களுக்கு உதவி செய்யும் திட்டங்கள் இருப்பதாகச் சொல்லப் பட்டாலும் நடைமுறையில் இருப்பதாகத்தெரிய வில்லை.**

வருகின்றனர். அனேகருக்கு அவ்வாறான வழி ஒன்றுமில்லாமல் அவதிப்படுகின்றனர்.

தொழில் உதவி என்ற பெயரில் வடக்கிலிருந்து பழைய போராளிப் பெண்கள், கணவனை இழந்தவர்கள் தென்பகுதிகளுக்குக் கொண்டு சென்று வேலை கொடுப்பதாகச்சொல்லப்பட்டது. விசாரித்துப் பார்த்தபோது இவர்கள் துணி தைக்கும் ப்றி ட்ரேட் சோன் (Free Trade Zone) பகுதிகளில் வேலைக் கமர்த்தப்படுகிறார்கள் என்று தெரியவந்தது. இந்தத் தொழிற்சாலைகளில் வேலைசெய்பவர்களுக்கு எந்த விதமான தொழிலாளர் பாதுகாப்பும் கிடையாது. மிகவும் மோசமான விதத்தில் வேலைவாங்கப்படுவார்கள். இங்கிருக்கும் நிலையைமாற்றிச் சம்பளத்தைக் கூட்டிப்பெண்களுக்கு உதவி செய்யும் திட்டங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும் நடைமுறையில் இருப்பதாகத்தெரியவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கில் பெண்களது கணவர்கள், தந்தைகள் மற்றும் மகன்கள் காணாமல் போனபோது என்ன நடந்தது என்று கண்டுபிடிக்க எந்த மூல உபாயமும் இன்றித் தவிப்பது ஒருபுற மிருக்க நாளுக்கு நாள் உயிர்ப்பாதுகாப்பு பிரச்சினைகள்.பெண்களுக்கான பாதுகாப்பு, வன்முறைகள் அதிகரிக்கத்த வண்ணமேயுள்ளன. காணாமல் போன உறவினர்கள் குறித்து இடம்பெயர்ந்த பெண்கள் நீதிக்கான முறையீடுகள் செய்ய நீதிமன்றங்கள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்குப் போகமுடியாதவாறு எதிர்ப்பும், துன்புறுத்தல்களும் ஒட்டுக்குழுக்களாலும் மற்றும் ஆயுதப்படைகளாலும் மறைமுகமாக இருந்துவருவதாக அறிக்கைகள், பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றன. உறவினர்களின் இழப்பு குடும்பப் பாத்திரங்களில் கடுமையான மாற்றத்தை ஏற்படுத்தின கூடுதலாக ஆண்கள் இல்லாத குடும்பப் பெண்கள் இராணுவத்தினரின் வன்முறைகளில் சிக்கித்தவிக்கின்றனர்.

இவ்வாறு குடும்ப வறுமையையோ, தங்களது உறவினர்களையோ இழந்த துக்கம் என்பன ஒரு புறமிருக்க அவர்களது பாதுகாப்பற்ற நிலையே அவர்களை வெகுவாக வாட்டி வருகின்றது என்கின்றனர். அண்மையகாலப் புள்ளிவிபரங்களின்படி கடந்த சில வருடங்களாக பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்திருப்பதாகவும் இதிலும் குறிப்பாக இராணுவத்தினா குழுமி இருக்கும் பகுதிகளில் அதிகம் இனங்காணப்படுவதாகவும் அறிக்கைகள் செய்தி வெளியிட்டுள்ளன. பெருமளவான இராணுவத்தின் இருப்புக் காரணமாக இராணுவமயமாக்கப்பட்ட பகுதிகளிலேயே பெண்கள் மிகவும் மோசமான பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றார்கள். விசாரணை எனும் பெயரில் கைதுசெய்யப்படும் பெண்களே இவ்வாறான நிலைக்கு உள்ளாகுகின்றனர். குறிப்பாக 2012இல் யாழ்ப்பாண மருத்துவமனையில் ஒரே மாதத்தில் இளம்பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளான 56 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. சில பெண்கள் கருத்துத் தெரிவிக்கையில் சிங்களவன் கட்டுப்பாட்டில் நாங்கள் இருப்பதால் தான் நாங்கள் அவர்களின் உடமைகள் என எண்ணுகின்றார்கள் போலும் அத்துடன் போரில் ஜெயித்து விட்டமையால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்றும் கருதுகிறார்கள் எனப் பெண்கள், பெண் அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன. சுமார் 400 வரையிலான பலாத்காரங்கள் பதிவாகியுள்ளன. ஆனால் ஒரு இராணுவ வீரர் மீதும் பாலியல் வன்கொடுமையோ அல்லது போரில் மனித உரிமை மீறல் வழக்கோ நடத்தப்படவில்லை. இதனால் பெண்கள் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்புட்டு வருவதுடன் காமக் கொடூரர்கள் வட்டமிடுவதும் நீண்டவண்ணமே உள்ளது. இன்னுமொரு செயல் என்னவெனில் தேர்தல் காலங்களில் பாடசாலை ஆசிரியர்களின் விபரங்களை சேகரித்த படையினர் தற்போது அவ்விலக்கங்களுக்கு அழைப்பு விடுத்து தொடர்பு கொள்வதாகவும் சிங்களத்தில் ஆபாசமாகப் பேசுவதாகவும் பல்வேறு முறைப்பாடுகள் சென்ற ஆண்டுகளில் பதிவாகியுள்ளன. போர் முடிவுற்றது என்றும் இனிமேல் இலங்கையில் எந்தவிதமான போர் நடவடிக்கைகளும் நடைபெறாது என்று ஒருபுறம்அரசு கூறிவந்தாலும் மறுபுறம் பெண்களை அதிலும் குறிப்பாக தமிழ்ப் பெண்களை இராணுவத்தில் இணையுமாறு நிர்ப்பந்தித்து வந்தமையும், சிலர் அதற்கு உள்வாங்கப்பட்டமையும் யாவரும் அறிந்ததே. இதனாலும் பல பெண்கள் உள ரீதியில் வேதனையடைந்துள்ளனர்.

இவ்வாறு அடுக்கிக் கொண்டே செல்லலாம். விதவைப் பெண்கள் சமூக நற்காரியங்களில் இருந்தோ அல்லது சமுதாயத்திலிருந்தோ விலக்கி வைக்கப்படும் நிலைகுறைவடைகின்றது என்று என்னதான் நாம் தம்பட்டம் அடித்தால் கூட சில குடும்பங்களில்இன்னமும் அவர்களுக்கான துன்புறுத்தல்களும், அடக்குமுறைகளும்மறைமுகமாக நடந்துகொண்டேதான் இருக்கின்றன. குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் இத்தகைய பிரச்சினைகளைச் சந்தித்த வண்ணமுள்ளனர். பெரும்பாலான பெண்களோ,ஆண்களோ தம்மைப் பாதுகாக்கவும், கயவர்களிடமிருந்து தப்பிக்கவும் தாம் விரும்பியோ விரும்பாமலோ திருமணம் எனும் பந்தத்தில் இணையவேண்டி ஏற்பட்டதுடன் அவ் வாழ்க்கையில் ஒரு சிலராலேயே நிண்டுபிடிக்க முடிந்தது. அதில் அனேகமானோர்மணம் முடித்த ஒருசில மணித்தியாலங்கள், மாதங்கள் ஆகுமுன்பே விதவை எனும் பட்டத்தை தாங்கவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். காரணம் அனேகர் யுத்தத்தினால் மரணிக்கப்பட்டமையாகும். இதில் ஆண்களும், பெண்களும் விதிவிலக்கல்ல. இருந்தாலும் பெண்கள் தான் சிறுவயதில் விதவை எனும் அங்கியை அணிந்தது மட்டுமல்லாது உடலியல், உளவியல் பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஒருவருடன் உரையாடிய போது அவர் கூறியதாவது தனது தங்கை திருமணமாகி சில காலங்களாகும். கணவன் யுத்த காலத்தில் செல்பட்டு இறந்துவிட்டார். இருந்தும் அதன் பின்னரான காலத்தில் தங்கை தன் கணவன் குடும்பத்துடன் வாழ்ந்து வந்ததாகவும் நாட்கள், காலங்கள் செல்லச் செல்ல அவர்கள் அவளைத் துன்புறுத்தி வந்ததாகவும் இந்த நிலையில் அவளை அவர்களிடமிருந்து மீட்டு விட்டதாகவும் தெரிவித்தார். இப்படி எத்தனை அண்ணன்மார்கள், தாய், தந்தையர் என சுற்றத்தார் ஏங்கித்தவிக்கின்றனரோ யாம் அறியோம்.அத்துடன் போர்க்காலத் தில் புலிகள் இளம் வயதினரைப் பல வந்தமாகக் கடத்திக்கொண்டு போவதற்குப் பயந்து பல பெற்றோர் தங்கள் பெண்களுக்குச்சிறு வயதிலேயே திருமணம் செய்து கொடுத்திருக்கிறார்கள். பல திருமணங்கள் பெண்களின் சம்மதமின்றி நடந்தன. இன்று அப்படித் திருமணம் செய்து வைக்கப்பட்ட பல இளம் பெண்கள் இன்று விவாகரத்துக்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

உடைந்த கட்டிடங்களைத் திருப்பிக் கட்டலாம். இடம் பெயர்ந்தவர்கள் காலக் கிராமத்தில் தங்கள் இடங்களுக்குத் திரும்பிப்போகலாம். ஆனால் கடந்து வந்த பாதையில் பெண்கள் சந்தித்த இழப்புக்களுப்புக்களும் சந்தித்த, சந்தித்து வருகின்ற வலிகளும் என்றுமே யாராலும் மறக்கமுடியாது. இருந்தும் இது அவர்களின் வாழ்வியலில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக பெரும்பான்மையா னோரை ஆளுமை மிக்கவர்களாகவும், சமூகத்தை துணிந்து முகம்கொடுக்கக் கூடியவர்களாகவும் மாற்றிய அதே வேளை அவர்களை வறியவாகளாகவும், வாழ்வாதாரத்தை இழந்தவர்களாகவும் மாற்றியமைத்து வருகின்றது. எனவே இந்த நிலையை மாற்றியமைக்க உரியவர்கள் கவனத்திலெடுக்கும் பட்சத்தில் அவர்களின் பங்கு சமுதாயத்தில் அதிகரிப்பதுடன் நாட்டின் ஒட்டுமொத்த விருத்திக்கும் வழிவகுக்கும்.

# தடை

சிறுகதை

நேற்று வரை எனது நெருங்கிய நண்பராக இருந்த சதாசிவத்தார் அவரது வீட்டின் ஹோல் நடுவே விலையுயர்ந்த பெட்டிக்குள் வைக்கப்பட்டு வெள்ளை நிற நெற்றுணியால் மூடப்பட்டிருந்தார். அவரது தலைமாட்டில் வைக்கப்பட்டிருந்த பெரிய குத்து விளக்கின் திரி சுடர் விட்டுப் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. தகனக் கிரியைகளை மறுநாள் செய்வ தென தீர்மானித்திருந்ததால் வீட்டாரும் இடையிடையே வந்து போகும் ஒரு சிலருமே அங்கு இருந்தனர். இதனால் மரண வீடானாலும் அங்கு அமைதியான ஒரு சூழல் நிலவியது.

"நாளைக்கு 'கொன்வோய்க்கை' ஆப்பிடாமல் நேரத்துக்கு எடுத்துப் போட வேணும்" அந்த அமைதியை சாதகமாகக் கொண்டு நான் அமர்ந்தி ருந்த அவரது மனைவியைப் பார்த்து மெதுவாக ஆனால் மிகுந்த அக்கறையுடன் கூறுகிறேன். அந்த வார்த்தையை அங்கு வந்து போன பலரும் அவளிடம் கூறியிருக்கக் கூடும். அந்த அளவுக்கு குடா நாட்டு மக்கள் தங்கள் நாளாந்த வாழ்வை ஒழுங்கு படுத்தும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக அந்த வார்த்தை அர்த்தப்படுத்தும் 'பாதைத் தடை' அமைந்திருந்தது.

ஒரு பகல் நாளில் இரு தடவை யாழ்.குடாநாட்டின் பிரதான பாதைகள் மக்களின் போக்குவரத்துக்குத் தடைபடுத்தப்படும். அந்த வேளைகளில் அந்த நீண்ட பாதையின் இரு மருங்கும் வீதித் தடைகளுக்கு அப்பால் பாதையைக் கடப்பதற்காக நீண்ட நேரம் மக்கள் காத்திருப்பர். இராணுவ வேலி போல் அமைந்திருக்கும் அந்தப் பாதுகாப்பான பாதைக்கூடாக முன்னணிக் காவலரண்களுக்கான வழங்கல்கள் யாவையும் இராணுவ வாகனத் தொடரணிகளால் எடுத்துச் செல்லப்படும். இதனால் இதனைக் குறிக்கும் 'கொன்வோய்' என்ற ஆங்கிலச் சொல் மக்களிடையே மிகவும் பரிச்சயமான ஒரு சொல்லாக மாறியிருந்தது.

ஆனாலும் அந்த வார்த்தையை எனது நண்பரின் மனைவியிடம் நான் கூறிய போது அந்த வார்த்தைக்கு மற்றவர்கள் கூறியதையும் விட அர்த்தமும் ஆழமும் இருப்பதாக எண்ணினேன். அதற்குக் காரணம் நூல் நிலையம், பொது நிகழ்ச்சிகள் என மறைந்த நண்பரும் நானும் அடிக்கடி வெளியே சென்று வரும் போது அடிக்கடி சொல்லும் 'கொன்வோய்'க்கை ஆப்பிடாமல் போய் விட வேணும்" என்ற அவரது வார்த்தையையும், அவரது விருப்பமும் எனது வார்த்தைகளுக்குள் அடங்கி வெளி வருவதாகவே நான் உணர்ந்தேன். ஒரு நாள் ஒரு இலக்கிய நண்பனின் முப்பதாவது நாள் நினைவஞ்சலிக் கூட்டத்துக்கு இருவரும் செல்லும் பொழுது நாங்கள் இருவரும் "கொன்வோய்"க்குள் அகப்பட்டுக் கொண்டோம். கொதிக்கும் வெயிலுக்குள் தெருவோரமாக ஒதுங்கி நின்ற போது குறித்த நேரத்துக்குச் செல்ல முடியாத அவரது மனக்கொதிப்பு அவரிடமிருந்து வார்த்தையாக வெளிப்பட்டது.

"எங்கடை அப்பர் காலியிலே வேலை பார்க்கேக்க சின்ன வயசில அந்த சிங்களக் கிராமங்களெல்லாம் எவ்வளவு சந்தோசமா கைவீசி நடந்தம்... இண் டைக்கு எங்கட தெருவில போக முடியாமல் நிற்கிறம்... உதுக்காண்டித் தானே பிள்ளையளையும் வெளிநாட்டுக்கு அனுப்பிப் போட்டு தனியக்கிடந்து தவி க் கிறம்"

இப்படி வேதனையடைந்த அவரது உடலையாவது தடைகளின்றி சுதந்திரமாக கொண்டு போய் தகனம் செய்து விட வேண்டும் என்ற அவா எனக்குள் எழுந்திருந்தது. அதனை எனது நண்பனுக்குச் செய்ய வேண்டிய கடைமையாக எண்ணியி ருந்தேன்.

எனது வார்த்தையைக் கேட்டதும் நண்பரின் மனைவி இருக்கையை விட்டெழுந்து அருகே வந்தாள். நான் எழுந்து ஒரு கதிரையை எடுத்துப் போட்டு அமரும் படி கூறினேன்.

"நேரத்தோட எடுக்குறதெண்டா... உங்களுக்குத் தெரியும் தானே அவருக்கு கிரியைகள் சடங்குகளில் நம்பிக்கை இல்லை... நாளைக்கு என்ன மாதிரி இவற்றை கடைமைகளைச் செய்யிறது"

சிவத்தாரின் விருப்புணர்வுகளை நன்கு புரிந்து வைத்திருந்த அவரது மனைவி எப்படி அதனை நடைமுறைப் டுத்துவது என்று முடிவு செய்ய முடியாத நிலையில் மிகவும் அக்கறையுடன் கேட்டாள்.

"கிரியை செய்யிறது எனக்கும் மனதுக்கு சங்கடமாகத் தான் இருக்கு... ஆனால் செய்யாமல் விட உங்கட சொந்தக்காரர் அயலவையள் சம்மதிப்பினமே"

"சங்கு செய்து துடக்கு கழிக்காட்டில் ஒருத்தரும் எங்கட வீட்டிலை செம்பு தண்ணீர் எடுக்காயினம்"

அவர் பெற்ற கல்வி, வாழ்க்கை அனுபவங்கள், தேடல்களால் கண்டடைந்த உண்மைகள், அவருக்குச் சரியென்றுபட்ட வாழ்க்கையை வாழ்வதற்கான சுதந் திரம் தனது கணவனுக்கு மறுக்கப்படுகின்றது என அவளும் நினைத்ததாலோ என்னவோ நெற்றியில் ஒரு கையை வைத்து தலையைக் குனிந்த படி சிறிது நேரம் மௌனமாக அமர்ந்திருந்தாள். அங்கு சிறிது நேர அமைதி நிலவியது.

"ஓ... அவற்ற வாழ்க்கை முடிஞ்சுது... நீங்கள் சுற்றம் அயலோடை சேர்ந்து தானே வாழ வேணும்"

ஆற்றாமையில் எழுந்த ஒரு வேதனைப் பெருமூச்சுடன் அந்த விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன். அறுபத்தைந்தைத் தாண்டி விட்ட அவர் பெரிய இலட்சி வாதியாக இல்லாவிட்டாலும் வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து வாழ விரும்பியவர். கருத்தரங்குகள், இலக்கியக் கூட்டங்களுக்கு தவறாது சென்றாலும் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாத சுபாவம் அவருடையது. அது போலவே ஒடுக்கு முறைகளுக்கு எதிரான ஊர்வலம் போன்ற வெகுஜனப் போராட்டங்களிலும் தவறாது எங்கோ ஒரு வரிசையில் அவரும் நிற்பார். இது தான் சமூகத்தில் அவரைப் புரிந்து கொண்ட என் போன்றவர்கள் மத்தியில் அவரது அடையாளம்.

அவரைப் நெருக்கமாகப் புரிந்து கொண்ட சிலருள் நானும் ஒருவன் என்ற வகையில் அவரது நிலைக்காக மட்டுமல்ல அர்த்தமற்று இறுகிப் போய்க்கிடக்கும் அந்தச் சமூகச் சூழல்கள், தடைகளுக்காகவும் எனது மனம் ஒரு கணம் உள்ளூரக் கொதிப்படைகின்றது. இருவருக்குமிடையே நிலவிய சிறிது மௌனத்தின் பின் அங்கு வந்திருந்த உறவினர்கள், நண்பர்கள் சிலரையும் அழைத்து அடுத்தடுத்த காரியங்களைச் செய்வதற்கான ஒழுங்குகள் யாவற்றையும் பற்றிக் கலந்து பேசப்பட்டது. உடலை மயானத்துக்கு கொண்டு செல்வது பாடையிலா, காரிலா என்பது பற்றி முடிவெடுப்பதில் சிறிது அபிப்பிராயபேதம் ஏற்பட்டது. பழைய ஊர் நினைப்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிவத்தாரின் உறவினர் ஒருவர் ஊர் வழக்கம் பாடை தான் என்று நின்று கொண்டார். அவருக்கு நிலைமையை விளங்க வைத்து சம்மதிக்க வைப்பதற்கு மிகவும் சங்கடப்பட வேண்டியிருந்தது. இறுதியாக அவரது சம்மதத்துடன் அடுத்த நாளுக்கான வேலைகள் யாவும் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

அதன் படி பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுப்பது, பாண்ட் வாத்தியக் கலைஞர்களுக்குச் சொல்வது போன்ற சில வேலைகளை பொறுப்பேற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டேன்.

இரவு ஊரடங்குச் சட்டம் இருந்ததால், மறுநாள் அதிகாலையில் எனது வீட்டு முற்றத்தில் அப்போது தான் மலர்ந்திருந்த அவருக்குப் பிடித்த ரோஜா மலரொன்றைப் பிடுங்கிக் கொண்டு சிவத்தாரின் வீட்டுக்குச் சென்றேன். அவரது உடலை மூடியிருந்த நெற் றை விலக்கி சிவத்தாரின் சட்டை மீது ரோஜா மலரைச் செருகி விட்டு மௌனமாக நின்று எனது அஞ்சலியைச் செலுத்தினேன்.

அவரது மனைவி விரைந்து வந்து சிறிது நேரம் கதறி அழுதார். அவருக்கு ஆறுதல் கூறி விட்டு வெளியே வந்தேன்.



நான் அங்கு சென்ற சிறிது நேரத்திலேயே பாண்ட் வாத்தியக் காரர்களும் வந்து சேர்ந்து விட்டனர். அவர்களுக்கான இடத்தை ஒதுக்கிக் கொடுத்து விட்டு, வரும் வழியில் வாங்கிய போது மேலோட்டமாகப் பார்த்த பத்திரிகையை மீண்டும் விரித்துப் பார்த் தேன். நான் எழுதிக் கொடுத்த விளம்பரம் தான். ஆனாலும் அச்செழுத்தில் படிக்கும் போது இந்த மண்ணில் வாழ்ந்திருந்த அவரது வாழ்வின் பெறுமானத்தை மீறி இங்கிலாந்து, கனடா என்ற பிள்ளைகள் இருவரது வாழ்விடங்கள் தூக்கலாகவே தெரிந்தது. மன தை உறுத்துவது போல இருந்தது. அவரது மூத்த புதல் வனின் பெய ரும் மொட்டையாகவே விடப்பட்டி ருந்தது.

பத்திரிகையில் வழமையாக நாட்டின் பல்வேறு இடங்களில் இடம்பெறும் கிளைமோர், ஆட்கடத்தல், கொலைகள் பற்றிய செய்திகள், தீர்வு பற்றிய ஆலோசனைகள் இடம்பெறத் தவறவில்லை. அவைகளுக்குப் பின்னால் உள்ள அவலங்கள் பற்றிய பிரக்ஞை மக்களிடம் அற்று வருவதாக அடிக்கடி கூறிக் கவலையுற்ற மனிதர் உயிரற்று ஓய்ந்து கிடக்கிறார். அவரது உடலையாவது அவர் விரும்பியது போல அவலமின்றி 'கொன்வேக்குள் அகப்படாமல்' தகனம் செய்து விட வேண்டும் என்ற முடிவுடன் பத்திரி



க.தணிகாசலம்

கைளை மூடி அருகில் இருந்தவரிடம் கொடுத்து விட்டு நான் எழுந்தேன்.

நேரம் விரைவாக நகர்ந்து கொண்டிருந்தது. பாண்ட் வாத்தியக்காரராரின் இசையின் அதிர்வு அந்த இடம் முழுவதையும் ஆக்கிரமித்தது. வரவேண்டிய உறவுக் காரர்கள், அயலவர்கள், நண்பர்கள் எல்லோரும் வந்து விட்டார்கள். கிரியைகளுக்கான இடத்தைத் தெரிந்து சாணகத்தால் பொருள்களையும் அங்கு எடுத்து வைத்து விட்டனர்.

"ஒன்பது மணிக்கு குருவை வரச் சொன்னனான்... பத்தரைக்கு மேலையாகுது. இன்னும் ஐயரைக் காணேல்லை"

"அங்காலை 'றவுண்டப்போ' தெரியாது"

"பதிணொண்டரைக்கு பாதை பூட்டிப் போடுவாங்கள்... அதுக்கிடையிலை ஐயற்ர அலுவல் முடிய வேணும்.

"கிரியை செய்யிறவர் தோஞ்சு றெடியா நிக்கிறார்... நிறைகுடத்துக்கு நூலைச் சுத்தி வைக்கலாம்... அதுக்கும் செம்புகள் அவர் தான் கொண்டு வர வேணுமாம்"

இவை சிவத்தாரின் உடலைப் பாதைத்தடை ஏற்படும் முன் பிரதான வீதியைக் கடந்து மயானத் துக்குக் கொண்டு சென்று விட வேண்டும் என்ற உணர்வில் என்னுடன் சேர்ந்து செயற்பட்ட அவரது உறவினர்களின் குரல்கள்.

"என்பாம் பண்ணின பொடி... கண்ணாடிக்குத் தானே குளிப்பாட்டுறது"

"ஓ... அவங்கள் நல்லா கழுவித் துடைச்சு உடுப்பும் போட்டு வைச்சிருக்கிறாங்கள்... அந்தாளும் உதுகளிலை நம்பிக்கையில்லாத மனிசன்... அவமா னப்படுத்தாமல் கெதியா எடுக்கலாம்"

"ஒரு வழியிலை பார்த்தால் இதுகும் ஒரு மனித உரிமை மீறல்தானே என்ன?

"இல்லை ... மனிசர் உயிரோடை இருக்கேக்கை மீறிறது தான் அது... அது நடந்து கொண்டிருக்கு... இது செத்தாப்பிறகு மீறிறபடியா பிரேத உரிமை மீறல்... இதுக்கும் இனி விசேடமா சட்டம் ஒண்டை ஐ.நா. விலை இயற்றி விட்டால் சரி"

"சோமருக்கு எப்பவும் பகிடி தான்"

"பின்னை என்ன... சிவத்தாற்ரை மெய் தான் பொய்யாகிக் கிடக்கெண்டால்... பொய்தானே மெய் யாகிக் கிடக்குது. உலக... மயமாய்"

"சோமண்ணை இது கூடிப் போச்சு... நீங்கள் பிலோசபிக்கை போறியள்"

வாழ்க்கையிலை தான் அதைப்பற்றி யோசிக்கி றியள் இல்லை... சாவீட்டிலையாதல் அதைப்பற்றி கொஞ்சம் நினைச்சுப் பாருங்கோவன்"

சிவத்தாரின் ஆத்மார்த்த உறவுக்காரர் சிலர் கூடியி ருந்து தமக்குள் உரையாடும் வார்த்தைகள் இவை. தெருப்படலையில் கூடி நின்றவர்களிடையே ஒரு பரபரப்பு.

"ஐயா வாறார்"

"ஐயா வந்திட்டார்"

"என்னையா வீட்டையும் ஆள்வீட்டுப் பாத்தம்"

"ஐயாவுக்கு கதை குடுத்து மினக்கெடுத்தாமால் காரியத் தைப் பாருங்கோ"

பாட்டுக்காரர் இருவரும் குருக்களின் கிரியைக்கான ஏற்பாடுகளில் துணையாக நிற்க கிரியைகள் விரை வாக ஆரம்பமாகின்றன. குருக்களின் மந்திர உச்சரிப் பில் வழமையை விட ஒரு துரித வேகம். பாட்டுக் காரர்களால் மட்டும் இராகத்தைக் குறுக்க முடிய வில்லை. அதனால் கூட்டத்திலிருந்து விமர்சனங்கள் புறுபுறுப்புக் களாக எழுந்தன. சுண்ணப் பாட்டுப் பாடும் போது மட்டும் குருக்களும் சேர்ந்து அதனை மந்திரம் போலச் சொல்லி அவர்களையே வேகப்படுத்தி விடுகி றார்.

விரைவாக கிரியைகளைச் செய்து தூக்குவதற்குத் தயாரான போதும் மணி பதினொன்றரையை அண்மித்து விட்டது. சிவத்தாரின் வீட்டுக்கு சற்று தூரத்திலுள்ள சனசமூக நிலைய இளைஞர்கள் சிலர் அவாப் காப்பாளர்களாக இருந்தமையைக் குறிப்பிட்டு அஞ்சலிப்பிரசுரம் அடித்து விநியோகித்தனர். அவர்களுள் ஒரு இளைஞரை அணுகி பாதை மூடியிருப்பது பற்றி தடை அறிந்து வரும்படி கூறினேன். கால்சட்டைப் பைக்குள் கைவைத்து கான்போனை எடுத்துக் காதுக்குள் வைத்தபடி சிறிது தூரம் நகர்ந்த இளைஞன் "அங்கிள் இப்பதான் மூடுப்படுதாம்" என்றான்.

பிரதான தெருக்கள் சந்திக்கும் நாற்சந்திகளில் மட்டும் வாகன அணியின் வருகையைப் பார்த்து சிறிது நேரமா வது திறந்து மூடும் வழக்கம் இருந்தது. குறுக்குத் தெருக் களால் சென்று பிரதான வீதியைக் கடக்கும் இடங்களில் பாதை வாகன அணிகள் செல்லும் வரை முற்றாக மூடப்பட்டிருந்தது. சிவத்தாரின் உட லை குறுக்குத் தெருவால் தான் எடுத்துச் செல்ல வேண்டி இருந்தது. அங்கு பொறுப்பாக முன்னுக்கு நின்று கடைமைகளை செய்த சிவத்தாரின் உறவினர் ஒருவரை அணுகு கிறேன்.

"பாதை மூடியாச்சாம். இப்ப என்ன செய்யிறது"

"கிரிய முடிஞ்சால் பிரேதத்தை வீட்டிலை வைச்சிருக்கக் கூடாது... முதல் காரிலை தூக்கி ஏத்துங்கோ...பிறகு யோசிப்பம்"

அவர் சொன்ன மரபு ரீதியான நம்பிக்கையையும் மீற முடியாது. அதே வேளை பிரேத ஊர்வலத்தை நடுத் தெருவில் நிறுத்தி அவலப்படவும் முடியாது. அரைக் கிலோமீற்றர் நீளமுமில்லாத பிரதான வீதிக்கான தூரத்தை ஒரு மணித்தியாலயத்துக்கு மேலாகக் கடக்க வேண்டிய நிர்ப்பந்தம் அங்கு உருவாக்கி விட்டது.

பாட்டுக்காரனையும், பாண்ட் வாத்தியக்காரரையும் வைத்துத் தான் நிலைமையை சமாளிக்க வேண்டும் என்பது அங்கு உணரப்பட்டது. பாட்டுக்காரர்களை அணுகி விடயத்தைச் சொன்ன போது தோளில் போர்த் திருந்த காவிச்சால்வையைச் சரி செய்து கொண்டு கவனிச்சால் சரியென்று கையை ஒரு பக்கமாக பிடித்து திருகிக் காட்டி உற்சாகமாகப் பதில் தந்தார்கள். பாண்ட் வாத்தியக்காரர்களில் ஒருவர் தான் பாவிப்பதாகவும் மற்றவர்களுக்கு குளிர்பானம் அளித் தால் போதும் என்றார்கள்.

ஊர்வலம் ஆரம்பமாகியது. பங்குனி மாத வெய்யில் உச்சத்தில் எறித்தது. ஊர்வலத்தில் வந்த பலர் தலைகளை மூடிக் கெள்ள எதையாவது தேடினர்: பாதையின் ஒவ்வொரு திருப்பு முனைகளிலும் நின்று ஊர்வலம் மெதுவா நகர்ந்ததால் மதிலோர மரநிழல்களில் பலர் தஞ்சம் புகுந்தனர். இதனால் பிரேத வண்டியில் அமர்ந்திருந்தவர்களும் பாண்ட் வாத்தியக்காரருமே தெருவில் தனியாக விடப்பட்டனர். பிரேத வண்டியை ஏற்பாடு செய்யாது பாடை கட்டித் தூக்க முயன்றிருந்தால் நடுத்தெருவில் தான் பாடையை கட்டித் தூக்க வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டிருக் கும் என்பதை உணர்ந்தேன்.

மறைவிடம் இல்லாததால் மதிலோரமாகச் சென்று சால்வையால் மறைத்தபடி உசார் ஏற்றி விட்டு வந்த பாடகர்கள் உச்சத் தொனியில் சிறிது நேரம் நிதான மாகப் பாடினர். சிலருக்கு உள்ளே போனால் உசார் வரும் என்பது சரி போல இருந்தது. ஆனால் மீண்டும் உசார் ஏற்றியதன் பின்னர் ஒரேயடியாக சேர்ந்து தள்ளாட ஆரம்பித்து விட்டனர். அந்த நிலையில் அவர் களைத் தொடர்ந்து படாவிட்டால் ,இராகம், பொருள் யாவும் பிசகி நகைப்புக்குள்ளாக்கும் நிலை ஏற்படும் என்பதற்காக அவர்கள் பாடுவதை நிறுத்த முயன்று அவர்களிடம் நான் மாட்டுப்பட்டுக் கொண்டேன்.

"அண்ணை...குடிச்சாலும் எங்கடை ராகம் தப்பாது எந்த இராகத்திலை இப்ப பாட வேண்டும்...ஓ...இது சாவீடெல்லே. முகாரி முகாரி ராகம் பாடவா?

எனது நிலையைப் புரிந்து கொண்டு நிழலுக்காக ஒதுங்கி நின்ற இருவர் உதவ வந்தமையால் நான் பாடகர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டேன். நண்பனின் உடலை ஒழுங்காகக் கொண்டு சென்று ஒழுங்கைப் பேணச் செய்யும் முயற்சி இது. எனது நிலைமையைப் புரிந்து கொண்டு கொளுத்தும் வெயிலுக்குள்ளே நின்று தமது கடைமைகளைச் செய்தமை மனதுக்கு ஆறுதலை அளித்தது.

பிரதான வீதியை பிரேத ஊர்வலம் அண்மித்த போதும் பாதை திறக்கப்படவில்லை. பாண்ட் வாத்தியக்காரர்கள் தமது சக்தியனைத்தையும் ஒன்று திரட்டி வாசிப்பது போல நிலம் அதிர முழங்குகின்றனர்.

நானும் சிவத்தாரும் பாதை பூட்டிய நாள்களில் ஓரத்தில் ஒதுங்கி நின்ற நாள்களும் பேசிய கதைகளும் எனது நினைவில் வந்து போயின. நீண்ட போர்ச்சூழலுக்குள் வாழ்க்கையின் பாதியை நாம் தொலைத்தோம். இளைய சந்ததி இன்னும் எவ்வளவு காலம் இதற்குள் வாழ நிர்ப்பந்திக்கப்படப் போகிறது என்ற ஏக்கம் எப்பொழுதும் அவரிடம் இருந்தது. வாகன அணியின் இறுதித் தொடர் சென்று முடிய பாதை திறக்கப்படுகிறது. பிரதான வீதியைக் கடந்து மயானத்தை அடைந்த போது பிரேத ஊர்வலத்தில் புறப்பட்ட பாதிப்பேருக்கு மேல் காணாமல் போயிருந் தனர்.

நிழல் மரங்கள் அடர்ந்து உயர்ந்து வளர்ந்திருந்த அந்த மயானத்தில் சிவத்தாரின் பூத உடலுக்கு வாய்க்கரிசி இட்டு, கொள்ளிக் குடம் உடைத்து தீ மூட்டப்படுகிறது. அது வரை அமைதியாக பிரேத ஊர்வலத்தில் வந்த தாடி வைத்த ஒருவர் எவரது தூண்டுதலும் இல்லாமலே உணர்வு மேலீட்டால் உரத்த குரலில் மிக இனிமையாக பாடத் தொடங்குகிறார்.

"நாமார்க்கும் குடியல்லோம்" எனத் தொடங்கியவர் "நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி" என்ற சித்தர் பாடலுடன் தனது பாடலை முடிக்கிறார். அது வரை அந்த மயானத்தில் . கூடி நின்றவர்கள் அனைவரும் என்னைப் போலவே அவரது பாடலின் இசையில் கட்டுண்டு அமைதியாக நிற்கின்றனர்.

அந்த மயான மெங்கும் எதிரொலித்த "அகப்பட்டீர் அகப்பட்டீர் அகப்பட்டீர்" என்ற அப்பாடலின் இறுதி வரிகள் எமக்கு முன்னால் உள்ள யுத்தச் சூழலின் கொடு ரங் களை நினைவுறுத்தி மெய்சிலிர்க்க வைத்து சிவத் தாரை இழந்த துயரிலும் தென்பை அளித்து நிற்கிறது.

இவ்வார

# இராசி பலன்

04.03.2015 –10.03.2015

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

சமூக நிகழ்வுகளில் போக்கு உணர்ந்து செயல்படுவீர்கள். பணம், புகழ் திருப்திகர அளவில் கிடைக்கும். வாகன பராமரிப்பு, பயணங்களை எளிதாக உருவாக்கும். புத்திரர், உங்கள் சொல்படி நடந்து நற்பெயர் பெறுவர். உடல் நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத் துணை விரும்பிய பொருட்களை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தியினால் உபரி பண வரவு கிடைக்கும். பணியாளர்கள், பணிகளை திறம்பட நிறைவேற்றுவீர்கள். பெண்களுக்கு, கூடுதல் கவுரவம் கிடைக்கும்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும். வீடு, வாகன வகையில் அபிவிருத்தி பலன் உண்டு. புத்திரர், வார முற்பகுதியில் கவனக் குறைவாகவும், பின் பொறுப்புணர்வுடனும் நடந்து கொள்வர். எதிர்ப்பாளர் வியந்து விலகுகிற நல்ல நிலை ஏற்படும். இல்லறத் துணை உதவிகரமாக நடந்து கொள்வார். தொழிலில் வளர்ச்சி பெற சில மாற்றம் செய்வீர்கள். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும். பெண்கள், அழகு சாதன பொருள் வாங்குவீர்கள். மாணவர்கள், படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

சோதனைகளை கடந்து, வாழ்வில் சில நன்மைகளை பெறுவீர்கள். வாகனத்தில் பராமரிப்பு தேவைப்படும். புத்திரர், அதிருப்தி எண்ணங்களுடன் நடந்து கொள்வர். பணக் கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். இல்லறத் துணையிடம் வீண் விவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் சீராக இயங்கும். பணியாளர்கள், கடமையை உணர்ந்து பணிபுரிவீர்கள். பெண்கள், உறவினர்களின் கருத்தை விமர்சிக்க வேண்டாம். மாணவர்கள், அக்கறையுடன் படிப்பதால், தேர்ச்சி விகிதம் சீராகும்.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர், உங்களிடம் அதிருப்தி எண்ணம் கொள்வர். உடல் நலம் பேணுவதில் உரிய கவனம் வேண்டும். இல்லறத் துணை ஆறுதலாக நடந்து கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள், கடமை உணர்வுடன் செயல்படுவதால் நற்பெயரை பாதுகாக்கலாம். பெண்கள், பணச் செலவில் சிக்கனம் பின்பற்றவும். மாணவர்கள், படிப்பு தவிர பிற விவாதம் பேசக்கூடாது.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

புத்திரர், உங்களிடம் அதிருப்தி எண்ணம் கொள்வர். உடல் நலம் பேணுவதில் உரிய கவனம் வேண்டும். இல்லறத் துணை ஆறுதலாக நடந்து கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள், கடமை உணர்வுடன் செயல்படுவதால் நற்பெயரை பாதுகாக்கலாம். பெண்கள், பணச் செலவில் சிக்கனம் பின்பற்றவும்.

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

அரசு தொடர்பான உதவி கிடைக்கும். புத்திரர், வார பிற்பகுதி நாட்களில் முன்னேற்றகரமான பலன் பெறுவர். இல்லறத் துணை, புரிதல் தன்மை குறைவினால சிரமம் எதிர்கொள்வார். தொழில், வியாபாரம் கூடுதல் உழைப்பினால் திட்டமிட்ட இலக்கை அடையும். பணியாளர்கள், குளறுபடி வராத அளவில் செயல்பட வேண்டும். பெண்கள், பணப் பொறுப்பு ஏற்கக் கூடாது. மாணவர்கள், புதியவர்களை நண்பராக பெறுவர்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபார அபிவிருத்திக்கான பணக்கடன் கிடைக்கும். எதிர்ப்பாளர், சொந்த சிரமங்களால் விலகுவர். புத்திரரின் உடல் நலத்திற்கு, சிறு அளவிலான சிகிச்சை தேவைப்படலாம். இல்லறத் துணையிடம் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட திட்டத்தை மதித்து நடக்கவும். பெண்கள், நம்பகத்தன்மை இல்லாதவரிடம் ரகசியம் சொல்ல வேண்டாம்.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

நயவஞ்சகமாக பேசுபவரிடம் இருந்து விலகுவீர்கள். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு வேண்டும். புத்திரர் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள். இல்லறத் துணை, உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழில், வியாபாரம் படிப்படியாக வளர்ச்சி பெறும். பணியாளர்கள், புதிய தொழில்நுட்பம் அறிவது நல்லது. பெண்கள், தெய்வ வழிபாட்டில் ஆர்வம் கொள்வீர்கள். மாணவர்கள், நண்பரின் குறையை விமர்சிக்க வேண்டாம்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

தொழிலில் அளவான மூலதனம் போதும். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து, நல்வழியில் நடத்துவது நன்மை பெற உதவும். எதிர்ப்பாளரின் கெடு செயல்களை, மாற்று உபாயத்தால் சரி செய்வீர்கள். இல்லறத் துணை கூடுதல் அன்பு, பாசம் கொள்வார். பணியாளர்கள், கருத்து மாறுபட்டவரிடம் பணியிடத்தில் பேச வேண்டாம். மாணவர்கள், பிறர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டாம்.

**மகரம்**

**திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

வாழ்வில் முன்னேற்றம் பெற, இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நிற்கும். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு வேண்டும். புத்திரர் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள். சீரான ஓய்வு, உடல் நலத்தை பாதுகாக்கும். இல்லறத் துணை, உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழில், வியாபாரம் படிப்படியாக வளர்ச்சி பெறும். பணியாளர்கள், புதிய தொழில்நுட்பம் அறிவது நல்லது. பெண்கள், தெய்வ வழிபாட்டில் ஆர்வம் கொள்வீர்கள்.

**கும்பம்**

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

உடன் பிறந்தவர்களின் கூடுதல் அன்பு கிடைக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர், தம் செயலில் உள்ள குளறுபடியை சரி செய்ய, உங்களின் உதவியை நாடுவர். இல்லறத் துணை, ஆறுதல் மனப்பாங்குடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் தாமதகதியில் இயங்கும். இயந்திர பிரிவு பணியாளர்கள், பாதுகாப்பில் கூடுதல் கவனம் வேண்டும். பெண்கள், நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள், அதிக விலையுள்ள பொருட்களை பாதுகாக்கவும்.

**மீனம்**

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

தம்பி, தங்கைக்கு சுபநிகழ்ச்சி நடத்த அனுகூலம் உருவாகும்., தாய்வழி சொந்தங்கள் உதவுவர். புத்திரர் அறிவு, செயல் திறனில் முன்னேற்றம் காண்பர். சீரான ஓய்வு, உடல் நலத்தை பாதுகாக்கும். இல்லறத் துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில் சிறக்க, புதியவர்களின் வருகை துணை நிற்கும். பணியாளர்கள், கடமை உணர்ந்து பணிபுரிவீர்கள். பெண்கள், குடும்ப உறவுகளை பேணிக் காத்திடுவீர்கள்.

# சுதந்திர வேட்கை

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 76

● அடேல் பாலசிங்கம்



இந்தியாவின் உள்நோக்கம் மட்டில் ஆழமான அவநம்பிக்கை பிறந்தது. இந்தியா தன்னை ஒரு பிராந்திய வல்லரசு என்று வரித்துக் கொண்டு தனது கேந்திரா, தேசிய நலன்களுக்கு விடுதலைப்புலிகள் வளைந்து கொடுக்க வேண்டும் என்ற முனைப்பில் புலிகளை அடிபணியச் செய்ய முயன்றது. இருந்தபோதும் இந்தியாவின் இந்த உள்நோக்கங்களை நன்கு புரிந்து கொண்டு, விடுதலைப்புலிகள் தங்கள் தங்கள் நடவடிக்கைகளை இந்தியாவில் தொடர்ந்தார்கள். சிறீலங்காவும் தனது கடும்போக்கைத் தொடர்ந்து கடைப்பிடித்தது. இனப் போராட்டத்துக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு போல காணப்பட வேண்டும் என்ற இந்தியாவின் அபிலாசையை ஆதரிப்பது போல , ஜெயவர்த்தனா ஒரு புறம் பாசாங்கு பண்ணினார். மறுபுறம் தமிழ்த்தாயகத்திலே பாரிய ராணுவத் தாக்குதல் நடவடிக்கைளை மேற்கொள்வதற்காக சிறீலங்காவின் இராணுவக் கட்டமைப்பைப் படிப்படியாக அவர் பலப்படுத்தினார். அதே சமயம் சிறீலங்கா அரச அமைச்சர் ஒருவர் இரகசியமாக திட்டமிட்ட ஒரு கொலைச்சூழ்ச்சி பற்றி நாம் எதுவுமே அறியாதிருந்தோம். பாலசிங்கத்தைப் படுகொலை செய்வதே அந்தச் சூழ்ச்சித் திட்டம். பாலாவின் நடுகடத்தல் கட்டளை இரத்துச் செய்யப்பட்ட மூன்று மாத காலத்தின் பின்,1985 டிசெம்பர் 23இல் பாலாவின் உயிரைப் பறிக்கும் முயற்சி நடைபெற்றது. விபரீத சம்பவங்கள் நிறைந்த ஆண்டின் உச்சமாக இது அமைந்தது. நாம் எதிர்கொள்ளும் குரூர சக்திகள்,தங்கள் ஆற்றா நிலையிலே எத்தகைய கீழ்த்தரத் தன்மையுடன் நடந்து கொள்கின்றன என்பதுபற்றி எமக்குப் பாடம் புகட்டுவதாகவும் இந்தப் படுகொலை முயற்சி அமைந்தது.

### படுகொலை முயற்சி

ஒடுக்குமுறை அரசு ஒன்று, விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடும் கைங்கரியமாக தன்னை எதிர்க்கும் விடுதலைப் இயக்கத் தலை வர்களைப் படுகொலை செய்வது, பொதுவான வழிமுறையாகும். கிளர்ச்சியை முறியடிக்கும் ஒரு தந்திரோபாயமாகவே இது கடைப் பிடிக்கப்படுகின்றது. உலகம் பூராகவும், அரசுகளால் இயலா நிலையில் கடைப்பிடிக்கப்படும் இந்தக் கொடிய அணுகுமுறை பற்றி, பாலாவும் நானும் அடிக்கடி கலந்துரையாடி இருக்கின்றோம். படுகொலை முயற்சி இடம்பெறலாம் என்ற எதிர்பார்ப்போடு மேலும் கூடுதல் விழிப்பாக இராமல் விட்டது எமது முட்டாள் தனமே என்று, இப்போது நினைத்துப் பார்க்கும் போது கூறுவேன். பிரபாகரன் இந்த அச்சுறுத்தலை உணர்ந்தே வாழ்கிறார். ஆயினும் அதைத் தடுக்க, தமது பாதுகாப்பு முறைகளை ஒழுங்காக வகுத்திருக்கிறார். ஆனால், பாலா ஆனால், பாலா தமது ஆபத்தைப் பற்றிக் குறைவாக மதிப்பிட் டிருந்ததாலே என்னவோ, தம்மைக் கொல்ல எவரும் நேரம் செல விட்டுச் சதிபுரிய மாட்டார்கள் என்று கருதியிருந்தார். அப்படி அவர்கள் கொல்வதாக இருந்தால் , போராட்டத்தில் அது எதிர்பார்க்கப்பட வேண்டியதே என்றும் அவர் நியாயம் கற்பிப்பார். தனிப்பட்ட முறையில் அவர் என்றுமே தனது பாதுகாப்பில் அக்கறை செலுத்தாதது , மற்றவர்கள் அதைப்பார்த்துக் கொள்வார்கள் என்று ஒதுக்கி விடுவார்.

(பதிவு தொடரும்)

## மாபெரும் வாகன ஏல விற்பனை

100இற்கும் மேற்பட்ட டீசல் மற்றும்

பெற்றோல் வாகனங்கள்



- கை உழவு இயந்திரங்கள்
- உழவு இயந்திரங்கள்
- டிமோ பட்டா லொறிகள்
- மோட்டார் சைக்கிள்கள்
- ஓட்டோக்கள்

**2015 பெப்ரவரி 25ஆம் திகதி**
**ரயில்நிலைய வீதி, வைரவப்புளியங்குளம்,**
**வவுனியா.**

பரீட்சித்துப் பார்த்தல் 22,23 மற்றும் 24ஆம் திகதிகளில்

**உடனடி அழைப்பு: 011 511 81 81**

லங்கா ஓறிக்ஸ் Fினான்ஸ்

(கி19053)(3.7.8)


---

யாழ் நகரில்

PEARSON | University of Wolverhampton | London South Bank University

edexcel
**HNDs IN...**

- Quantity Surveying
- Civil Engineering
- Biomedical Science
- Business Management
- Computing



சவால்களை வெல்லும்
சர்வதேச கல்வித் தகைமைகள்

Leading to BSc (Hons) / BA (Hons) / B Eng (Hons) from more than 105 Universities in UK, USA, Australia & Canada etc...

- உயர் கல்வித் துறையில் 15 வருட சிறந்த அனுபவத்துடன் இலங்கையின் முதற் தர உயர்கல்வி நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டுள்ள BCAS CAMPUS இன் யாழ் வளாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HND) தொடர்வதற்கான வாய்ப்பு
- மேலுள்ள துறைகளில் HND ஐ நிறைவு செய்யும் மாணவர்கள் இலங்கையில் அல்லது 105 க்கு மேற்பட்ட பிரித்தானிய அமெரிக்க, அவுஸ்ரேலிய மற்றும் கனடா போன்ற நாடுகளின் தலை சிறந்த பல்கலைக்கழகங்களில் தமது பட்டப்படிப்பின் இறுதியாண்டினை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு
- கடந்த 15 வருடங்களில் HND உயர்கல்வி வழிமுறையூடாக (Pathway) சர்வதேச பட்டப்படிப்புகளை பூர்த்தி செய்து இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உயர் தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொண்ட ஆயிரக்கணக்கான மாணவர்களைப் போன்று நீங்களும் வெற்றியாளர் ஆகலாம்.

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.
Tel : 021 221 9910
**Hotline : 077 710 2131**

15 YEARS

www.bcas.lk

Colombo | Mt.Lavinia | Kandy | Batticaloa | Kurunegala | Ampara | Jaffna | Qatar

---

**Panasonic**

நீங்கள் தேர்ந்து எடுக்கும் பற்றரி

**Sure** ஆனதா?

ஜப்பான் தொழில்நுட்பத்துடன் நீண்டகாலம் அதிக சக்தியுடன் கூடிய பற்றரி



Alkaline AAA | Alkaline AA | Alkaline C | Alkaline 9V | NEO AAA | NEO AA | NEO C | NEO 9V | Manganese AA | HI-TOP D | HI-TOP 9V

ரூ.35 தொடக்கம்

ரிச்சார்ஜபிள் பெற்றரி



eneloop AAA | eneloop AA | lite AAA | lite AA | Pro AAA | Pro AA

**3க்கு 1 இலவசம்**

3 பனசோனிக் பன்டோர்ச் பெற்றரிகளை வாங்கி ஒன்றை இலவசமாக பெறுங்கள்

**பனசோனிக் பற்றரி**
முற்றிலும் **Sure**

கலேரியா, சகல சொப்ட்லொஜிக் மெக்ஸ், சொப்ட்லொஜிக் காட்சியறைகள், நாடு பூராகவும் உள்ள, அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள், சுப்பர் மார்கட்கள் மற்றும் சில்லறை வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்களின் சகல பனசோனிக் பற்றரி தேவைப்பாடுகளுக்கும் அழையுங்கள் - 075 902 7028, 077 734 5760, 077 385 0481

அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்

Hotline 011 5 705 705

softlogic BEST IN THE BUSINESS










இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 மார்ச் 4ஆம் திகதி வெளியிடப்பட்டது.